கல்கி

KALKI 10-10-1976 • 75 காசு



ஸிக்மாவால் சுவர்களுக்கும் அறைகளின் உட்கூரைகளுக்கும் பட்டுப்போன்ற வழவழப்பைத் தருகிறது.



டிஸ்ட்ரிபியூட்டர்கள்: M/s. இண்டோகெம் லிமிடெட், ஜமாலி பில்டிங்
52-54, ரத்தன் பஜார், சென்னை - 600 003. போன்: 37602

இணைபிரியாதவை, இணையற்றவை!
தீபாவளியும், கோ-ஆப்டெக்ஸ் துணிவகைகளும்!



தீபாவளிப் பண்டிகை விழாவுடன்
இணைந்ததே கோ-ஆப்டெக்ஸ்.
இந்தத் தீபாவளிக்கு உங்கள்
குடும்பத்தினர் அனைவருக்கும்
உகந்த ஏராளமான துணிவகைகள்
கோ-ஆப்டெக்ஸில்!
இப்பொழுதே சென்றிடுவீர்,
இனிதே வாங்கிடுவீர்!


கோ-ஆப்டெக்ஸில் எத்தனை
எத்தனையோ எழில் வண்ணத்
துணிகள்!

காஞ்சிபுரம், ஆரணி மற்றும்
கும்பகோணம் அசல் பட்டுச்
சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம், மதுரை
கைத்தறி நூல் சேலைகள்,
சுங்கடி பிரிண்டுகள்
மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்,
வேட்டிகள், துவாலைகள்,
லுங்கிகள், அலங்காரத்துணிகள்,
சட்டைத் துணிகள்,
உடுப்புகளுக்கான துணி
வகைகள்.

நீங்களும் — கோ-ஆப்டெக்ஸும் •
உங்கள் குடும்பமும் —
வண்ணத்துப் பூச்சியும் •
தரமேன்மையும் — நியாய
விலைகளும் (கோ-ஆப்டெக்ஸில்) •
பண்டைச் சிறப்பும் —
நவீன நளினமும் •
கோ-ஆப்டெக்ஸும் —
தீபாவளியும்
இணைபிரியாதவையன்றோ!

**தீபாவளி
சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%**

**22–9–76 முதல்
23–10–76 வரை**



தீபாவளி வரையில்
ஞாயிற்றுகிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும்
விற்பனை உண்டு.

யமுனா கோ-ஆப்டெக்ஸ் ஷோரூம் சூப்பர் மார்க்கெட்
ஸ்டுட்டி பில்டிங், 41-42, சைவாலா, பிளாக் L, பேங்க் தெரு, கரோல்பாக், புது தில்லி-5
மற்றும் தில்லியிலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ் அஜந்தா ஹவுஸ், 164, டாக்டர், D.N. ரோடு, பம்பாய்-1
மற்றும் பம்பாயிலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.



புதிய
போர்ன்விடா



மற்றெந்த மால்ட் செறிந்த ஆரோக்கிய உணவுப் பானங்களைவிட, போர்ன்விடாவில் என்றுமே அதிக கோகோ சேர்க்கப்பட்டுள்ளது. இப்பொழுதோ, போர்ன்விடாவில் முன்னைக் காட்டிலும் அதிக போஷாக்கும் அதிக இன்சுவையும் அளித்திட, அதிக கோகோ அடங்கியுள்ளது.

போர்ன்விடாவிலுள்ள கோகோவில், இரத்த அமைப்புக்கு அவசியமான இரும்புச் சத்து நிறைந்துள்ளது மற்றும் வைட்டமின்கள் 'பி' மற்றும் 'டி'யும் கால்ஷியம், பாஸ்பரஸ்.

காட்பரீஸ்
போர்ன்விடா



முன்னைக்காட்டிலும் அதிக கோகோவுடன்.

சோடியம், பொட்டாஷியம் போன்ற விலை மதிப்பற்ற கனிம உப்புகளும் அடங்கியுள்ளன. அவை மட்டுமா? போஷாக்கு தரும் நற்பண்புகள் அடங்கிய, மால்ட், பால் மற்றும் சர்க்கரை போர்ன்விடாவில் மண்டிக் கிடக்கின்றன. ஒரு கப் சூடான பாலில் இரண்டு ஸ்பூன் போர்ன்விடா கலந்து, இன்சுவையுள்ள போஷாக்கைப் பருகுங்கள்.

உங்கள் செல்வங்களுக்கு தினமும் இருவேளை போர்ன்விடா வழங்குங்கள். அவர்களுடைய உடல் சீராக வளரத் தேவையான, அசாதாரண போஷாக்கைத் தந்து உதவுகிறது அது. ஏன், அவர்களுடன் ஈடுகொடுக்க, உங்களுக்கும் அது தேவை.

75 பைசா மிச்சம்

போர்ன்விடா 450 கிராம் ரீ:பில் பேக் வாங்கி, 75 பைசா மிச்சப்படுத்துங்கள்! இந்தப் பேக்கைத் திறந்தவுடனே, வழக்கமான போர்ன்விடா டின்னில் அதை நிரப்பி, புதுமை கெடாமல் பாதுகாருங்கள்.



அதிகப்படியான கோகோ, அதிகப்படியான வலிமை; அதிகப்படியான இன்சுவை

OBM 6714 TM


தேர்ந்தெடுங்கள் இதோ, புதுமையாக மலரும்
கோலாகல டிசைன்களின் வரிசை.
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்
'டெரீன்'


ஓடோமாஸ் மட்டுமே உங்களுக்குக் கொசுக் கடியிலிருந்து 2-விதங்களில் பாதுகாப்பை அளிக்கிறது.

நீங்கள் இரவில் நிம்மதியாக உறங்க உதவுகிறது.

இதர கொசு விரட்டியைப் போலல்லாது
ஓடோமாஸ் உங்களைப் பாதுகாக்கிறது.

1 

அதன் வாசனை கொசுக்களை விரட்டி அடிக்கிறது.

2 

அதன் ஒப்பற்ற கலவைப்பொருள் உங்கள் சருமத்தை இரவு முழுவதும் கொசுக்களிலிருந்து கவசமபோல் காக்கிறது.

இன்று இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் கொசு விரட்டி ஓடோமாஸ் என்பதில் விந்தை எதுவுமில்லை.

உடனே
ஓடோமாஸ்
உபயோகியுங்கள்.

இல்லையேல்
கொசுக்கள் உங்களுக்கு சொல்ல முடியாத தொல்லையைத் தரும்.



சிறு குழந்தைகளின் மென்மையான மேனிக்கு முற்றிலும் பத்திரமானது

மச்சர் கா துஷ்மன்

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்
BALSARA

CHAITRA.BLS.86.TAM


"லக்ஷ்மி, நீ பாலியெஸ்டர் கலவைகளின்
ரிகக் கவர்ச்சி... லக்ஷ்மி, கிளர்ச்சியூட்டும்
நிறங்கள், அடக்கமான கோடுகள், கட்டங்கள்,
இழைச் சேர்க்கைகள் இவற்றின் மூலம் என்னை
பிரமிக்கச்செய்கிறாய்.
லக்ஷ்மி— நீ உண்மையிலேயே தெய்வீகமானவள்."
கோல்ட் கிரௌன்: ® 67% பாலியெஸ்டர்/33% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்
புவராஜ்: 80% பாலியெஸ்டர்/20% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்
பாலிகிரௌன்: 67% பாலியெஸ்டர்/33% விஸ்கோஸ் இணைந்த ஷர்ட்டிங்.
மாசில்லா அன்பு
அதுவே நீடிக்கும்
அன்பு
Lovable
Lakshmi
® ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்
தி லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயமுத்தூர் 641 037.

SAA/LM/1888 R

ஸிங்கர்* அளிப்பவை சிறந்த பொருட்களே

ஸிங்கர்* ஆயில் பன்முகப் பாதுகாப்புள்ளது.

தையல் மெஷின்களைத் தயாரிப்பதில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவங் கொண்ட கம்பெனி, உங்கள் **ஸிங்கர்*** நம்பிக்கைக்குப் பாத்திரமானது. **ஸிங்கர்*** சர்வதேச தரத்திற்கொப்ப தயாரிக்கப்படும் தரமான பொருட்களையே உங்களுக்கு அளிக்கிறது.

மெரிட்* தையல் மெஷின்கள்,
ஸிங்கர்* பல பயனுள்ள ஆயில்,
ஸிங்கர்* ஊசிகள்.
ஆகவே இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள இல்லத்தரசிகள், மணிக்கணக்கில் தைக்கும் மகிழ்ச்சியைப் பெற ஸிங்கரையே நாடுகிறார்கள் என்பதில் எள்ளளவும் வியப்பில்லை.



அசல் **ஸிங்கர்*** ஊசிகள் **ஸிங்கர்*** சின்னமுள்ளவை.

ஸிங்கர்* அளிப்பவை சிறந்த பொருட்களே

* தி ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட்மார்க்.

maa-SSM-46 TAM

அபூர்வ மருந்து...
அறுவை சிகிச்சை இன்றியே
மூலத்தைச் சுருக்க உதவுகிறது!

நமைச்சலை நிறுத்துகிறது-நிமிடங்களில் வலியைப் போக்குகிறது!

நியூயார்க் : இப்பொழுது விஞ்ஞானத்துறை ஒரு புதிய மருந்தைக் கண்டு பிடித்துள்ளது. பெரும்பான்மையான மூல நோயை அறுவை சிகிச்சை இன்றியே சுருக்க உதவுகிறது "இந்த அபூர்வ மருந்து. டாக்டர்கள் நடத்திய, பரிசோதனைகளின் நிரூபணம் இது! மூல நோயால் ஏற்படும் வலியும் நமைச்சலும் நீங்கி, அதிவிரைவில் மூலம் சுருங்கி குணமேற்பட்டிருக்கிறது. மூல நோயால் 10, 20 ஆண்டுகள் துன்புற்றோர் கூட, "மூல நோய் என்னும் பிரச்சினை முடிந்து விட்டது" என்று கூறுகிறார்கள்.

இத்தன்னிகரற்ற மருந்தான பிரிபரேஷன் எச்* களிம்பு, மூலத்தைச் சுருக்க உதவுவதோடு, நமைச்சலை நீக்கி வலியைத் தணிக்கிறது; மலப் போக்கின் போது வலியைக் குறைத்து எளிதாக்குகிறது.

பிரிபரேஷன் எச், இடும் குழாயுடன், 50 கிராம் அல்லது 30 கிராம் ட்யூபுகளை உங்கள் மருந்து வியாபாரியிடமிருந்து வாங்குங்கள்.

மூல நோய் பற்றிய விளக்கப் புத்தகமொன்றை இலவசமாகப் பெற, (25 பைசா தபால் தலையுடன்) எழுதுக இன்றே இம் முகவரிக்கு : டிபார்ட்மெண்ட் PH-66 த. பெ. எண் 10133, பம்பாய் 400 001

*Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd. 744 PH-82 Tam

---

ஃபாஸ்ஃபோமின்

குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ ஃபாஸ்ஃபோமின்



உங்கள் வாழ்வு
இன்ப மயம்—
ஆரோக்கியம்
இருக்கையில்
என்ன பயம்!

SARABHAI CHEMICALS LTD.

Shilpi SC-2A/76 tam



ப்ரஷ் அளவு
வண்ணம் கொண்டு
கைக்கெட்டும் அளவு
பூசலாம்.
புதிய
அப்கோலைட் சூப்பர்அக்ரிலிக் எமல்ஷன்
அழகிய இல்லங்களுக்கு அருமையான பாதுகாப்பு
• மேம்பட்டான திறன்:
மேற்புறத்தில் உள்ள கறைகளை
முழுவதும் மறைத்து விடுகிறது.
• உயர்வான தரம்: 50க்கும்
மேற்பட்ட பரிசோதனைகளில்
உறுதி செய்யப்பட்டது
• சீரான கவசம்: ஒரே சீரான
மாட் :பினிஷுக்குச் சிறந்தது.
Apcolite
Apcolite
அப்கோலைட் சிந்தெடிக் எனாமல்,
மரம் மற்றும் உலோகப் பரப்பு
களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்
பளிக்க, மிக அதிக விற்பனை
யாகும் எனாமல்
CMAP-6-183 tam
ஏஷியன் பெயிண்ட்ஸ்


பாம்பே டையிங்
அணிந்த ஆடவன்
கண்ணாடியில்
காணும் பிரதிபிம்பம்
ஆயினும் வியப்பூட்டும்
ஆனந்தம்!
பாம்பே டையிங் வழங்கும்
ஆடவர் அணிகள்,
பாலியெஸ்டர்/காட்டன் ஷர்ட்டிங்கு-
களின் ஒப்பற்ற உயர் தரம் 50/50,
67/33, 80/20 மற்றும்
நூற்றுக்கு நூறு பாலியெஸ்டர்
பிரிண்டுகள், பாலியெஸ்டர்
டெனிம்கள் மற்றும்
டெக்ஸ்சரைஸ்ட்
ஸூட்டிங்குகள்.
U. BDM-29-76 Tam
கபித்தான் பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள் வாட்ரீன் பாலியெஸ்டர் ஸூட்டிங்குகள்


பாம்பே டையிங்

எந்த நேரத்திலும்

காட்பரிஸ்

க்ரிஸ்ப்

உண்டு மகிழ உகந்தது


காட்பரிஸ் மில்க் சாக்கலேட் க்ரிஸ்ப் இணையற்றது. அதன் மணத்திலும் சுவையிலும் மனதைப் பறிகொடுக்காதார் யார்? என்றும் எங்கும் தின்று மகிழுங்கள். அதன் மொறுமொறுப்பை மிகவும் விரும்புவீர்.



மொறுமொறுப்பானது, தின்றிட எளிது!
சட்டென தின்றிட, சுவையோ இனிது!



C-25 TAM R II





கல்கி

நள ஆண்டு புரட்டாசி 24
அக்டோபர் 10 1976

இரண்டு இரயில் என்ஜின்கள் ஒவ்வொன்றும் மூன்று பெட்டிகள் விதம் இணைக்கப்பட்டு எதிரெதிரே நிற்கின்றன. இரண்டும் ஒன்றையொன்று கடந்து எதிர் திசைகளில் தமது பயணத்தைத் தொடர வேண்டும். ஆனால் அருகில் உள்ள லூப் லைனில் இன்ஜினையும் சேர்த்து மூன்று பெட்டிகள் மட்டுமே நிற்க முடியும். எவ்வாறு இரண்டு ரயில்களும் ஒன்றையொன்று கடந்து செல்கின்றன?

- ஆர். பங்கஜம் ராகவன்

இதோ விடை!

விடை: வலது பக்கத்தில் உள்ள இன்ஜின் முதலில் இரண்டு பெட்டிகளுடன் லூப்-லைனில் சென்று நின்றுகொள்ளும். உடனே இடது பக்கத்தில் உள்ள இன்ஜின் தனது மூன்று பெட்டிகளுடன் வலதுபுறம் தனித்து விடப்படும் ஒற்றைப் பெட்டியுடன் வந்து சேர்ந்துகொள்ளும். இப்போது லூப்-லைனில் இரண்டு பெட்டிகளுடன் உள்ள என்ஜின் மெயின் லைனுக்கு வந்துவிடும். அதன் பின் வலதுபுறம் உள்ள என்ஜின் பின்புறம் நகர்ந்து வந்து அந்த ஒற்றைப் பெட்டியை லூப் லைனுக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டு மீண்டும் மெயின் லைனுக்கு வந்து தனது பயணத்தை எவ்விதத் தடங்கலுமின்றித் தொடரலாம். அந்தச் சமயத்தில் இரண்டு பெட்டிகளுடன் உள்ள என்ஜின் லூப்-லைனில் விடப்பட்ட மீதமுள்ள தனது ஒற்றைப் பெட்டியைப் பின்புறமாகவே வந்து, இணைத்துக் கொண்டு, தனது பயணத்தைத் தொடரலாம்.

மூளைக்கு 'புதிர்'



ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணாப் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு. சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி– ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்–FALOV-6-140 TM [R]

சாசனம் பற்றிச் சிந்திப்போம்—I

அக்டோபர் இருபத்தைந்தாம் தேதி முதல் நாடாளு மன்றத்தின் விசேஷக் கூட்டம் அரசியல் சாசன நாற்பத்தி நாலாவது மாறுதல் மசோதாவை விவாதிக்க விருக்கிறது. நாடாளு மன்றம் மட்டுமின்றி நாடு தழுவிய அளவில் இது பற்றிய விவாதங்கள் நடக்கட்டும் என்று பிரதமரே கூறியிருக்கிறார். அறிஞர் திரு கே. சந்தானம் அவர்களின் கருத்துக்கள் சிலவற்றைக் கீழே தருகிறோம். சுயராஜ்யாவில் அவர் எழுதி உள்ளதன் சாராம்சம்.

நாற்பத்தி நாலாவது மாறுதல் மசோதாவின்படி வழி காட்டும் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிந்த நிலையில் தான் இனி மக்களின் அடிப்படை உரிமைகள் இயங்க வேண்டும். இந்த வழி காட்டும் கொள்கைகள், அதாவது Directive Principles, தேசிய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அநேகமாகப் படர்ந்து பரவி இருப்பதால் மக்களின் அடிப்படை உரிமைகள் ஏறத்தாழப் பறிக்கப்பட்ட நிலைக்கு வந்து விடும். இதைவிட, மக்களின் அடிப்படை உரிமைகளை வடிவமைத்துத் தரும் சாசனத்தின் மூன்றாம் பாகம் முழுமையையும் ரத்து செய்துவிட்டு, அவற்றையும் வழி காட்டும் கொள்கைகளாகவே சேர்த்துவிடலாம். இப்படிச் செய்தால் வழி காட்டும் கொள்கைகளுக்கு அனுசரணையாகச் சட்டங்கள் இயற்றும் போதெல்லாம், கூடவே அச்சட்டங்கள் அடிப்படை உரிமைகளைப் பாதிக்காமல் இருக்குமா என்று பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

31D என்ற எண்ணுள்ள ஒரு புதிய அம்சத்தை அரசியல் சாசனத்தில் புகுத்தப் போகிறார்கள். இதன் வீச்சு மிகவும் பரவலாக இருக்கிறது. ஆளும் கட்சிக்குப் பிடிக்காத எந்த நடவடிக்கைக்கும் தடை விதிக்க அரசுக்கு அதிகாரம் உருவாகிறது. உதாரணமாக, அமைதியான முறையில் சிலரை மதம் மாறச் செய்ய ஓர் இயக்கம் நடந்தால் அல்லது இத்தகைய மத மாற்றங்களைத் தடுக்க ஒரு சாத்துவீக இயக்கம் நடந்தால் அது பாரதத்தின் ஐக்கியபாவத்துக்கு ஆபத்து விளைவிப்பதாகக் கருதப்படலாம். அப்படியே எந்த ஒரு தொழிலாளர் பிரச்னையும் வேலை நிறுத்த யோசனையும் உள்நாட்டுக் கலவரமாகக் கருதப்படலாம். ஏறத்தாழ நிரந்தரமாக நெருக்கடி நிலைப் பிரகடனம் நீடிப்பது போன்ற சூழல் உருவாகிவிடும்.

மற்றுமொரு மாறுதல், குடியரசுத் தலைவர் எப்படி இயங்க வேண்டும் என்று கூறுகிறது. பிரதமர் தலைமையில் அமைந்த அமைச்சர் குழுவின் ஆலோசனையை ஏற்று அதன்படியே குடியரசுத் தலைவர் நடக்க வேண்டும் என்கிறது. 'ஆலோசனையை ஏற்று' என்றால் என்ன, எழுதித் தருமாறு கேட்பாரா அல்லது பிரதமரின் வாய்மொழி யோசனையுடன் திருப்தி அடைவாரா? அமைச்சர் குழுவில் கருத்து வேறுபாடு இருப்பின் குடியரசுத் தலைவர் பெரும்பான்மையினர் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்பாரா? ஒரு சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி தேர்தலில் தோற்று விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அமைச்சரவை ராஜிநாமா சமர்ப்பிக்க மறுத்தால் குடியரசுத் தலைவரின் நிலை என்ன? அப்போதும் அந்த அமைச்சர் குழுவின் ஆலோசனையைத்தான் ஏற்பாரா?

எம். பி., எம். எல். ஏ.க்களின் பதவிக் காலம் இனி ஐந்தாண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாகும் என்கிறது 44வது மாறுதல் மசோதா. இது வசதிமிக்கதாகவும் சிக்கனநடவடிக்கையாகவும் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது தோன்றக் கூடும். ஆனால் வேண்டாத விளைவுகளும் ஏற்படும். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் தொகுதி மக்களுடன் கொண்டிருக்கும் தொடர்பு குறைந்து, துண்டித்தே போகலாம். கட்சி மாறுவது அதிகரிக்கும். ஒழுக்கமும் பொறுப்புணர்வும் குறையும். ஓய்வுக் கால ஊதியத்துக்கும் இப்போது ஏற்பாடு செய்யப்படுவதால் ஒரு தடவைக்கு மேல் தேர்தலில் நிற்கப் பலரும் விரும்பமாட்டார்கள். இளம் திறமைசாலிகள் முன்னுக்கு

கல்கி

மலர் 36
இதழ் 11

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

வருதல் தாமதமாகும். பார்க்கப் போனால் இப்போதுள்ள ஐந்தாண்டுக் காலமே அதிகம் தான்.

ராஜ்ய சபை, லோக சபை அங்கத்தினர்களின் உரிமைகள், அதிகாரங்கள், பாதுகாப்புக்கள் ஆகியன அந்த அந்த நாடாளுமன்ற அங்கத்தினர்கள் அவ்வப்போது உருவாக்கிக் கொள்வதற்கு ஏற்ப அ...மையும் என்பது 44வது மாறுதலின் ஓர் அம்சம். ராஜ்ய சபை அங்கத்தினருக்குத் தனி அதிகாரங்களும் சலுகைகளும், லோக சபை அங்கத்தினருக்குத் தனி அதிகாரங்களும் சலுகைகளும் என்று உருவாவது நல்லதல்ல. இரு நாடாளுமன்றங்களையும் சேர்ந்த கூட்டுக் கமிட்டி உரிமைகள், அதிகாரங்கள், பாதுகாப்புக்களை உருவாக்குதல் வேண்டும்.

எண்பது காணும் பண்பாளர்

விடுதலைப் போரிலும், பின்னர் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பிலும் தீவிரமான பங்கு கொண்ட திரு எம். பக்தவத்ஸலம் ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் பொது வாழ்வில் இருந்து வந்துள்ளார். முதிர்ந்த அனுபவமும் பழுத்த ஞானமும் கொண்ட அவருக்கு அக்டோபர் 9ந் தேதியன்று எண்பதாவது பிறந்த தினம்.

ஒரு தேசியவாதி என்ற நிலையிலிருந்து திரு பக்தவத்ஸலம் தம் வாழ்வில் ஒரு முறை கூட ப் பிறழ்ந்தது கிடையாது. மாநில சுயாட்சியா, வகுப்புவாதமா, மது அரக்கனை மீண்டும் கொணரும் நடவடிக்கையா, திராவிடர் கழகத்துடன் காங்கிரஸின் உறவா- இப்படித் தேசியத்துக்கு எதிரான எந்த விஷயத்தையும் அவர் உடனுக்குடன் ஆணித்தரமாக எதிர்த்து வந்திருக்கிறார்.

அவர் முதலமைச்சராக இருந்தபோது காங்கிரசுக்கும், திராவிடர் கழகத்துக்கும் இடையே 'உறவு' நிலவியது. ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் திரு பக்தவத்ஸலம் அந்த உறவைக் கடுமையாகக் கண்டித்தார்.

1923—ம் வருடத்தில் காகிநாடாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் அவர் முதன் முதலாகக் கலந்து கொண்டார். அன்று முதல் அவர் காங்கிரஸ்காரராகவே இருந்து வருகிறார். ''விவேகானந்தரின் நூல்கள், குடும்பத்துப் பெரியவர்களின் பொது வாழ்வுப் பின்னணி, காந்திஜியின் போதனைகள் ஆகியவையே என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தன. இறுதி நாள்வரையில் தேசத் தொண்டில் தொடர்ந்து ஈடுபட விரும்புகிறேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமான சில தலைவர்களில் திரு பக்தவத்ஸலம் ஒருவர். அநேகமாக அவர் பொறுப்பு வகிக்காத துறைகளே இல்லை எனலாம். *"I have always found him correct in his conduct of Public affairs"* என்று 1972ல் ராஜாஜி திரு பக்தவத்ஸலத்தைப் பற்றி எழுதினார். இதைவிட வேறு புகழாரம் வேண்டுமா?



அப்பழுக்கற்ற ஒழுக்கமான வாழ்க்கை, கடும் உழைப்பு, எளிமையான நடத்தை, ஆரவாரமற்ற போக்கு ஆகியவற்றுக்கு இலக்கணம் வகுப்பதாக அவரது வாழ்க்கை அமைந்துவிட்டது. உரக்கப் பேச மாட்டார்; ஆனால் எஃகுபோன்ற மனஉறுதி படைத்தவர்.


திரு பக்தவத்ஸலத்துக்கும், தி.மு.க. தலைவர்களுக்கும் இடையே நிலவிய ''தொடர்பு'' சுவையானது. தி.மு.க. அரசினர் திரு பக்தவத்ஸலம் மீது வழக்கு போட்டு, அவரைக் கோர்ட் ஏற வைத்தார்கள். வேறு பல சில்லறைத் தொல்லைகள் கொடுத்தார்கள்.


இவ்வளவுக்கும் பிறகு காவிரி நீர் பிரச்னை கடுமையாக உருவெடுத்தபோது தமது சக மந்திரிகளை திரு பக்தவத்ஸலத்திடம் அனுப்பி ஆலோசனை கேட்டார் திரு கருணாநிதி. அவர்களை இன்முகத்துடன் வரவேற்று ஆலோசனை கூறி அனுப்பினார் திரு பக்தவத்ஸலம்.

1967ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, ''தமிழ் நாட்டில் விஷக் கிருமிகள் பரவின'' என்று திரு பக்தவத்ஸலம் சொன்னார். அவரது அந்த வாசகம் எவ்வளவு தீர்க்கதரிசனமானது என்பதை இன்று தினசரி நாளேடுகளில் வரும் செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன.

திரு பக்தவத்ஸலத்தின் 80வது பிறந்த நாளைச் சிறிய முறையில் கொண்டாடுவதற்காக திரு சி. ஆர். பட்டாபிராமன் தலைமையில் கட்சிச் சார்பற்ற ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. 9–10–76 அன்று காலை முதல் இரவு வரையில் விரிவான நிகழ்ச்சிகள், கவியரங்கம், புத்தக வெளியீடு, பொதுக்கூட்டம் என்று நடக்கவிருக்கின்றன. மயிலாப்பூர் ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு அனைவரும் வர வேண்டும் என்று செயலாளர் திரு கருப்பையா அழைக்கின்றார்.

முதிர்ந்த வயதிலும் ஓய்வு தேடாமல் தேசத் தொண்டு புரிந்து வரும் திரு பக்தவத்ஸலம் அவர்களை உளமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.


ஃபராக்கா பிரச்சினையிலே பிரதமர் ரொம்ப சிரமப்படுறாங்களே! .. நம்ம அர்ஸ் கிட்ட பிரச்சினையை தள்ளிட்டா... அவருக்குத் தான் இது தண்ணிப்பட்ட பாடாச்சே!
அர்ஸ்
வாழ்க பாரதி!
பாரதி வாழ்க!
பிரம்மாவைப் பற்றி நன்றாச் சொல்லி இருக்கு! .. அதுலேருந்து நீ நிறைய தெரிஞ்சுக்கணும்!
புராணம்
முரசொலியில் 'கோயபலிருந்தான் கதையை உடன் பிறப்புக்குக் கூறி இருக்கிறார் கருணாநிதி!



அருள்மிகு

மீனாட்சி சுந்தரேசுவரர்

திருக்கோயில்

மதுரை - 625 001

ஒரு முக்கிய வேண்டுகோள்

பொதுமக்கள், ஆஸ்திக அன்பர்கள் ஆகியோரின் விருப்பத்திற்கிணங்க

அருள்மிகு மீனாட்சியம்மனுக்கு

ஒரு தங்க ரதம்

செய்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது

மெய்யன்பர்கள் தங்கள் அன்புக் காணிக்கைகளைத் தங்கமாகவோ அல்லது ரொக்கமாகவோ இதற்கெனத் தனியாக அம்மன் சன்னதி நுழைவு வாசலில் வைக்கப் பட்டிருக்கும் உண்டியலில் செலுத்தி அம்மனின் அருளுக்குப் பாத்திரர்களாகும்படி கோரப்படுகிறார்கள். நன்கொடையினை வங்கி காசோலை மூலமாகவும் (அல்லது) மணியார்டர் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம்.


நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அதிகாரி,

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை-625 001

R. திருவேங்கட சுவாமி

உதவி ஆணையர், நிர்வாக அதிகாரி



நான் சொன்ன அநேக பரோபகாரப் பணிகளுக்குப் பணம் வேண்டும். உழைப்பு வேண்டும். அதோடு மத சம்பந்தமான விஷயம் தெரிந்தவர்கள் வேண்டும். அவர்கள் இதை மற்றவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பஜனை பண்ணத் தெரிந்தவர்கள் மற்றவர்களையும் கூட்டி, பகவந் நாமாவைப் பாடப் பண்ண வேண்டும்.

இப்போது ஊருக்கு ஊர், பேட்டைக்குப் பேட்டை பஜனைக் கோஷ்டி இருக்கிறது. இந்தக் கோஷ்டிக்காரர்களே வார வழிபாட்டையும், மற்ற பரோபகார காரியங்களையும் எடுத்து நடத்த வேண்டும். சிரத்தையாக உழைக்கக் கூடியவர்கள், பண விஷயத்தில் நாணயமாக இருக்கக்கூடியவர்கள் — இவர்கள் 'இப்படிச் சுத்தமானவர்கள் என்று சமூகத்துக்கு நம்பகமாக இருக்கிறவர்கள் — ஒரு பத்துப் பேர் அங்கங்கே சேர்ந்துவிட்டால் போதும். ஊர், உலகத்தில் ஒரு குறைவில்லாமல் பொதுநலக் காரியங்கள் எல்லாம் ஜாம் ஜாம் என்று நடந்துவிடும்.

இந்தப் பணியில் சேர்கிறவர்கள், இப்பணியால் பயனடைகிறவர்கள் (beneficiaries) இரண்டிலும் 'ஜாதி' என்ற அம்சமே இருக்கக் கூடாது. பணக்காரன் — ஏழை, படித்தவன்— படிக்காதவன் எல்லோரும் சேர்வது போல் இது ஒன்றிலாவது நேராகவோ, மறைமுகமாகவோ 'கம்யூனல் ரெப்ரஸெண்டேஷன்' (ஜாதிவாரிப் பிரதிநிதித்வம்) இல்லாமல் காரியம் நடக்க வேண்டும்.

ஜாதிகளையெல்லாம் ஒன்றாக்க வேண்டும் என்று ஆரம்பித்தால்தான் சண்டை ஜாஸ்தியாகிறது. ஆரியன் — திராவிடன் பேதமில்லை என்று சொல்லி செளஜன்யத்தை உண்டாக்க வேண்டும் என்று நல்லெண்ணத்தோடு ஆரம்பித்தால்கூட உடனே இதற்கு ஹிஸ்டாரிகலாக (சரித்திர பூர்வமாக) எத்னலாஜிகலாக (இன—இயல் ரீதியில்) ஆட்சேபணைகள் வந்து ஒரே வாதச் சண்டையாகிறது. ஆனதால் வாதத்தால் ஒற்றுமையை ஸ்தாபிக்க யத்தனம் செய்யாமல், ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறோம் என்றுகூட இல்லாமல், இப்படிப் பல பொதுக் காரியங்களை எடுத்துப் போட்டுக் கொண்டு எல்லாரும் சேர்ந்து அவற்றைச் செய்தாலே தன்னால் ஒற்றுமையும் அன்பும் செளஜன்யமும் உண்டாகிவிடும்.

சங்கமாகச் செய்வதோடு தனித் தனியாக அவரவரால் முடிந்த உபகாரங்களைச் செய்ய வேண்டும். ரிடையர் ஆனவர்களுக்கு நாள் முழுக்க ஓய்வு இருப்பதால் தாங்களும் ஸத் விஷயங்களை நிறையத் தெரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லலாம்.

பெண்களும் பகலில் ஒழிவு இருக்கிறபோது சேர்ந்து நல்ல மத நூல்களைப் படித்துப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கலாம். மடம், கோயில் மாதிரியானவற்றுக்கு சுத்தமான மஞ்சள் குங்குமம் பண்ணிக் கொடுக்கலாம். ஸ்வாமிதீபத்துக்கு அகத்திலேயே சுத்தமாக வெண்ணெய் காய்ச்சி, பசும் நெய் எடுத்துத் தரலாம். முனை முறியாத அக்ஷதைகள் பொறுக்கி அனுப்பி வைக்கலாம். ''அக்ஷதை' என்றாலே ''முறியாதது'' என்று அர்த்தம். ஆனால் இப்போது மந்திராக்ஷதை என்று போடுவதில் பாதி நொய் மாதிரி தூளாகத் தானே இருக்கிறது? மந்திராக்ஷதை முழுசாக இருந்தால்தான் அதனால் மங்களம் கிடைக்கும். எங்கிருந்தோ 'டின்'னில் அடைத்து வருகிற நெய்யில் ஏதாவது கொழுப்புக் கலந்திருந்தால், அதை ஸ்வாமிதீபத்துக்குப் போடும்போது உத்தேசித்த க்ஷேமம் உண்டாகாமலே போய்விடும். நான் கேள்விப் பட்டிருக்கிறேன்: முன்பெல்லாம் யாராவது ஒரு ஹோமம், யக்ஞம் என்று செய்தால் விரோதிகள் அதை நிஷ்பலனாக்குவதற்கு ஒரு தந்திரம் பண்ணுவார்களாம். அதாவது ஹோமம் பண்ணுகிறவனிடம் ரொம்பவும் ஸ்நேகம் வந்து விட்டது போல் நடிப்பார்களாம். 'ஹோமத்துக்கு நாங்கள் நெய் கைங்கரியம் செய்கிறோம்' என்று சொல்லிக் கொண்டு, நெய்யில் கொஞ்சம் பன்றிக் கொழுப்பைக் கலந்து கொடுத்து விடுவார்களாம். அவ்வளவுதான். இந்த மாதிரி அசுத்த நெய்யினால் ஹோமம் பண்ணினால் பண்ணுகிறவர்களுக்கு நல்ல பலன் கிடைக்காமல் போய்விடும் என்பதோடு, விபரீத பலன்தான் உண்டாகும். பிற்பாடு அந்த விரோதிகளைப் பகவான் தண்டிப்பான் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இதை எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் ஹோமம் அல்லது ஸ்வாமிதீபத்துக்கான நெய், மந்திராக்ஷதை, குங்குமம் முதலியன சுத்தமாக இருக்க வேண்டும். இவற்றில் கடைச் சரக்குகளை நம்புவதைவிடப் பெண்கள் சேர்ந்து கைங்கரியமாகச் செய்தால் சிலாக்கியமாக இருக்கும்.

மற்ற ஸோஷல் சர்வீஸ்களை விட தெய்வ சம்பந்தமான, மத சம்பந்தமான இப்படிப்

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

பட்ட பணிகளைப் பெண்கள் முக்கியமாகச் செய்யலாம்.

பட்டுப் புடவை, வைரம், இன்னும் வேறு 'தாம் தூம்' செலவுகள் இல்லாமலிருப்பதற்கு ஸ்திரீகள் ஒரு பிரதிக்ஞை பண்ணிக் கொண்டால் அதுவே பெரிய உபகாரமாகும். பட்டுத் துணி வேண்டாம் என்று வைப்பதால், லக்ஷக் கணக்கான பட்டுப் பூச்சிகளைச் சாகாமல் காப்பாற்றிய புண்ணியம் கிடைக்கும். அதோடு 'இருக்கிறவர்'கள் இப்படிச் செலவு செய்வதைப் பார்த்து 'இல்லாதவர்'களுக்கும் ஆசை உண்டாகிறது. கடன், கஸ்தி வாங்கியாவது ஆசையைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். இந்த ஆடம்பரங்கள் போய், காப்பிக்குப் பதில் மோர்க் கஞ்சி சாப்பிடுவது என்றாகி விட்டால் எல்லாக் குடும்பத்திலும் பாதிச் செலவு மிஞ்சும். கடன் வாங்கிக் குடித்தனம் செய்பவர்கள் கடன் வாங்காமல் காலம் தள்ளலாம். 'இருக்கிறவர்'களும் இதற்கெல்லாம் ஆகிற செலவைப் பரோபகாரத்துக்குப் பயனுக்கலாம்.

"தனக்கு மிஞ்சித் தர்மம்" என்பதற்கு நான் இப்படித்தான் புது வியாக்கியானம் செய்கிறேன்: தனக்கு எது உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமோ, எதெல்லாம் இல்லாவிட்டால் உயிர்வாழ முடியாதோ, அந்த *bare necessities*—க்கு அதிகமாக எவரும் வைத்துக் கொள்ளாவிட்டால்தான் "தனக்கு மிஞ்சி"க் கையில் தர்மத்துக்குப் பணமே இருக்கும். முடிவில்லாமல் தனக்கென்று ஆடம்பர போக்கியங்களை 'லக்ஷுரி'களைப் பெருக்கிக் கொண்டே போய்விட்டு, "தனக்கு மிஞ்சித் தர்மம் பண்ண எதுவுமே இல்லை" என்றால் அது நியாயமில்லை. ஆனதால், தனக்கென்று எவ்வளவு குறைவாகச் செல வழிக்க முடியுமோ, அப்படி எளிமையாக வாழ்ந்து, மிச்சம் பிடித்து, அதைத் தர்மத்துக்குச் செலவழிப்பதுதான் "தனக்கு மிஞ்சித் தர்மம்". இப்போது சர்க்காரே கடன் வாங்குவதாக ஆகிவிட்டிருக்கிறது. அதே வழியில் வேண்டாத வஸ்துக்களை யெல்லாம் ஜனங்களும் அத்தியாவசியமாக்கிக் கொண்டுவிட்டால் எல்லாரும் கடனாளியாக வேண்டியதுதான். கடன் வாங்காமலிருப்பதே பெரிய உபகாரம். ஏனென்றால் நாம் கடன் வாங்கிச் செலவழிக்கிறபோது நாம் தர்மம் பண்ணவில்லை என்பதோடு மற்றவர்களையும் கடன் வாங்கி டாம்பீகம் செய்யும்படி தூண்டுகிறோம். பிறத்தியாருக்குச் சாத்தியமில்லாத ஆசைகளைக் கிளப்பி விடுகிற விதத்தில் எவரொருத்தரும் டாம்பீகமாக வாழ்கிறதுதான் பெரிய சமூகத் துரோகமான காரியம். அநாதியான நம் சாஸ்திரங்களிலிருந்து நேற்று காந்தி வரையில் சொல்லி வந்த எளிய வாழ்க்கையை (*simple living*) வசதியுள்ளவர்களும் மேற்கொண்டால் எந்தக் கம்யூனிஸமும், வர்க்கப் போராட்டங்களும் வரவே வராது. எளிய வாழ்க்கையால் இவன் நிறைய மிச்சம் பிடித்துத் தர்மமும் பரோபகாரமும் செய்வது ஒரு பக்கம்; இதைவிட முக்கியமாக, மற்றவர்களுக்கு ஆசை, அசூயை, கடன் இவை ஏற்படாமல் செய்கிறானே, இதுதான் பெரிய உபகாரம்.

(தொடரும்)

ராசி வண்ண விழா

கண்கவர் வண்ணங்கள்
கருத்தை அள்ளும் டிசைன்கள்



ராதா சில்க் எம்போரியம்
சந்நிதித் தெரு, மயிலாப்பூர்
சென்னை-600 004

ராதா சில்க்ஸ்
'தன் பில்டிங்ஸ்'
மவுண்ட் ரோடு,
சென்னை-600 002

EP-RASI-126

29, கோவிந்த மஹல், 66-B, மரைன் டிரைவ், பம்பாய்-400 002

தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை உண்டு



அழகு மிளிரும் டம்ளர் பாக் மீண்டும் கிடைக்கிறது



50 கிராம்
நெஸ்கஃபே இந்த
டயமண்ட் கிளாஸ்
டம்ளரில்.

உலகிலேயே
மிக அதிகமாக
விற்பனையாகும்
இன்ஸ்டன்ட் காபி

நெஸ்கஃபே®

HHCM-45-76 TAM

மனம் கவரும் மாங்காடு

'சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ?'

சாக்ஷாத் பரமேசுவரனின் விழிகளையும் ஆன்றோர்கள் இப்படித்தானே வருணிக்கிறார்கள்? அன்னை பராசக்திக்கு, அவரது இரு கண்களையும் மூடிப் பார்த்தால் எப்படி இருக்கும் என்று ஓர் எண்ணம் எழவே, வேடிக்கையாகத் தன் மென்கரங்களால் அவரது இரு விழிகளையும் பொத்தினாள். அகிலமே இருண்டு விட்டது.

அந்த வேடிக்கையில் தம்மை மறந்த முக்கண்ணன் மூன்றாவது கண்ணைத் திறந்துவிட்டார்! அனல் கக்கும் விழி அல்லவா அது! உலகம் அதில் வெந்து தீய்ந்தது. அப்புறம் தான் சிவபெருமானுக்கு 'என்ன காரியம் செய்து விட்டோம்?' என்று தோன்றியிருக்கிறது.

'குளுமையின் உறைவிடமான ஹைமவதி கண்களைப் பொத்தியதனால்தானே இப்படி நடந்தது?' என்று எண்ணியவர் பழியை அவள் மீது சுமத்தி, ''என்னைப் பிரிந்து வாழ்ந்து அந்தப் பிரிவுத் தீயில் நீ வாடுவாயாக!'' என்று சாபம் இட்டிருக்கிறார்.

அந்தச் சாபம் அன்னை பார்வதியை மட்டும் தாக்கவில்லை; சாபம் கொடுத்த அவரையுமே தாக்கியது. அன்னை பராசக்தியைப் பிரிந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தை அவருக்குமே உண்டுபண்ணியது. தாம்பத்திய விளையாட்டை ஒரு விளையாட்டாக நினைப்பது போக, மூன்றாவது கண்ணைத் திறந்தது அவர் தவறுதானே?

இருந்தாலும் பெண்ணாக, அடக்கமாக, ''இப்படி ஒரு சாபம் கொடுத்து விட்டீர்களே, இதற்கு எப்படி விமோசனம்?'' என்று கேட்டிருக்கிறாள் அன்னை.

கணத்தில் கடிந்து கணத்தில் மகிழும் சிவபெருமான் கூறினார்: ''குளுமையான தருவுக் கடியிலே, பிரிவுத் துயரால் வாடும் நீ என்னை அடையத் தவம் இயற்ற வேண்டும். உன் அந்தத் தவத்தால் நாம் மகிழ்ந்தால், நாமே உன்னை வந்து அடைவோம்!''

ஆணின் ஆணவத்தோடு பொடி வைத்துப் பேசிவிட்டதாகப் பரமேசுவரன் இறுமாந்து நிற்க, 'என் பிரிவுத் துயரால் இவரை வாட்டாமல் விட்டால், என் தவத்தீயால் இவரைத் துடிதுடிக்க வைக்காவிட்டால் என்னைச் சக்தி என்று கூறிக் கொள்ள எனக்கு ஏது உரிமை?' என்று எண்ணினாள் அன்னை பராசக்தி. அடுத்த கணமே அவள் உள்ளத்தில் ஒரு திட்டம் வித்தென விழுந்தது. அந்த வித்து வெடித்து, முளைத்து, கிளைத்து, செழித்து, தழைத்துக் கனி தரு விருக்ஷமாகவே அவள் மகிழ்ந்து போனாள்.

தன் கடைக்கண் பார்வையினால் பக்தர்களுக்கு வேண்டிய வரம் அருளி மகிழும் காமாட்சியாகப் புறப்பட்ட அவளைப் பூத்துக் குலுங்கும் குளிர்ச்சி தரும் தருவொன்று தடுத்து நிறுத்தியது. நற்கனி தரும் அந்த மாமரத்தின் அடியிலே, அவள் தவமியற்ற நினைத்ததை நினைத்துப் பார்த்த அந்த மாமரம், ஒரு நொடியில் தன்னைச் சுற்றி ஒரு மாங்காட்டையே படைத்துக் கொண்டு விட்டது.

தவத்திருக் கோலத்தில் அன்னை காமாட்சி அங்கு தவமியற்றவே, அந்த ஊருக்கு இன்னும் மாங்காடு என்ற பெயர் நிலைத்திருக்கிறது, நல்ல தமிழ்ப் பெயராக.

சென்னையிலிருந்து பேரூர்தியில் ஒரு மணி ஓட்டம் கொண்ட இந்த மாங்காடு, 'ஆம்ராரண்யம், சூதவனம்' என்ற சம்ஸ்கிருதப் பெயர்களையும் சூட்டிக் கொண்டு, இரு மொழி



களும் அன்று இணைந்து வளர்த்த பெருமையைப் இன்றும் பாருக்கு எடுத்து ஓதிக் கொண்டிருக்கிறது.

பஞ்சாட்சரனை ஐந்தவித்தாளே அடைய அன்னை காமாட்சி மாவடியில் தவம் மேற்கொண்ட முறைதான் எத்தனை சிரமசாத்தியமானது!

பஞ்சாக்னி என்று கூறப்படும் ஐந்து தீ வளர்த்து, நடுவில் நாக்கை நீட்டிக் கொண்டு உயர்ந்தெழும் தீக்கங்கில், தனது இடது கால் பெரு விரலை ஊன்றி, வலது காலை மடித்து, வயிற்றுப் பகுதியில் இடது கரத்தைச் சின் முத்திரையாகப் பதித்து, வலது கரத்தில் ஜபமாலை ஏந்தித் தலை முடிக்கு மேலாக வைத்துக் கொண்டு கண் மூடித் தவமியற்றும் தபஸ் காமாட்சியைக் காணக் கண் கோடி பற்றாது.

ரா. வீழிநாதன்



ஓர் ஊரில் அலி என்ற எண்ணெய்க் கடைக்காரன் இருந்தான். ஒரு நாள் அவன் மாலிக் என்னும் நீதிபதியிடம் வந்து, ''ஐயா, தங்களிடம் ஒரு வழக்கைக் கூற வந்துள்ளேன். இதோ இருக்கிறாரே இவர் என்னுடைய பணத்தைத் திருடிக் கொண்டார். நான் எண்ணெய் விற்றுக்கொண்டு இருந்தபோது என் அருகில் இவர் ஒருவர்தான் இருந்தார். ஆனால் இவரோ நான் எடுக்கவில்லை என்று மறுக்கிறார். தயவுசெய்து நீதி வழங்கும்படி கோருகிறேன்'' என்றான்.

''நான் என்ன செய்ய முடியும்? அந்தப் பணத்தில் நீ உன் பெயரையா எழுதி வைத்திருந்தாய்? அவர் பணம், உன் பணம் எல்லாமே ஒரே மாதிரித்தானே இருக்கும். எனவே, அது யாருடையது என்று எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்றார் நீதிபதி.

அவ்வூரில் மிகவும் வயதான மூதறிஞர் ஒருவர் இருந்தார். அவர் அச்சமயத்தில் அங்கு வந்தார். அவர் இவ்வழக்கைக் கேட்டார். பிறகு ஒரு பாத்திரத்தில் வெந்நீர் கொண்டு வரும்படி கூறினார்.

வெந்நீரில் இவர் என்ன செய்யப் போகிறார் என்று கிராமத்தார் வியந்தனர்.

வெந்நீர் கொண்டு வரப்பட்டது. அந்த மூதறிஞர் குற்றம் சாட்டப்பட்டவனிடமிருந்து பணத்தை வெந்நீரில் போட்டார். உடனே வெந்நீரின் மேல் பரப்பில் எண்ணெய்த் திவலைகள் மிதந்தன. அதைக் காட்டிய கிழவர், ''நீதிபதி அவர்களே! இங்கே வெந்நீரில் மிதக்கும் எண்ணெய்ப் படலத்தைப் பாருங்கள். எனவே இந்தப்பணம் எண்ணெய்க் கடைக்காரனுக்குத்தான் சொந்தமானது'' என்றார்.

-ருஷ்யக் கதை

தாம் கொடுத்த சாபம் பிரிவுத் தீயாகி இப்படித் தம்மையே வதைக்கக்கூடும் என்பதை அநுபவத்தால் உணர்ந்த சிவபெருமானால் அப்புறம் அங்கே தங்க முடியவில்லை; தபஸ் காமாட்சியைத் தேடிக் கொண்டு மாங்காட்டுக்கே வந்து ஊருக்கு மேற்கில் கோயில் கொண்டுள்ளார். அன்னை காமாட்சியின் தவத்தைக் கலைக்கும் துணிவு அவருக்கு உண்டாகவில்லை. குற்றமுள்ள நெஞ்சல்லவா? அவளாகக் கண் திறந்து பார்க்கும் பொழுது பார்க்கட்டும், போதும் என்று அவளுக்காக இன்னும் தவம் கிடக்கிறார்.

பிருகு முனிவரின் புதல்வரான சுக்ராசாரியாருக்குத் தமது வழிபடு தெய்வமான சிவபெருமானைப் பிரிந்திருக்கப் பொறுமை இல்லை. எனவே, தேடிக் கொண்டு மாங்காட்டுக்கு வந்து விட்டார். எனவேதான் இக்கோயிலில் உறையும் சிவபெருமானுக்கு 'வெள்ளீசுவரர், சுக்கிரேசுவரர், பார்க்கவேசுவரர்' என்று மூன்று பெயர்கள் வழங்கிவருகின்றன. எழில்மிகு சாளக்கிராம வடிவம்.

பின்னோடு வந்த மூத்த பிள்ளையின் கையிலே மோதகத்தைக் காணோம்; மாங்கனி காட்சி தருகிறது. அந்த மாங்கனி நாரதர் கொண்டு வந்து தந்ததா அல்லது மாங்காட்டில் விளைந்ததா என்பதை அந்த விநாயகப் பெருமானே அறிவார். அன்னையின் தவத்தைக் காண வந்த இரண்டாவது பிள்ளையும் இரு மனைவியருடன் ஒரு பீடத்தில் காட்சி தருகிறார்.

காமாட்சி கோயிலின் வட கிழக்கிலே வைகுண்டப் பெருமான் உட்கார்ந்த திருக்கோலத்தில் ஸ்ரீதேவி-பூதேவியுடன் கோயில் கொண்டுள்ளார். 'காமாட்சியின் தவம் எப்பொழுது முடியுமோ? எவ்வளவு நேரம்தான் கால் கடுக்க நிற்பது?' என்று உட்கார்ந்திருந்தாலும், இவர் கையிலே ஒரு மோதிரம் தயாராக இருக்கிறது! காமாட்சி கடைக்கண் பார்வை திறந்து திருக் கல்யாணம் செய்து கொள்ளும்பொழுது பரிசுப் பொருளுக்காக அலைய வேண்டாம் அல்லவா? எனவேதான் போலும், இந்த முன்னேற்பாடு!

இத்தகைய தல வரலாற்றுப் பெருமை கொண்ட இந்த ஊரிலே கனிவும் குளுமையுமே உருவான ஆதிசங்கரர் ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டை செய்து வழிபட்டிருக்கிறார்.


கூர்மாசனத்தில் அர்த்த மேருவில் ஸ்ரீசக்ரம் தேவியின் உறைவிடமாகக் காட்சி தருகிறது. அஷ்டகந்தம் என்னும் எட்டு மூலிகைகள் சாத்தப்பட்ட இந்த மேருவே இங்கு மூலஸ்தானம். இதற்கு அபிஷேகம் இல்லை ஆதலால், பஞ்ச லோகத்தினால் ஆன அற்புத சிலா வடிவமாக ஆதி பராசக்தி காமாட்சி அருள் பாலிக்கிறாள். திருக் கல்யாணத்துக்குத் தயாராக நிற்கும் கன்னி உருவம். மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது; அத்தனை அழகு!

சுருங்கக் கூறப் போனால் மாங்காடு, மகா வித்தை பயிலும் தேவி உபாசகர்களுக்கு உகந்த இடம். மிகப் புராதனமான தபஸ் காமாட்சி ஆலயத்தையும் ஸ்ரீவைகுண்டநாதர் ஆலயத்தையும் திருப்பணி செய்து பழமையைப் பாதுகாக்கவும், புதுமையைப் போற்றவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இத்திருப்பணி விஷயத்தில் புதுமையிலும் புதுமை என்னவென்றால் ஸ்ரீமதி சௌந்தரா கைலாசத்தைப் பொறுப்பாளராகக் கொண்டு செயற்படும் குழு உறுப்பினர் ஒன்பது பேரும் பெண்மணிகள். சைவ-வைஷ்ணவ ஒருமைப்பாட்டுக்கு ஓருருவம் கொடுத்து இரு ஆலயங்களுக்கும் செவ்வனே திருப்பணி நடைபெற வேண்டும் என்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரிய ஸ்வாமிகள் அருளாணையிட்டிருக்கிறார்கள். இத்தெய்வத் திருப்பணிக்கு நிதி பெருக, உதவ முன் வருபவர்கள், செக்கோ, மணியார்டரோ, பணமோ எது தருவதாக இருந்தாலும், **ஸ்ரீ காமாட்சி அம்மன், ஸ்ரீ வைகுண்டநாதர் திருப்பணிக் குழு, மாங்காடு** என்று **இந்தியன் பாங்க், ராயப்பேட்டை கிளை, சென்னை–600014ல்** கணக்கில் கட்டிவிடலாம்.

பிறந்த 3ம் மாதம் தொடங்கும் முதல் திட உணவு குழந்தையின் வருங்கால வாழ்வையே தீர்மானிக்கத் தக்கது.

பால் மட்டும் கொடுத்தால் போதாது என்கிறார்கள் டாக்டர்கள்



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

விரைவான முழு வளர்ச்சிக்கான
சரிவிகிதச் சத்து நிரவிய திட உணவு



பச்சிளம் தேகமும் மூளையும் வேகமாக வளரத் துடிப்பவை. அதற்கு ஈடுகொடுக்கப் பால் மட்டும் போதுமானதாகாது. தாய்ப்பாலிலிருந்து கெட்டி உணவுக்கு மாறவேண்டும்—மூன்றும் மாதமே: மென்றுதின்னப் பழக்குங்கள்... மேன்மையான வளர்ச்சிக்குத் திறவுகோலாக உதவும் திட உணவு ஃபாரெக்ஸ் ஒன்றுதான்—பச்சிளம் ஜீரண உறுப்புகளுக்கு உகந்தது.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்; காரணம்,
தாய்ப் பால் விடுக்கும் தலையாய மாதங்களில் பாப்பாவின் பத்துவித வளர்ச்சிகளுக்கும் நிறைவுதரும் **ஒப்பற்ற சரிவிகிதச் சத்துணவு இதுவே.**

இரத்தச் செழிப்புக்கும் தெம்புக்கும் நல்லுசிதமான அளவுக்கு (இதுபோன்ற வேறெந்தத் திட உணவிலும் அமையாத அளவுக்கு) இரும்புச் சத்து; எலும்புக்கு உறுதியும், பல்லுக்குப் பலமும் தரும் கால்ஷியம், வைட்டமின் D2; மூளையும் உடலும் விரைந்து வளர உகந்த புரத சத்துக்கள்; வளரும் உடம்புக்குத் தேவையான சக்தி—இவ்வளவும் அடங்கியது ஃபாரெக்ஸ்; எனவே... பாலூட்டும் பழக்கத்தை மாற்றுவதற்கான வேறு எந்த திட உணவையும் விட அதிகமாக அதிகத் தாய்மார்கள் ஆதரிப்பது ஃபாரெக்ஸ். பழங்கள், காய்கறிகள், பருப்பு, இறைச்சி, முட்டை போன்ற எந்த முக்கிய உணவுடனும் கலந்து கொடுக்க இனிமையானது ஃபாரெக்ஸ். மென்றுதின்னப் பழக்க...கூடிய விரைவிலே குடும்ப உணவுகளிடம் குழந்தையை இனிதே வரவேற்க...

அதி உன்னதமான முதல் திட உணவு ஃபாரெக்ஸ்.

இலவசமான எமது ஃபாரெக்ஸ் கைப் புத்தகம், 2-ரூபா தள்ளுபடித் திட்டம்—இரண்டையும் பற்றி அறிய, எழுதுங்கள்.
(புத்தகம் எந்த மொழியில் எனக்கு குறிப்பிட்டு) உங்கள் பெயர், விலாசத்தை எழுதி, 25 பைசா தபால் வில்லையோடு அனுப்புக இம் முகவரிக்கு: தபால் பை நம்பர் 19119, பம்பாய் 400 025.



க்ளாக்ஸோ

LIL.GF. 53-140 TM

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்-

தவறாமல் பிரஷ்கொண்டு பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

போர்ஹென்ஸ பற்பசையைத் தவறாது உபயோகிப்பவர்கள் தாங்களே கூறுகிறார்கள்.

"...பல் உபாதையால் அவதிப்பட்டு வந்த என் மனைவி ... போர்ஹென்ஸ் உபயோகிக்கத் தொடங்கினாள்...வியக்கத் தக்க பலன் விளைந்தது...இப்போது ஈறு உபாதையால் அவதிப்படும் மற்றவர்களுக்கும் அதை அவள் சிபாரிசு செய்கிறாள். இங்கிலாந்திலுள்ள என் சகோதரரும் 6 ட்யூப் இந்திய போர்ஹென்ஸ் கேட்டு அவசரச் செய்தி அனுப்பினார்..." (கையொப்பம்)

டி.ஜி.எம். டிசௌஸா, பம்பாய்

"...ராஜ மகேந்திரத்திலுள்ள ஒரு பல் வைத்தியர்...பற்களும் ஈறுகளும் வலுப் பெற... போர்ஹென்ஸ் உபயோகிக்கச் சொன்னார். உடனே அப்படியே செய்தேன். சில நாட்களிலேயே என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் நல்லபடியாயின. அது முதல் போர்ஹென்ஸ் என் உயிர். இப்போது என் குடும்பத்தினர் அனைவரும் (9 பேர்கள்) போர்ஹென்ஸ் உபயோகிக்கிறோம். இந்தப் பழக்கமும் நம்பிக்கையும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். (கையொப்பம்) பி.ஜே. லாஸர்

சிராலா, ஆந்திரப் பிரதேசம்

(மேற்கண்ட சான்றிதழ்களின் புகைப்பட நகல்களை ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெடின் எந்த அலுவலகத்திலும் காணலாம்).

முறையான பற்பராமரிப்புக்கு, போர்ஹென்ஸ் கொண்டு இரவும் காலையும் உங்கள் பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுங்கள்.

இலவசம்! பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். தபால் செலவுக்காக, 25 பைசா தபால் தலையுடன், போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, டிபார்ட்மெண்ட் கெ. T 133 த. பை எண் 11463, பம்பாய் 400 020 என்ற முகவரிக்கு எழுதுக. எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

PIN CODE FOR FAST MAIL



போர்ஹென்ஸ்

பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை

160F-152 TM

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 5

உறையூர்த் தூதன்

இயற்கையாகப் பூமியில் எழுந்த சிறு குன்றுகளை அழகிய இரதங்களாகவும் விமானங்களாகவும் அமைத்திருந்த ஓர் இடத்துக்குச் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் வந்து சேர்ந்தார்கள். அந்த விமானக் கோயில்களையொட்டி, ஒரு கல் யானையும் கற்சிங்கமும் காணப்பட்டன. இவையும் இயற்கையாகப் பூமியில் எழுந்த பாறைகளைச் செதுக்கிச் செய்த வடிவங்கள்தான்.

அவற்றுள் யானையின் சமீபமாகச் சக்கரவர்த்தி வந்தார்.

''குந்தவி! இந்த யானையைப் பார்த்தாயா? தத்ரூபமாய், உயிருள்ள யானை நிற்பது போலவே தோன்றுகிறதல்லவா? முப்பது வருஷங்களுக்கு முன்னால் இங்கே இந்த யானை இல்லை; ஒரு மொட்டைக் கற்பாறைதான் நின்றது!'' என்றார்.

''இந்தக் கோயில்கள் எல்லாமும் அப்படித்தானே மொட்டை மலைகளாயிருந்தன?'' என்று குந்தவி கேட்டாள்.

''ஆமாம், குழந்தாய்! இன்று நீயும் நானும் வந்திருப்பது போல் முப்பது வருஷங்களுக்கு முன்னால் என் தகப்பனாருடன் நான் இங்கு வந்தேன். உன் தாத்தாவைப் பற்றித்தான் உனக்கு எல்லாம் தெரியுமே? சிற்பம், சித்திரம் என்றால் அவருக்கு ஒரே பைத்தியம்!''

''உங்களுக்கும் பைத்தியம் ஒன்றும் குறைவாயில்லையே!'' என்று குந்தவி குறுக்கிட்டாள்.

சக்கரவர்த்தி புன்னகையுடன் ''என்னைவிட அவருக்குத்தான் பைத்தியம் அதிகம். செங்கல்லினாலும் மரத்தினாலும் அவர் ஆயிரம் கோயில்கள் கட்டினார். அப்படியும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. என்றும் அழியாத பரம்பொருளுக்கு என்றும் அழியாத கோயில்களைக் கட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டார். மலையைக் குடைந்து கோயில்கள் அமைக்க விரும்பினார். அந்தக் காலத்திலேதான் ஒரு நாள் அவரும் நானும் இந்தப் பக்கம் சுற்றிக்கொண்டு வந்தோம். அப்போது எனக்கு உன் வயதுதான் இருக்கும். தற்செயலாக ஆகாசத்தைப் பார்த்தேன். வெண்ணிறமான சிறு சிறு மேகங்கள் வானத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தன. அந்த மேகங்கள் அவ்வப்போது வெவ்வேறு ரூபம் கொண்டு தோன்றின. ஒரு சிறு மேகம் யானையைப் போல் காணப்பட்டது. அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தப் பாறையண்டை வந்தேன். கையில் கொண்டு வந்திருந்த காவிக் கட்டியினால் யானையின் உருவத்தை இதன் மேல் வரைந்தேன். அதை அப்பா பார்த்துக் கொண்டேயிருந்தார். யானை உருவத்தை நான் எழுதி முடித்ததும் என்னைக் கட்டித் தூக்கிக் கொண்டு, கூத்தாடத் தொடங்கினார். 'நரசிம்மா! என்ன அற்புதமான யோசனை உன் யோசனை! இங்குள்ள பெரிய பாறைகளையெல்லாம் கோயில்களாக்கி விடுவோம். சின்னச் சின்னப் பாறைகளையெல்லாம் வாகனங்களாகச் செய்து விடுவோம். இந்த உலகமுள்ள அளவும் அழியாதிருக்கும் அற்புதச் சிற்பங்களை எழுப்புவோம்!' என்று வெறி பிடித்தவர் போல் கூறினார். அவ்விதமே சீக்கிரத்தில் இங்கே சிற்ப வேலைகளை ஆரம்பித்தார். அதுமுதல் இருபது வருஷ காலம் இந்தப் பிரதேசத்தில் இடைவிடாமல் ஆயிரக்கணக்கான கல்லுளிகளின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. நான் வட தேசத்துக்குப் படையெடுத்துப் போன போதுதான் நின்றது...''

இவ்விதம் சொல்லிச் சக்கரவர்த்தி நிறுத்தி ஏதோ யோசனையில் ஆழ்ந்தவர்போல் இருந்தார்.

சற்றுப் பொறுத்துக் குந்தவி, ''ஆமாம், அப்பா! இருபது வருஷங்களாய் நடந்து வந்த சிற்பப் பணியை நிறுத்தி விட்டீர்களே என்ற சந்தோஷத்தினால் உங்கள் பெயரை இந்தப் பட்டினத்துக்கு வைத்தார்கள் போலிருக்கிறது!'' என்று சொல்லிவிட்டுக் குறும்பாகப் புன்னகை செய்தாள். அதைக் கேட்ட சக்கரவர்த்தி உரக்கச் சிரித்துவிட்டு, ''இல்லை, அம்மா! இந்தச் சிற்பபுரி தோன்றுவதற்கு நான் காரணமாயிருந்தபடியினால் என் தகப்பனார் இப்பட்டினத்துக்கு என் பெயரை அளித்தார். 'நரசிம்மன் என்ற பெயருடன் எத்தனையோ இராஜாக்கள் வரக்கூடும். மாமல்லன் என்ற பட்டப் பெயர் வேறொருவரும் வைத்துக் கொள்ள மாட்டார்கள்!' என்று யோசித்து, அப்பா இந்தப் பட்டினத்துக்கு 'மாமல்லபுரம்' என்று பெயர் சூட்டினார். அப்பாவுக்கு என்மேல்தான் எவ்வளவு ஆசை!'' என்று கூறி, மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

''ஆமாம்; ஆனால் தாத்தாவுக்கு உங்கள் பேரில் இருந்த ஆசையில் நூறில் ஒரு பங்குகூட உங்களுக்கு என் அண்ணன் மேல் கிடையாது. இருந்தால், அண்ணனைக் கப்பல் ஏற்றிச் சிங்களத்துக்கு அனுப்புவீர்களா?'' என்று கேட்டாள் குந்தவி.

''குழந்தாய் கேள்! என்னுடைய இளம் வயதில் எனக்கு எத்தனையோ மனோரதங்கள் இருந்தன. அவற்றில் பல நிறைவேறின. ஆனால் ஒரே ஒரு மனோரதம் மட்டும் நிறைவேறவில்லை. கப்பல் ஏறிக் கடல் கடந்து தூர தூர தேசங்களுக்கெல்லாம் போய் வரவேண்டும் என்று நான் அளவில்லாத ஆசை கொண்டிருந்தேன். அதற்கு என் தந்தை அனுமதிக்கவில்லை. நான் இந்தப் பல்லவ சிம்மாதனத்தில் ஏறிய பிறகு கடற் பிரயாணம் செய்வதென்பது முடியாத காரியமாகி விட்டது. எனக்குக் கிடைக்காத பாக்கியம் என் பிள்ளைக்காவது கிடைக்கட்டுமே -- என்றுதான் உன் தமையனைச் சிங்களத்துக்கு அனுப்பினேன். இன்னும் எனக்கு எந்தச் சிறு பிள்ளையினிடமாவது அதிகமான பிரியம் இருந்தால், அவனையும் கடற் பிரயாணம் செய்து வரும்படி அனுப்புவேன்'' என்றார் சக்கரவர்த்தி.

''அப்படியானால் உங்களுக்கு என்னிடம் மட்டும் பிரியம் இல்லைபோலிருக்கிறது'' என்று குந்தவி சொல்வதற்குள்ளே, ''உன்னைக் கப்பல் ஏற்றி அனுப்ப எனக்குப் பூரண சம்மதம் அம்மா! ஆனால் நீ பெண்ணாய்ப் பிறந்து விட்டாயே என்ன செய்கிறது? ஒவ்வொரு சமயம் நீ பிள்ளையாய்ப் பிறந்திருந்து, உன் தமையன் பெண்ணாய்ப் பிறந்திருக்கக் கூடாதா? -- என்று எனக்குத் தோன்றுவதுண்டு'' என்றார் சக்கரவர்த்தி.

''நான் மட்டும் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால், உங்களை இத்தனை காலமும் இந்தச் சிம்மாதனத்தில் வைத்திருப்பேனா? கம்ஸன் செய்ததைப் போல் உங்களைச் சிறையில் போட்டு விட்டு நான் பட்டத்துக்கு வந்திருக்க மாட்டேனா? அண்ணனுக்கு ஒன்றுமே தெரியாது; சாது! அதனால் நீங்கள் சொன்னதும் கப்பலேறிப் போய்விட்



டான்'' என்று குந்தவி சொல்லிவிட்டு அந்த மலைக் கோயில்களைச் சுற்றி ஓடியாடிப் பார்க்கத் தொடங்கினாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சக்கரவர்த்தி, ''வா! குழந்தாய்! இன்னொரு சமயம் வந்து சாவகாசமாய்ப் பார்க்கலாம். ஊரில் ஜனங்கள் எல்லோரும் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்'' என்றதும், குந்தவி அவரண்டை வந்து, ''அப்பா! இந்தக் கோயில்கள் இன்னும் அரைகுறையாகத்தானே இருக்கின்றன? மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கப் போகும் திருப்பணி வேலை இங்கேயும் நடக்குமல்லவா? இந்தக் கோயில்களுக்குள்ளே எல்லாம் என்னென்ன சுவாமியைப் பிரதிஷ்டை செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

சற்றுத் தூரத்தில் பல்லக்கும் குதிரையும் ஒரு மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்





'யாவும் கிருஷ்ணன் கொடுத்தது: அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற தீவிர பக்தி உடையவன் மயூரசன்மன். பரந்தாமன் அவனிடம், "நீயும் உன் மனைவியும் இரு பக்கங்களிலும் பிடித்துக் கொண்டு, உனது ஒரே மகனை இரண்டாகப் பிளந்து எனக்கு ஒரு பாகத்தைக் கொடு" என்றான்.

மயூரசன்மன் இதற்கு ஒப்பிச் சிறுவனுக்கு நேர் வகிடு எடுத்து மனைவியும் தானும் இரண்டு பக்கங்களில் பிடித்திருக்க அறுக்கச் செய்தான். அப்போது சிறுவன் அழுதான். உடனே கிருஷ்ணன், "நான் கேட்கும் பொருளை மனம் ஒப்பி நீ தரவில்லை. ஆகவேதான் உன் சிறுவன் அழுகிறான்" என்று கோபித்தார்.

அப்போது வெட்டுப்பட்ட சிறுவன், "கண்ணா! நன்றாகப் பார். உன் பங்குக்குக் கிடைத்த பக்கத்திலுள்ள கண் அழவில்லை. அந்தப் பகுதிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் தனக்குக் கிடைக்கவில்லையே என்று எண்ணித்தான் மற்ற ஒரு பக்கத்துக் கண் அழுதது" என்றான்.

கிருஷ்ணன் புன்னகை பூத்துச் சிறுவனை ஆசீர்வதித்தான்.

புலவர் கீரன் கூறக் கேட்டு எழுதியது
சேலம் அறவழியான்

தன. அந்த மரத்தை நோக்கி இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். குந்தவியின் கேள்விக்குப் பதிலாகச் சக்கரவர்த்தி பின்வருமாறு சொன்னார்:

"இல்லை, குழந்தாய்! இந்தக் கோயில்கள் இப்படியேதான் பூர்த்தி பெறாமல் இருக்கும். இந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் வேலை நடக்கும். குந்தவி! ஆயனர் என்ற மகா சிற்பி இந்த ஊரில் இருந்தார். அவருடைய தலைமையில்தான் இந்தக் கோயில்களின் வேலை ஆரம்பமாயிற்று. அவர்தான் இவ்வளவு வரை செய்து முடித்தவர். பிறகு, அவர் சில துரதிர்ஷ்டங்களுக்கு ஆளானார். கொஞ்ச நாளைக்கு முன் சுவர்க்கம் சென்றார். அவர் தொடங்கிய வேலையைச் செய்து முடிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் இப்போது யாரும் இல்லை. இனி வரப் போவதும் இல்லை!"

"ஆயனரைப் பற்றிக் கேட்டிருக்கிறேன், அப்பா! அவருடைய மகள்...?" என்று குந்தவி சொல்வதற்குள்,

"அதோ யாரோ குதிரை மேல் வருகிறானே, யாராயிருக்கும்?" என்றார் மகா மல்லர்.

பேச்சை மாற்றுவதற்காகவே அவர் சொன்ன போதிலும், உண்மையில் கொஞ்ச தூரத்தில் ஒரு குதிரை வந்து கொண்டுதான் இருந்தது. சக்கரவர்த்தியும் குந்தவியும் மாந்தடிக்குப் போய் நின்றதும், அங்கே குதிரை வந்து நின்றதும் சரியாயிருந்தன.

குதிரை மேலிருந்தவன் விரைவாக இறங்கிப் பய பக்தியுடன் சக்கரவர்த்தியின் அருகில் வந்து ஓர் ஓலையை நீட்டினான்.

"அடியேன் தண்டம்! உறையூரிலிருந்து வந்தேன். அச்சுத பல்லவராயர் இந்த ஓலையை ஒருகணமும் தாமதியாமல் சக்கரவர்த்தியின் திருச்சமூகத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்" என்றான்.

சக்கரவர்த்தி ஓலையை வாங்கிக் கொண்டார். அதில் என்ன எழுதியிருக்கிறதென்று பார்க்காமலே தூதனை நோக்கி, "நீ போகலாம்! இதில் அடங்கிய விஷயத்தைப் பற்றிய கட்டளை நேற்றே அனுப்பி விட்டோம்" என்றார்.

தூதன் தண்டம் சமர்ப்பித்துவிட்டுத் திரும்பி விரைந்து சென்றான்.

"நன்றாயிருக்கிறது, அப்பா, நீங்கள் ராஜ்ய பாரம் செய்கிற இலட்சணம்? ஓலை வந்தால் அதைப் பிரித்துக்கூடப் பார்க்கிறதில்லையா?" என்று கோமகள் கேட்டாள்.

"என்னுடைய ஞான திருஷ்டியில் உனக்கு நம்பிக்கை இல்லை போலிருக்கிறது! இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று சொல்லட்டுமா? சோழ ராஜகுமாரன் விக்கிரமன் இந்தப் புரட்டாசிப் பௌர்ணமியன்று சோழ நாட்டில் சுதந்திரக் கொடியை உயர்த்த உத்தேசித்திருக்கிறான். அவனை என்ன செய்கிறது என்று தளபதி அச்சுத பல்லவராயன் கேட்டிருக்கிறான். நீ வேணுமானால் படித்துப் பார்!" என்று ஓலையைக் குந்தவியிடம் கொடுத்தார்.

குந்தவி அதைப் படித்துவிட்டு வியப்புடன் சக்கரவர்த்தியை நோக்கினாள்.

"உங்களிடம் ஏதோ மந்திர சக்தி இருக்கிறது, அப்பா! அந்த மந்திரத்தை எனக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?" என்றாள்.

சக்கரவர்த்தி குதிரையின் மேலும், குந்தவி பல்லக்கிலும் அமர்ந்தார்கள். வழியில் கோமகள், "அப்பா! அந்த இராஜ குமாரனுக்கு என்ன அவ்வளவு அகந்தை? மாமல்ல சக்கரவர்த்தியின் கீழ்க் கப்பம் கட்டிக் கொண்டு வாழக் கொடுத்து வைக்க வேண்டாமா? அவனை நீங்கள் சும்மா விடக் கூடாது; தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்!" என்றாள்.

"ஆமாம், குழந்தாய், ஆமாம்! அவனைச் சும்மா விடப் போவதில்லை. காஞ்சிக்கு அழைத்து வரச் செய்து நானே தகுந்த தண்டனை விதிக்கப் போகிறேன்" என்றார் சக்கரவர்த்தி. (தொடரும்)


இணையற்ற எழில்மேனி.
மென்மை. வழவழப்பு. இயற்கையான வனப்பு.
ஆம், லக்ஸ் ஸுப்ரீம் உங்கள் மேனி எழிலுக்கு மெருகூட்டுகிறது. நீங்களே அதை உணர்ந்து மகிழ்வீர்கள். அதன் மயக்கும் நறுமணம். செழுமையான க்ரீம் இணைந்த நுரை. மேனியைப் பட்டுப்போன்று தழுவிச் செல்கிறது. லக்ஸ் ஸுப்ரீம் ப்யூடி க்ரீம் உங்கள் எழில் மேனியை மென்மையாகவும், வழவழப்பாகவும், இயற்கையான வனப்புடனும் வைக்கிறது.
LUX
LUX
SUPREME
வேறு எந்த சோப்பையும் பற்றிய சிந்தனையும் எழாது.

ரேஸர் வெட்டும் ரோமக் கட்டையும்
ஏற்படும்போது வெட்கப்படுங்கள்...
அல்லது



ஆன் பிரெஞ்ச்
ஹேர் ரிமூவர் தரும்
பட்டு மேனியால் பெருமைப்படுங்கள்

ஷேவிங் வேண்டாம், அது ஆண்களுக்கு மட்டுமே! தவிர, உங்கள் சருமத்தை வெட்டி வதைக்கும்...,ரோமம் கட்டையாக உறையும். இதோ ஒரு விடிவு-பெண்மைக்கே உரிய நளினமான வழியில் வேண்டாத ரோமத்தை விரட்டியடிக்கலாம்.மென்மையான ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவர்-இந்த க்ரீமை வேண்டாத ரோமத்தின் மீது தடவுங்கள். சிறிது நேரம் கழித்துத் துடைத்து எடுங்கள். ஆஹா! உங்கள் மென்பட்டு மேனி கண்டால் கண்பட்டு விடாதோ! இந்த க்ரீம் சருமத்தின் உட்சென்று வேலை செய்து வேண்டாத ரோமத்தை வழியனுப்புகிறது...வாரக்கணக்கில் பட்டுப் போல் மென்மை—தொட்டுப் பார்த்தால் மழமழப்பு...பெண்மையின் நளினத்தைப் பேசுகிறது உங்கள் மேனி-இல்லையா? எனவே இக்கணமே ரேசருக்கு வழியனுப்பு: ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவருக்கு வரவேற்பு!



ஆன் பிரெஞ்ச்
ஹேர் ரிமூவர்

அருவருப்பூட்டும் ரோமத்தை அகற்றும்
அருமையான க்ரீம்




2 சைஸ்களில் கிடைக்கிறது : 40 கிம் மற்றும் 75 கிம்.

Licensed User of TM : Geoffery Manners &Co. Ltd.

126 HR-182 Tam

வட்ட மேஜை:

கிணற்றுத் தவளையாய் இருக்கிறீரே!



என்ன ஸார், கிணற்றுத் தவளையாய் இருக்கிறீர்! போடு புதிர் விடை தப்பு! தவளை தனது பதினாறாவது முயற்சியில் பதினாறு அடிகள் ஏறியிருக்கும். பதினேழாவது முயற்சியில், பத்தொன்பதாவது அடி வரை தாவி, பதினேழு அடிக்கு வந்துவிடும். பதினெட்டாவது முறைதான் அது கிணற்றுக்கு வெளியில் வர இயலும்.

திருச்சி — 2
17—9—76 வெ. நடராஜன்

★

'முற்றிய நோய்க்கு முனைப்புடன் சிகிச்சை' என்ற கட்டுரையைப் படித்தேன்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் உள்ள Intensive care wardல், என்னுடைய அண்ணாவின் பெண் ஏழு மாத கர்ப்பத்துடன் மஞ்சக் காமாலைக்காக அனுமதிக்கப் பட்டாள். சுமார் பதினைந்து நாட்கள் பிரக்ஞையற்ற நிலைமையிலேயே (Coma stage) இருந்தாள். தேகத்தில் உள்ள ரத்தம் கெட்டு விட்டதால் ரத்தம் முழுதுமே வெளியேற்றிப் புது ரத்தம் சேர்க்கப்பட்டது.

டாக்டர்கள் இரவு பகல் என்று பாராமல் கடமையையே மனத்தில் கொண்டு பாடுபட்டு இப்பெண்ணைக் காப்பாற்றி விட்டார்கள். மருத்துவக் கல்லூரி மாணவர்களோ ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத் தாங்களாகவே முன் வந்து பாட்டில் பாட்டிலாக இரத்த தானம் செய்தார்கள்.

இப்படிப்பட்ட தியாகிகளின் சேவையை நினைக்குங்கால் கண்கள் குளமாகின்றன.

டால்மியாபுரம்
24—9—76 சி. ஆர். திருவேங்கடத்தான்

★

''செலவு குறையட்டும், நேர்மை ஓங்கட்டும்'' என்று பெரிதாகத் தலைப்புக் கொடுத்து யோசனைகள் நிறைய அள்ளிக் கொடுத்திருக்கிறீர்கள்.

போஸ்டர்களையும், தோரணங்களையும், ஊர்வலங்களையும் கொடிகளையும், நடனங்களையும் இசைக் கச்சேரிகளையும், நாடகங்களையும் வாண வேடிக்கைகளையும் நம் நாட்டு மக்கள் (இதில் எந்த மாநிலமும் விதிவிலக்கல்ல) விரும்பி வரவேற்கும் உள்ளம் உடையவர்களாயிருக்கிறார்கள். ஏறத்தாழ ஐம்பது சதவிகிதத்துக்கு மேற்பட்ட மக்கள் வேட்பாளர்கள் தரும் பணத்தை வாங்கிக்கொண்டு அவர்களுக்கே வோட்டளிக்கிறார்கள். எப்படி செலவு குறையும்? எப்படி நேர்மை ஓங்கும்?

செலவு குறைய வேண்டுமானால், நேர்மை ஓங்க வேண்டுமானால், மக்கள் மன நிலை ஓங்க

வேண்டும். திட்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து சிறந்தது எது, அல்லது வேட்பாளர்களில் சிறந்தவர் யார் என்று முடிவு செய்து வாக்களித்து நம் நாட்டுக்கு வேண்டிய நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மதுரை — 16
22—9—76 பிரேமா ராமன்

★

திருவல்லிக்கேணி தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் 75ம் எண் இல்லத்தில் மகாகவி தமது கடைசிக் காலத்தில் வசித்து வந்த வீட்டைத் தமிழ் நாடு அரசு விலைக்கு வாங்கி நினைவுச் சின்னமாக்கும் என்று ஆளுநர் அறிவித்துள்ளார்.

இந்த வீடு கவின் பெருநினைவுக்கூடமாக என்றோ ஆகியிருக்க வேண்டும். பாரதி இளைஞர் சங்கம் இதற்காகக் கடந்த இருபது ஆண்டுகளாகப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு அரசுடன் விடாப் பிடியாகத் தொடர்பு வைத்து, ஈடுபாடு காட்டியது இன்று வீண் போகவில்லை. கால தாமதமானாலும், காரியம் சித்திபெற்றிருக்கிறது.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு கருப்பையா மூப்பனார் உரிய காலத்தில் கொண்ட ஈடுபாடு, இதற்கு உதவியிருக்கிறது.

அந்த வீட்டை விலைக்கு வாங்கிய புதிய சொந்தக்காரர், வீட்டைப் புதுப்பிக்கையில் முன்பிருந்த முகப்புத் தோற்றத்தை மாற்றி விட்டுப் புதிய தோற்றம் அளிக்கும்படி அதனை அமைத்துவிட்டார். நல்ல வேளையாக பாரதி வாழ்ந்த போதிருந்த வீட்டின் தோற்றம் இன்று புகைப்படங்கள் வாயிலாக நமக்குத் தெரிய வருகிறது.

அந்தப் புகைப்படங்களின் துணை கொண்டு, கட்டடக் கலை நிபுணர்கள் உதவியுடன் அந்நாளைய தேசிய நினைவுகளை எழுப்பும் தோற்றத்தை மீண்டும் கொண்டு வந்து நிறுத்தியாக வேண்டும். அத்துடன் ரா. அ. பத்மநாபன் போன்ற பாரதி ஆராய்ச்சியாளர், பாரதியாரின் குடும்பத்தினர் துணையுடன் பாரதி கண்காட்சி யொன்றும் இங்கே நிரந்தரமாக நிறுவ வேண்டும். பாரதி பற்றி எழுதப்பட்ட பன்மொழி நூல்களின் தொகுப்பு இங்கு இடம் பெற வேண்டும். பாரதி இலக்கிய ஆராய்ச்சிகள் தொடரவும் இங்கு வசதி செய்து தரலாம்.

சென்னை — 18
30—9—76 கே. ராமமூர்த்தி

ஒவ்வொரு தாயும் தன் குழந்தையின் உணவு பற்றி என்ன அறிய விரும்புகிறார்?
அமுல்ஸ்ப்ரேயில் என்ன கிடைக்கிறது?

கே. என் குழந்தை ஆரோக்கியமாகவும் வலுவுடனும் வளருவதற்குத் தேவையான வைட்டமின்கள், கனிஜ பொருட்கள் மற்றும் புரதங்கள் அமுல்ஸ்ப்ரேயில் உள்ளனவா?

அமுல்ஸ்ப்ரேயில் பாலில் காணப்படும் எல்லா இயற்கையான சேர்க்கைப் பொருட்களும், கூடவே வைட்டமின்கள் மற்றும் கனிஜ பொருட்களும் உள்ளன. வைட்டமின்கள் நோய்த் தொற்றை எதிர்க்க, நன்றாக பசி எடுக்க, ஆரோக்கியமான நரம்புகள், ஈறுகள், கண்கள் மற்றும் பற்களுக்கு. நியாஸின்—சீரண சக்தியை வளர்க்க, உட்டல் உறிஞ்சிக் கொள்ள, மற்றும் ஆரோக்கியமான சருமத்துக்கு. கால்ஷியம், பாஸ்பரஸ் போன்ற கனிஜ சத்துக்கள் எலும்புகள் சீராக அமைய. இரும்புச் சத்து—ரத்த அமைப்புக்கு. புரதம், செல் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. அமுல்ஸ்ப்ரேயில் தரமுயர்ந்த புரதங்கள் போதிய அளவில் இருக்கின்றன.

கே. என் குழந்தையால் அமுல்ஸ்ப்ரேயை சீரணிக்க முடியுமா?

ஒவ்வொரு சொட்டுப் பாலும் மிக நுண்ணிய பவுடராக மாற்றப்படுகிறது. கொழுப்பும் அவ்வாறே மாற்றப்படுகிறது. இதனால் குழந்தை இதை எளிதில் சீரணிக்க முடிகிறது—பிறந்த சில நாட்களான குழந்தையால் கூடத்தான்.

கே. அமுல்ஸ்ப்ரேயைத் தயாரிக்க நேரமாகுமா?

ஸ்ப்ரே-ட்ரை முறையால் தயாரிக்கப்படும் நுண்ணிய பவுடரான அமுல்ஸ்ப்ரே சுவையானது; விரைவில் தயாரிக்கக்கூடியது; எளிதில் கரைகிறது. இது பாட்டிலின் நிப்பிள் துவாரத்தில் அடைத்துக் கொள்வதில்லை. எனவே குழந்தை அதிக காற்றை விழுங்குவதில்லை.

கே. குழந்தைக்கு அமுல்ஸ்ப்ரே தருவதுடன், பாலஅமுல் எப்பொழுது தரத் தொடங்க வேண்டும்?

3-வது மாதத்தில் (அல்லது அவன் பெரியவனாகிவிட்டான் என்று டாக்டர் கூறும்போது) உங்கள் குழந்தைக்கு, அமுல்ஸ்ப்ரேயைத் தவிர, பாலஅமுல் தானிய உணவு தரத் தொடங்குங்கள்.

பாலஅமுல், முன்கூட்டியே பாலில் சமைக்கப்பட்ட குழந்தை உணவு. மற்ற துணை உணவுகளைக் காட்டிலும் பாலஅமுலில் அதிக புரதமும், வைட்டமின் ஏ-யும் உள்ளன. தவிர, இந்த வயதில் குழந்தை வேகமாக வளருவதற்கு அவசியமான, நன்கு சமனிலை பெற்ற முழுமையான ஃபார்முலா பாலஅமுலில் அடங்கி இருக்கிறது. எனவே உங்கள் குழந்தைக்கு பாலஅமுல் உகந்தது.

இலவசம்:

அமுல் குழந்தை புத்தகம் மற்றும் பாலஅமுல் புத்தகம்—அதிக விவரங்களுக்கு. எழுதவேண்டிய முகவரி: த.பெ. எண் 10124, பம்பாய் 400 001. 60 பைசா தபால் தலையுடன் உங்கள் முழு முகவரியையும் அனுப்புக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது

விற்பனைக்கு விடுப்போர்: குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

Indian Standards Institution

ASP-AS-29A

அபலையின் கண்ணீர்

அமரர் கல்கி

அத்தியாயம் 51

அடிபடாத மான்!

கமலாவின் வீட்டைப் பவானியின் கார் நெருங்க நெருங்க உள்ளே அமர்ந்திருந்த பெண்கள் இருவரும் மனத்தால் நெருங்கி நெருங்கி வந்துகொண்டிருந்தார்கள். ஒருவர் மனம் மற்றொருவருக்கு ஒளிவு மறைவு ஏது மின்றிப் புலனாகி விட்டதால் ஏற்பட்ட புதியதொரு பந்த பாசத்துடன் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சீக்கிரமே உமாகாந்த் சுகமடைந்து உங்கள் இருவரையும் மாலையும் கழுத்துமாகப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது அக்கா!'' என்றாள் கமலா.

''அது சுலப சாத்தியமாகத் தோன்றவில்லையே?'' என்று பவானி சொன்னபோது குரலில் ஏக்கத்தை விடக் கவலை அதிகமாகத் தொனித்தது. ''ஸி.ஐ.டி.கள் இருவர் இவரைத் தேடிக் கொண்டே இருக்கும்போது ஊரறிய எப்படித் திருமணம் நடக்கமுடியும்?''

''அப்படியானால் ரகசியமாக ஒரு கோயிலில் விவாகம் பண்ணிக் கொள்ளுங்கள்! சுவாமி சந்நிதி முன் மாலை மாற்றிக் கொள்ளுங்கள். சாட்சிக்கு என்னை மட்டும் வைத்துக்கொள்ளுங்கள். நாத்தனார் ஸ்தானத்திலிருந்து மூன்றாவது முடிச்சை நான் அழுத்தமாகப் போடுகிறேன்!''

''ரகசியமாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடலாம். ஆனால் ரகசியமாக இல்வாழ்க்கை எத்தனை காலம் நடத்த முடியும்? வீட்டிலேயே சதா ஒளிந்திருந்து உமாகாந்த் என் சம்பாத்தியத்தில் வாழ விரும்புவாரா என்பது தெரிய வேண்டும்.''

''அப்படியானால் நம் இருவருக்கு மிடையில் கல்யாண விஷயத்தில் ரொம்ப ஒற்றுமை அக்கா. இருவருக்குமே திருமணம் நடக்கவே போகிறதில்லை!''

''ஏன் கமலா அப்படிச் சொல்கிறாய்? என்ன ஆயிற்று உனக்கு? கல்யாணம் உன்னை மணப்பதாகக் கோர்ட்டிலேயே உறுதி கூறினாரே!''

''அவர் தயாராக இருக்கலாம். அவர் தாயார் குறுக்கே நிற்கிறாரே! ஊரார் இல்லாததையும் பொல்லாததையும் பேசுவதைக் கேட்டுக் கொண்டு அந்த அம்மாள் எங்கள் வீட்டுக்கு வந்து ரொம்பவும் அவமானப் படுத்தி ஏசிப் பேசிவிட்டார் அக்கா!''

கமலா தொடர்ந்து விவரித்ததை யெல்லாம் கேட்ட பவானி, கடைசியில், ''அடி அசடே! இதற்காக நீ உயிரை விட நினைத்தது சுத்த தப்பு. கல்யாணம் உண்மையில் உன்னிடம் ரொம்ப ஆசையாக இருக்கிறார். அவர் அம்மாவை நீ கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லையே? அவள் ஏதோ உளறியதற்காக நீ ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்றாள்.

''அக்கா! உங்கள் சமாதானம் கொஞ்சம் கூட அர்த்தமுள்ளதாகவோ ஏற்கக் கூடியதாகவோ இல்லை. ஆனாலும் நீங்கள் எனக்குச் சமாதானம் சொல்கிறீர்களே, அதுவே எனக்குப் பெரிய ஆறுதல். எது எப்படிப் போனாலும் உங்கள் அன்பும் நட்பும் எனக்குக் கிடைக்குமென்றால் அதற்காகவே எத்தனை ஜன்மா வேணுமானாலும் எடுத்து அவற்றில் எத்தனை துன்பங்கள் வேண்டுமானாலும் அனுபவிக்கலாம். அப்படிப் பார்க்கும்போது நான் உயிரை விட நினைத்தது வடிகட்டின அசட்டுத்தனம்தான்'' என்றாள் கமலா.

வீட்டு வாசலில் பவானியின் கார் நின்றபோது அங்கே ஏற்கனவே கல்யாணத்தின் 'டப்பா மாடல்' கார் நின்றுகொண்டிருந்தது.

''அடடே! கல்யாணம் வந்திருக்கிறார் போலிருக்கிறதே'' என்றாள் பவானி.

'' அக்கா ! தீப்பெட்டிகளுக்கு ரொம்ப நன்றி. மறக்காமல் மருந்து வாங்கிக் கொண்டு போங்கள்'' என்று கூறிவிட்டு இறங்கினாள் கமலா.

ஆனால் பவானி அவளை வாசலில் இறக்கி விட்டுப் போகத் தயாராக இல்லை. ''அடி கள்ளி! காதலன் வந்தவுடன் என்னை நைஸாக அனுப்பிவிடப் பார்க்கிறாயா? முடியாது! உள்ளே வந்துவிட்டுத்தான் போவேன்'' என்று கூறியபடியே இறங்கினாள் பவானி. உண்மையில் இவ்வளவு கால தாமதமாக வந்ததற்காகக் கமலாவுக்கு 'அர்ச்சனை' நடக்கப் போகிறதே என்ற கவலையில்தான் அவளைப் பின்தொடர்ந்தாள் பவானி.

◘ ◘ ◘

கல்யாணம் ரேழியைத் தாண்டி வந்து நின்றான்.

சாய்வு நாற்காலியில் சயனித்திருந்த மாசிலாமணி, அந்த இடத்தை விட்டு அசையாமல், ''எங்கே வந்தாப்போல?'' என்றார்.

''சும்மாத்தான். பார்த்து விட்டுப் போகலாம்னு....'' என்றான் கல்யாணம்.


''பார்த்தாச்சல்ல?''

கல்யாணத்துக்கு ரோஷமாக இருந்தது. 'விருட்'டென்று திரும்பிவிட வேண்டும்போல் இருந்தது. ஆனால் சிரமப்பட்டு அந்த எண்ணத்தை அடக்கிக் கொண்டான். தன் தாயார் மீது தவறு இருக்கலாம்; தானும் அவர்களுக்கு அவமானம் தேடித் தந்தவன்

தான். எனவே பல்லைக் கடித்துக் கொண்டு தன்மானத்தை மென்று விழுங்கிவிட்டுப் பேசி னான்:

''இதைக் கேளுங்க, மாசிலாமணி! நீங்க வருத்தப்படறதிலே நியாயம் இருக்கு. சற்று முன்னால் பள்ளிக்கூடம் போய்க் கொண் டிருக்கும் விகனைச் சந்தித்தேன். என் அம்மா நேற்று இங்கு வந்துவிட்டுப் போனதாக அவன் சொன்னான். அவனுக்கு விஷயம் ஒன்றும் சரியாக விளங்கவில்லை. ஆனால் குரல் உயர்ந்து வாக்குவாதம் நடந்தது என்ற அளவுக்குப் புரிந்து கொண்டு சொன்னான். அப்புறம் நீங்க யாரும் இரவு சாப்பிடலை என்றும் கமலா அக்கா அழுதுகொண்டே தனக்கு மட்டும் சாதம் போட்டதாகவும் கூறினான். அதி லிருந்து ஏதோ விபரீதமாக நடந்திருப்பதாகப் புரிந்து கொண்டேன். நான் இப்போ இங்கே வந்ததற்கே அதுதான் காரணம். என்ன நடந்தது என்று நீங்கள் எனக்கு விவரம் ஏதும் சொல்ல வேண்டாம். எனக்கு அதைக் கேட்கப் பிடிக்கலை. என் தாயாரை நீங்க தூஷிக்க நான் கேட்டுக் கொண்டிருப்பது நாகரிகமாகாது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் தீர்மானமாக வைத்துக் கொள்ளுங்கள். அன் றைக்குக் கோர்ட்டில் நான் கொடுத்த வாக் குறுதிப்படி நான் நடந்து கொள்ளத் தயார். என் தாயார் என்ன சொல்லி யிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் உங்கள் பெண்ணை நீங்கள் எனக்கு மணம் முடித்துக் கொடுப்பீர்களானால் நான் ஏற்கக் காத்திருக் கேன். அவளை நல்லபடியாக வைத்துக்கொள் வேன். இதனால் என் பெற்றோரிடம் நான் சண்டை போட்டுக் கொள்ள நேர்ந்தாலும் கவலைப்பட மாட்டேன். நாளடைவில் என் அம்மாவின் மனம் மாறிவிடும். அவனுக்கு நான் ஒரே பிள்ளை. கமலா தங்கமான பெண் என்பதையும் அவள் சீக்கிரமாகவே புரிந்து கொள்வாள்.''


''தங்கமோ, வைரமோ இந்தப் பெண் ணையே காணோமே'' என்று புலம்பினாள் சமையல் அறையிலிருந்து வெளிப்பட்ட காமாட்சி. ''வேலை இங்கே எனக்கு இடுப்பு ஒடியறது. அவள் என்னடா வென்றால் பொழுது புலரும்போது 'லத்திப் பெட்டி



வாங்கி வருகிறேன்' என்று போனவள்தான். மணி பத்தரை ஆகிறது. அவளைக் காணோம். எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது. உங்க அம்மா பேசியது பொறுக்காமல் அவள் எங்கே யாவது குளம் குட்டையைத் தேடிப் போய் விட்டாளோ என்று.''

''சேச்சே! அப்படி யெல்லாம் ஒன்றும் இராது. நான் போய்த் தேடிப் பார்த்து அழைத்து வருகிறேன்'' என்றான் கல்யாணம்.

இந்தச் சமயத்தில் பவானியும் கமலாவும் ஒன்றாக உள்ளே நுழைந்தார்கள். வந்த



இருவரையும் இந்த மூவரும் வியப்புடன் பார்த்தது பார்த்த படி இருக்க, பவானி சொன்னாள்: ''நல்லவேளையாகக் கல்யாணமும் இங்கே இருக்கிறார்! மூவரும் நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்தப் பெண்ணை இனிமேல் தனி யாக எங்கேயும் அனுப்பா தீர்கள்! இவள் பாட்டுக்கு எதையோ குருட்டாம்போக்கில் யோசனை பண்ணிக் கொண்டு என் காரிலே வந்து முட்டிக் கொண்டு பயத்தில் மூர்ச்சையாகி விழுந்து விட்டாள். காயம் ஒன்றும் படாமல் கடவுள் தான் காப்பாற்றினார். நல்லவேளை நான் காரை ரொம்ப மெதுவாக ஓட்டி வந்தேன். சட்டென்று பிரேக் போட்டு நிறுத்தினேன். இவளுக்குப் பயம் பாதி, மனக் கிலேசம் பாதி. மயங்கி விழுந்து விட்டாள். காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு என் வீட்டுக்குப் போய் ஆசுவாசப்படுத்தி அழைத்து வந் தேன். பெண்ணை ஜாக்கிரதையாகப் பார்த் துக் கொள்ளுங்கள். கல்யாணம்! உங்களுக் கும்தான் சொல்கிறேன், கமலா இனி உங்கள் பொறுப்பு!''

''நான் அப்பவே போக வேண்டாம்னு முட்டிண்டேன்! 'விகவை அனுப்புடீ'ன் னேன். கேட்டாளா? இல்லையே! இனிமேல் ஒரு நிமிஷம்கூட இவளை வைத்துக்கொண்டு என்னால் சமாளிக்க முடியாது!'' என்றாள் காமாட்சி.

''அதற்கென்ன இனி கல்யாணம் வைக்கச் சமாளிக்கிறார்!'' என்றாள் பவானி.

அத்தியாயம் 52

அடிபட்ட புலி!

நிறைய இரத்தம் இழந்திருந்த போதிலும் கடுமையான ஜுரம் அடித்தபோதிலும் உமா காந்த் இரண்டு மூன்று தினங்களில் குண மடைந்தான். டாக்டரின் மருந்தை விடப் பவானியும் அவளிடம் மிகவும் பிரியமுள்ள மாமா குணசேகரனும் பார்த்துப் பார்த்துச் செய்த பணிவிடைகளினால்தான் பிழைத் தான் உமாகாந்த்.

முதன் முதலாக அவன் கண் இமைகள் படபடத்தபோது பவானி அருகில் இருந் தாள். அவளைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் எழுந்திருக்க முயன்றான். அந்த முயற்சியி லேயே அவன் மறுபடியும் பலவீனமடைந்து மூர்ச்சையானான். பவானி பதறினாள், விம்மி னாள், துடித்தாள்.

மாமா குணசேகரன், ''நீ இப்படித் தவிப் பதால் அவனுக்கு எந்த உபயோகமும் இல்லை. எவ்வளவோ படித்த பெண்ணாகிய உனக்கு இது ஏன் புரியவில்லை?'' என்று கடிந்துகொண் டார். '' 'நாட்டுப் பற்று என்ற நங்கையை மணந்து, மாமியார் வீடே கதி என்று இருக்கி றான் என் காதலன்' என்றாயே, இவன்தானா?'' என்று கேட்டபடியே சிறிது தண்ணீரை உள் ளங்கையில் எடுத்து அவன் முகத்தில் தெளித் தார்.

உமாகாந்தனுக்குப் பிரக்ஞை வந்தது. பவானியைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

பவானி அவன் மறுபடியும் மயக்கம்போட்டு விடப் போகிறானே என்ற கவலையுடன் சோர சோரவென்று முரட்டுத்தனமாக இருந்த அவன் கரத்தை எடுத்துத் தன் பளிங்குக் கன்னத்தில் ஒற்றிக் கொண்டாள். கண்ணீ ரால் அந்த விரல்களைக் குளிப்பாட்டினாள்.

'' பவானி ! உன்னிடம் உண்மையைச் சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தேன்'' என்றான் உமாகாந்தன், ஈன சுரத்தில்.

''நீங்கள் ஓர் உண்மையையும் கூற வேண் டாம். நாலு வருஷங்களுக்குப் பிறகு நீங்கள் என்னிடம் திரும்பி வந்து சேர்ந்துவிட்டீர்கள். எனக்கு இந்த உண்மை ஒன்றே போதும்!'' என்றாள் பவானி.

''அப்படியில்லை பவானி, என்னைப் பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ

வாட்டர்கேட் விவகாரம் அனுமார் வால்போல் நீண்டது. ஆனால் அதன் விளைவான ராஜினாமா மிகச் சுருக்கமானது. பெரிய அரசியல் தலைவர்கள், பெரும் பதவி வகிப்பவர்களில் மிகச் சுருக்கமான ராஜிநாமா கடிதம் எழுதியவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிக்ஸனாகத்தான் இருக்கும் என்கிறார்கள். ''ஐ ஹியர்பை ரிசைன் தி ஆஃபீஸ் ஆப் தி பிரஸிடென்ட் ஆஃப் யுனைடெட் ஸ்டேட்ஸ்''-- என்று எழுதித் தம் காரியதரிசி கிஸிங்கருக்கு விலாசமிட்டிருந்தார் நிக்ஸன்.

-- நியூஸ்வீக் -- மூர்த்தி

என்று எனக்கு ஒரே கவலை. இந்த நாலு ஆண்டுகளும் அதே சிந்தனை!''

''என்ன எண்ணினேன்? தேச பக்த தியாகி என்று பெருமைப்பட்டேன். படிப்பையும் பட்டத்தையும் தொடர்ந்து கிடைக்கக்கூடிய பெரிய உத்தியோகத்தையும் துரும்பாக மதித்து உதறிவிட்டுப் போன வீரர் என்று நினைத்து நினைத்துப் பூரித்தேன். என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமல் என்னை விட்டுப் பிரிந்து போனது எனக்கு ஒரே கோபமாகவும் வருத்தமாகவும் இருந்தாலும் அதே சமயம் என்னிடம் சொல்லியிருந்தால் நான் உங்களைத் தடுத்திருக்க மாட்டேனு என்றும் எண்ணிப் பார்த்தேன். எனவே என்னிடம் சொல்லாமலே நீங்கள் சுதந்திர தேவிக்குப் பணிவிடை செய்ததும் நியாயமே என்ற முடிவுக்கு வந்தேன். கடமைக்காகக் காதலையும் துறந்த உங்கள் இடட சித்தம் என்னைப் புளகாங்கிதம் அடையச் செய்தது. நீங்கள் விடுதலை பெற்றுத் திரும்பி வரும் தினத்தைக் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டு பொறுமையோடும் ஆவலோடும் காத்திருந்தேன்.''

பவானி பேசப் பேச உமாகாந்த் முகத்தில் ஏதோ புதிரை விடுவிக்க முடியாத பாவம் படர்ந்தது!

''பவானி! தேச பக்தத் தியாகியாக நான் சிறைசென்றதை யார் உனக்குச் சொன்னது?''

''வேறு யார்? உங்கள் தகப்பனார்தான்!'' என்றாள் பவானி. ''நீங்கள் கல்லூரிக்குச் சில நாட்கள் வராமலிருக்கவே என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கூச்சத்தை விட்டு உங்கள் வீட்டில் என்னை யாராவது தப்பாக நினைத்துக் கொண்டாலும் பாதகமில்லை என்ற தீர்மானத்துடன் போய் விசாரித்தேன். உங்கள் தகப்பனார் அன்பொழுக என்னிடம் பேசினார். 'உன் கல்லூரி நண்பர்கள் எல்லாருமே பெருமைப்படக் கூடிய விஷயத்தைச் சொல்லப் போகிறேன்' என்று ஆரம்பித்து நீங்கள் கைதான விவரத்தைச் சொன்னார். குடும்பத்தினரில் கூட யாருக்குமே தெரியாமல் நீங்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சில சதிச் செயல்களில் ஈடுபட்டிருந்தீர்களாமே! அண்டர்கிரவுண்ட் போர்வழிகள் சிலருக்கு உதவினீர்களாமே! ஸி. ஐ. டி.கள் அதைத் தெரிந்து கொண்டு உங்களை அரெஸ்ட் செய்து ஓர் ஆங்கிலேய மாஜிஸ்டிரேட் முன் கொண்டுபோய் நிறுத்தினார்களாம். அவன் ஒரேயடியாக ஆறு ஆண்டுகள் தீட்டிவிட்டான். 'அப்பீல்' செய்திருந்தால் தண்டனை குறைந்திருக்கும். ஆனால் நீங்கள் மேல் கோர்ட்டுக்குப் போவது தேச பக்தனுக்கு இழுக்கு என்று கூறிவிட்டீர்கள். எத்தனை வருஷங்களானாலும் தண்டனையை இன்முகத்துடன் ஏற்பேன் என்று அடித்துச் சொன்னீர்கள். இதையெல்லாம் விவரித்தபோது உங்கள் அப்பா கருணாகரன் கண் கலங்கிவிட்டார்!''

புதிர் நீங்கிய பாவத்தில் புன்னகை மலர்ந்தது உமாகாந்தின் முகத்தில். நிம்மதி பெற்றவனாகக் கண்களை மூடிக் கொண்டான். அவன் நெற்றியை இலேசாக வருடினாள் பவானி. ''எவ்வளவோ கேட்க வேண்டும்; எத்தனையோ பேச வேண்டும்'' என்றான். ''இப்போது என்ன அவசரம்? மெல்லப் பேசலாம்; ஓய்வாக இருங்கள்'' என்று அவன் புருவங்கள் மீதாக ஒரு விரலால் கோடு இழுத்தாள். அவன் தூங்கிவிட்டதாக எண்ணி நெற்றியில் இதழ் பதித்தாள்.

''அவ்வளவுதானா? கன்னத்தில் ஒன்று?''

''அதற்கு இன்னும் சிறிது காலம் காத்திருக்க வேண்டும் நீங்கள்! முதலில் இந்த எட்டு நாள் தாடியை வழித்தெடுங்கள்! கிட்ட நெருங்க விடேன் என்கிறது'' என்று கூறிச் சிரித்தாள் பவானி.

மாறாத புன்னகையுடன் கண்ணயர்ந்தான் உமாகாந்தன்.

'என்னதானிருந்தாலும் என்னிடம் மட்டுமாவது உங்கள் ரகசிய நடவடிக்கைகளை விவரித்திருக்கலாம்' என்று அவன் முகத்தைப் பார்த்தவாறு தனக்குத் தானே பேசிக் கொண்டாள் பவானி. 'எந்தச் சிறையில் இருக்கிறீர்கள் என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்று உங்களைப் பார்க்க வந்திருக்க மாட்டேனா? யாரும் உங்களைச் சிறையில் வந்து பார்க்கக் கூடாது என்று கூறி விட்டீர்களாம். அப்படி வந்தால் உங்கள் மன உறுதி தளர்ந்துவிடும் என்று அஞ்சினீர்களாம். எனவே உங்கள் அப்பா நீங்கள் சிறைப் பட்டிருக்கும் ஊரைக் கூற மறுத்துவிட்டார். உங்கள் கோரிக்கைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியவளானேன் நான். நீங்கள் அடைந்து கிடக்கும் சிறைச்சாலை எது என்று கண்டுபிடிக்க எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. ஒரு கடிதமாவது நீங்கள் எனக்குப் போட்டிருக்கக் கூடாதா? அப்போது நீங்கள் இருக்குமிடம் எனக்குத் தெரிந்து போய்விடுமே என்றா?

'ஆனால் அப்படிப்பட்ட கடுமையான தவத்தை மேற்கொண்ட நீங்கள், பிறகு அத்தவத்தைக் காப்பாற்ற முடியாமல் தண்டனைக் காலம் முடியு முன்னரே சிறையிலிருந்து தப்பி ஓடி வருவானேன்? அது உங்கள் இயல்புக்கு ஒத்து வருவதாக இல்லையே? மகிழ்ச்சியுடன் சிறை வாசத்தை ஏற்கும் கர்ம வீரன் செய்யும் காரியமா இது? சிறையிலிருந்து தப்பி ஸி. ஐ. டி.களால் பின் துரத்தப்பட்டு, அலைந்து துப்பாக்கித் தோட்டா பாய அடிபட்டு, ஓடி ஒளிந்து சாவுடன் போராடுகிற நிலையில் என்னிடம் வந்து சேருவானேன்?

'உமாகாந்த்! உங்கள் சிறைவாசத்துக்குப் பின்னும் எனக்குத் தெரியாத விவரங்கள் ஏதேனும் இருக்கிறதா? அவை என்ன?... மெல்லத் தெரிந்து கொள்கிறேன்... அவசரமில்லை. இப்போது நீங்கள் ஆழ்ந்த நிம்மதி



பூத்த புதுமலரின் மென்மையோ
சாந்தி சில்க்
அளிக்கும்
பட்டுச் சேலைகள் பட்டுப் பாவாடைகள் நவீன மில்துணி வகைகள் நயமுடைய கைத்தறி ரகங்கள்.
கலை நயமுடையவை விலை நியாயமானவை நீடித்து உழைப்பவை நிறைவு தருபவை
RAJATHI-SS 152
மயிலாப்பூர்
சாந்தி சில்க்
எம்போரியம்
5, சன்னதி தெரு. மயிலாப்பூர், சென்னை 4 போன் 74403
ஞாயிறு கடை உண்டு.
இலவசப் பரிசு:
எமது விற்பனை ஊக்கத் திட்டத்தில் சேர்ந்து பரிசும் பயனும் பெறுங்கள்.

யுடன் உறங்குங்கள். இழந்த தெம்பைப் பெறுங்கள். அதுதான் முக்கியம்.'

இத்தருணத்தில் கீழே வீட்டு வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. பவானி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். மாஜிஸ்டிரேட் கோவர்த்தனன் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்!

'இவர் எங்கே இப்போது வந்து சேர்ந்தார்? பூஜை வேளையில் கரடி நுழைந்த மாதிரி?' என்று நினைத்துக் கொண்ட பவானி அவசரம் அவசரமாகத் தன் அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு மாடிப்படி இறங்கிச் சென்றாள். இயல்பான முகத் தோற்றத்தைச் சிரமப்பட்டுத் தருவித்துக் கொண்டு அவரிடம் பேசினாள்.

''வாருங்கள்! என்ன, இரண்டு வாரங்கள் கழித்து வருவதாகச் சொல்லிவிட்டு அதற்குள் வந்து நிற்கிறீர்களே? என் முடிவைத் தெரிந்து கொள்ள இவ்வளவு அவசரப்பட்டால் எப்படி?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''நான் அதற்காக வரவில்லை, பவானி! ஒரு முக்கிய செய்தியைச் சொல்லி உன்னை எச்சரித்துவிட்டுப் போகலாம்என்று வந்தேன். அடிபட்ட புலி ஒன்று இந்த ஏலமலைச் சாரலில் உலவி வருகிறதாம். நீ அடிக்கடி அந்தப் பெண் கமலாவுடன் அங்கே எல்லாம் போகிறாயல்லவா? அதை இனிமேல் நிறுத்திக் கொள்!'' என்றார் கோவர்த்தனன்.

'அடிபட்ட புலி' என்றதுமே மாடியிலிருந்த உமாகாந்தனை நினைத்து உள்ளம் நடுங்கினாள் பவானி. இந்த மாஜிஸ்டிரேட் பொல்லாதவர். 'அடிபட்ட புலி' என்று உமாகாந்தனைத் தான் வர்ணிக்கிறார் என்று அவள் மனம் உணர்ந்தது. (தொடரும்)

அரியணை ஏறிய அகிலன்

ஞானபீடப் பரிசாக ஒரு லட்சம் ரூபாய் பெற்று இலக்கிய அரியணையில் அமர்ந்த திரு 'அகிலன்' — தமிழகத்துக்கு அளப்பரிய கௌரவம் சேர்த்துள்ளார்.

'சித்திரப் பாவை' என்னும் புதினத்துக்காக அவருக்கு இப்பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு வருட காலம் ஆனந்தவிகடனில் தொடர்கதையாக வெளிவந்தது. இச்சமூக நாவலில், கலையைப் போற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் சமூகப் பெரியார்களின் வெளி வேஷங்களைக் களைந்தெறிகிறார். போலிகளைக் கொண்ட ஓர் உளுத்துப் போன சமுதாயத்தையே உருவாக்கவல்ல மாற்றம், மறைமுகமாக நாட்டில் நடைபெற்று வருவதைச் சினம் கொண்டு உணர்த்துகிறார். ''அழகாக வாழக் கற்றுக் கொள்; முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து; முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு'' என்னும் உண்மையையே '**சித்திரப் பாவையில்** நடு சரமாக்கியிருக்கிறார். சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறை சென்றவரான அகிலன் சிறுமை கண்டு சீறுவதில் வியப்பில்லை. மத்திய அரசின் தேசியப் புத்தக நிறுவனத்தினரால், இந்திய மொழிகள் அனைத்திலும் சித்திரப்பாவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'அகிலாண்டம்' எனத் தன் சொந்தப் பெயரில் 1939லேயே சிறுகதைகளை எழுதத் தொடங்கிய இவர், 'அகிலன்' என அறிமுகமானது 'கல்கி' வழியாகத்தான். 1942ல் இவர் எழுதிய ''சாவின் ஜாதகம்'' என்னும் கதையே அது! சுமார் இருநூறு கதைகளையும் இருபது நாவல்களையும் பல கோணங்களில் எழுதியுள்ளார். இவருடைய சிறுகதைத் தொகுதிகளில் பல, தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன. இந்திய மொழிகள் பலவற்றிலும் ஜெர்மானிய, ருஷ்ய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுப் பிரபலமாகியுள்ளன.

1945ல், நாராயணசாமி அய்யர் நாவல் பரிசை வென்று, 'பெண்' என்னும் புதின வழியே, 'கலைமகள்' வழியாகத் தமிழ் உலகில் அகிலன் நடை பயிலத் தொடங்கினார். என்றாலும் அவர் எழுதிய முதல் புதினம் — 'இன்ப நினைவு' ஆகும். நெஞ்சின் அலைகள், அவளுக்கு, வாழ்வு எங்கே? பொன் மலர், எங்கே போகிறோம்? என்பன கலைமகளில் தொடர்கதையாக வந்தவை. 'எங்கே போகிறோம்?' எம். ஏ. வி. அறக் கட்டளையின் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் பரிசான ரூ. 10,000 பெற்றது.

'பாவைவிளக்கு' — 1957ல் கல்கியில் வெளி வந்து, பெரும் பரபரப்பை ஊட்டியது. அப்புதினத்தில் வரும் தணிகாசலம், தேவகி, செங்கமலம், கௌரி, உமா — என்போரெல்லாம் அருமையான வார்ப்புக்கள்.

கல்கியில் 1959 முதல் வெளியான 'வேங்கையின் மைந்தன்' மாமன்னர் இராஜேந்திரனின் வல்லமைத்தை மறுவாழ்வு பெறச் செய்து அகிலனுக்குச் சாகித்ய அகாதெமிப் பரிசைப் பெற்றுத் தந்தது.

புதுவெள்ளம், கயல்விழி, வெற்றித் திருநகர் என்பன கல்கிக்குக் கலை வண்ணமும் அகிலனுக்குப் புகழ் ஆரமும் சேர்த்த படைப்புக்கள்.



கதை சொல்லும் கலையில், உத்திகளை உருவாக்குவதில் தனித் திறமையும், கருத்துக்களைச் சொல்வதில் சிக்கலின்மையும், பாத்திரப் படைப்பில் குணசித்திரங்களைத் துல்லியமாகக் காட்டுதலும் அகிலனுக்கே உரிய முத்திரைகள்.

எளிய சூழலில் பிறந்து எழுத்தாற்றலால் உயர்ந்து ஞானபீடப் பரிசு பெற்ற திரு அகிலன் அவர்களைக் கல்கி வாசகர்கள் சார்பில் இதயபூர்வமாக வாழ்த்துகிறோம்.

சித்திரப்பாவை — கிடைக்குமிடம்: பாரி புத்தகப் பண்ணை, 576, பைகிராப்ட்ஸ் சாலை, சென்னை-5 விலை ரூ. 15/-

ஒரு விமர்சன நாடகம்

[அட்வொகேட் ராமசுப்பன் வீடு. மாப்பிள்ளை பாஸ்கரனும், பெண் பாமாவும் வெளியே போய்விட்டுத் திரும்பி வருகிறார்கள். வாசலில் பாஸ்கரன், மைத்துனன் வாண்டுப் பயலிடம் கசங்கிய தாள்களைக் கொடுத்துக் குப்பையில் போடச் சொல்கிறான். வாண்டு அதை ரகசியமாகப் பிரித்துப் பார்த்துவிட்டு உள்ளே ஓடுகிறான்.]

வாண்டு: அம்மா! அம்மா!

தாயார் லலிதா: எதுக்குடா அலறுகிறே? மாப்பிள்ளை வந்தாச்சா? தட்டுப் போட்டுத் தேர்த்தம் எடுத்து வை.

வாண்டு: அம்மா! அக்காவும் அத்திம்பேரும் இங்கிலீஷ் பிக்சர் போறதாத்தானே சொன்னா? 'அடல்ட்ஸ் ஒன்லி; உன்னை உள்ளே விட மாட்டான்'னு சொல்லி ஏமாத்திட்டுக் கலா...சியில் நாடகத்துக்குப் போயிட்டு வந்திருக்காம்மா!

ராமசுப்பன்: பின்னே ஒன்னை மடியிலே கட்டிண்டு அவா வெளியே போவாளாக்கும்? போடா, போடா அலமஞ்சம்! அபஸ்மாரம்!

லலிதா: என்ன நாடகம் பாமா?

பாஸ்கரன்: கால்கட்டு. ஹியூமரஸ் ப்ளே.

ராமசுப்பன்: நகைச்சுவை நாடகமா? கஷ்ட காலம். சம்பந்தா சம்பந்தமில்லாமெ பழைய ஜோக்குகளையெல்லாம் தொகுத்துச் சொல்லி இதுதான் ஹ்யூமர், சிரின்னு பிராணனை வாங்கியிருப்பாளே!

அம்மாஞ்சி (வந்துகொண்டே): பெரும்பாலான நாடகங்கள் அப்படித்தான், கப்பு. தமாஷ், கதையோட ஒட்டாம தனி ஆவர்த்தனம் நடத்தும். ஆனால் கால்கட்டு அப்படியில்லே. சிச்சுவேஷன்லேயே நகைச்சுவை இயற்கையா அமைஞ்சிருக்கு.

லலிதா: அம்மாஞ்சி! நீங்க எப்போ பார்த்தேள்? சொல்லவே யில்லியே!

அம்மாஞ்சி: அதுவா...வந்து...வந்து நான் இப்படி இனம் வாக் போவேனு. மெரீனாவும் காலமே எழுந்து வாக் போறா? ரெண்டு பேரும் ஒரே பேட்டையானதாலே அடிக்கடி பார்த்துக்கிறோமா? புன்னகையிலே ஆரம்பிச்சு ஹி பாஸ் வரை வளர்ந்துடுத்து எங்க சிநேகம்!

பாஸ்கரன்: ரொம்ப நன்னு எழுதியிருக்கார் மாமா; நீங்க படிச்சதில்லையா? ஒரு ஆவரேஜ் மிடில் கிளாஸ் ப்ராமின் ஃபாமிலியை அப்படியே படம் பிடிச்சுக் காட்டி, தமாஷான வசனத்திலே நாடகத்தை இயல்பா வளர்த்துண்டு போறார். படிக்கறச்சே இருந்ததை விட நாடகமாப் பார்க்கறச்சே இன்னும் நன்னு இருக்கு.

பாமா: அதிலே அதிசயமென்னன்னு? நாடகமா விஷுவலைஸ் பண்ணித்தானே எழுதினார்.

ராமசுப்பன்: கதை?

பாமா: கதைன்னு ஒன்னும் பிரமாதமா கிடையாது. ஆனா வாழ்க்கையைக் கலைக் கண்ணோடு பிரதிபலிப்பதுதான் இலக்கியம்னு





மேலே: மேஜர்
இடது: கால்கட்டு நாடகத்தில் ஜெயா, பூர்ணம்

இது டாப் கிளாஸ் லிட்ரச்சர் — நகைச்சுவை இலக்கியம்.

ராமகப்பன்: அடேயப்பா! ஒரேயடியா ஒசத்திட்டியே!

பாஸ்கரன்: பாமா மிகைப்படுத்திச் சொல்லலே மாமா. குண சித்திரங்களைத் துல்லியமா வரைஞ்சிருக்கார். எந்த இடத்திலும் பிசிறு தட்டலே. நான் அமெரிக்காவிலே நாலு வருஷம் படிச்சுண்டும் வேலை பார்த்துண்டும் இருந்தவன். பிராட்வேலே சில ஹியூமரஸ் பீஸஸ் பார்த்திருக்கேன். காலகட்டு ஒண்ணும் குறைஞ்சு போயிட்டதா எனக்குத் தோணலே.

லலிதா: உம்...நடிப்பெல்லாம் எப்படி?

அம்மாஞ்சி: அதை நான் சொல்றேன். சாதாரணமா விமர்சகாள்ளாம் பலான நடிகர் நாடக கதாபாத்திரமாகவே மாறிட்டார்னு எழுதுவா. ஆனா இந்த நாடகத்திலே ரசிகர்களே ஒவ்வொரு நாடகப் பாத்திரமாகவும் மாறிடறா.

பாஸ்கர்: கரெக்டா சொல்லிட்டேள், அம்மாஞ்சி! ஆடியன்ஸ் ஐடென்டிஃபிகேஷன் ஸெவண்டி பர்ஸெண்ட் இல்லாவிட்டாலும் நைன்டி பர்ஸெண்ட் நிச்சயம் இருக்கு. யார் யார் நன்னா நடிச்சான்னு சொல்றதை விட யார் நன்னா நடிக்கலேன்னு சொல்றது ரொம்ப சுலபம்.

ராமகப்பன்: யாரு?

பாஸ்கரன்: ஒருத்தருமில்லே!

வாண்டு: அதாவது எல்லாரும் பிரமாதமா நடிச்சிருக்கா. அதைவிட அத்திம்பேர் பிரமாதமா நடிச்சார். அடல்ட்ஸ் சினிமா போறதாக! என்னை விட்டுட்டுத்தானே போனேள். இருக்கட்டும் கவனிச்சுக்கறேன். பூனைக்கும் ஒரு காலம் வரும். என் தயவும் உங்களுக்கு வேண்டியிருக்கும்.

ராமகப்பன்: பேசாம இருடா, அபஸ்மாரம்!

பாமா: இருந்தாலும் பூரணமும் சோபாவும் கிளாஸ்தான்.

பாஸ்கரன்: நோ, நோ, பாமா! அப்படிப் பிரிச்சுப் பேசவே கூடாதுங்கறேன். இட் இஸ் இ டீம் ஒர்க் விச் மாட்டர்ஸ். நம்ம வாண்டுப் பயல் மாதிரி நாடகத்திலே ஒருத்தன் வரானே அவன் நன்னா நடிக்கல்லேன்னா பூர்ணம் எடுத்துக்கற பிரயாசை யெல்லாம் வீணா யிடும். விழலுக்கு இறைத்த நீராயிடும். காட்சி முடியற கட்டத்திலே லைட்டை அணைக்கிறவர் எவ்வளவு முக்கியம் தெரியுமோ? எவ்வளவு எஃபெக்ட் உண்டாறது?

லலிதா: சரி, சரி. சாப்பிட்டுண்டே பேசலாமே? உட்காருங்கோ. பாமா நீயும் உட்காரு. ரெண்டு பேரையும் சேர்த்து மறுபடியும் மணையிலே உட்கார்த்திப் பார்க்கிறேன். எல்லோரும் சுத்தி உட்கார்ந்துண்டு பேசலாம்.

(அமர்கிறார்கள்)

ராமகப்பன்: டைரக்ஷன் யாரு?

பாஸ்கரன்: கே. எஸ். நாகராஜன். அழகா, அளவா செய்திருக்கிறார். ரொம்ப இயற்கையா டெவலப் பண்ணிண்டு போய், கடைசியிலே மெலொடிராமாவை 'ஓவரா' பண்ணிடாமே, ரசிகர்கள் இதயத்தைத் தொடுகிற அளவில் லேசா ஒரு சிக்கல் உருவாக்கி, அதற்கு எளிமையான ஒரு தீர்வு கண்டு, மறுபடியும் நகைச்சுவையை உச்ச கட்டத்துக்குக் கொண்டு வந்து ஜனகணமன ஒலிக்கிறச்சே உடம்பு சிலிர்த்துப் போச்சு.

பாமா: அது சரின்னா, இந்த மாதிரி நாடகங்களுக்கெல்லாம் ஆர்க்கெஸ்ட்ரா வேணுமா?

பாஸ்கரன்: யூ ஆர் ரைட். தேவையில்லே தான். ஆனா அதைச் சொன்னா 'என் பொழப்புலே ஏன் ஐயா மண்ணைப் போடறீர்?' என்று ஆர்மோனியம் வாசிப்பவர் கேட்பார். இருந்துட்டுப் போகட்டுமே. அதனால் நாடகம் கெட்டுப் போகல்லே. சம்பிரதாயத்தைக் காப்பாத்திண்டே புதுமையைப் புகுத்தினாப்போச்சு

வாண்டு: அப்பா! அம்மாஞ்சி டைரி எழுதறார்!

பாமா: ஐயய்யோ! வேண்டாம் அம்மாஞ்சி! நாடகத்திலே வந்த மாதிரி ஏதாவது வம்பிலே முடியப் போறது!

அம்மாஞ்சி: சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் நேராது. (படிக்கிறார்) மாப்பிள்ளையும் பாமாவும் கால்கட்டு நாடகம் போய்விட்டு வந்தார்கள். வீட்டில் நாடக விமர்சனம் நடந்தது. நாடகம் பிரமாதம், ஆனால் கதை தான் இல்லை என்பது தீர்ப்பு.

பாஸ்கரன்: நோ, நோ! கதை இல்லே, ஆனால் நகைச்சுவை இலக்கியம் இருந்தது; நாடகக் கலை இருந்ததுன்னு எழுதுங்கோ!

வாண்டு: நாளைக்கு வாக்கிங் போறச்சே மௌலியைச் சந்திச்சு, மறக்காம வாண்டுப் பயலுக்கு ஒரு ஒசிப் பாஸ் வாங்கித் தரணும்னும் எழுதிக்குங்கோ!

(திரை)

—குட்டி கிருஷ்ணன்



சென்னை மயிலாப்பூரிலுள்ள எம். லெட்சுமணாச்சார் (பார்மாஷெல் ஹெட் கிளார்க் Retd.) அவர்களின் புதல்வியும் Dr. M. N. மூர்த்தி (Professor. ASIAN Stasitical Institute. Tokyo. Japan) M. நாராயணமூர்த்தி C.A., M. கிருஷ்ண மூர்த்தி B. A., அவர்களின் சகோதரியுமான சௌ. சுதா B.A.வுக்கும், மதுரை சென்ட்ரல் எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் (தலைமை அலுவலகம்) எஸ். பீமராவ் அவர்கள் குமாரன் திரு B. குருராஜன், B, Sc., (Ag.) அவர்களுக்கும் சமீபத்தில் சென்னை, வேலூர் லட்சுமி அம்மாள் கல்யாண மண்டபத்தில் விவாஹம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



பாடுவோம் பாப் மியூசிக்!
14
கதை: தமயந்தி/ சாருகேசி
சித்திரம்: ராஜு
கந்தர்வ கான சபா நிர்வாகக் குழு தேர்தல் தொடருகிறது.
யார் சுப்பண்ணாவை ப்ரபோஸ் பண்ணினது? கெட் அப்!
ஹி ஹி... நான்தான், சுப்பண்ணாவேதான்.
ஹா ஹா ஹா ஹி ஹா.
உட்காரும் ஐயா. போய் உம்ம ஹோட்டல் பிஸினஸை எப்படி விருத்தி பண்ணுகிறது என்று பாரும். இங்கே கமிட்டி மீட்டிங் கூப்பிட்டால், கொத்தவால் சாவடிக்கு வரச் சொல்வீர். ஸிட் டவுன்.
அப்போ மிஸ்டர் எஸ்.எஸ். லிங்கத்தையே ப்ரபோஸ் பண்ணிடலாம்!
அது தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். ஸோ, மிஸ்டர் எஸ். எஸ். லிங்கம் தான் நம்ம கந்தர்வ கான சபா பிரசிடென்ட் இந்த வருஷத்துக்கு.
கங்கிராஜுலேஷன்ஸ்! கங்கிராட்ஸ் மிஸ்டர் லிங்கம்.
ரொம்ப நன்றி. சபாவுக்காக நான் அல்லும் பகலும் அனவரதமும் பாடு படுவேன்.
தொழிலேயும் கவனித்துக் கொள்ளும் ஸ்வாமி. அது தான் முக்கியம்!
பார்க்கில் ஒரு மரத்தடியில்; ஒரு பெஞ்ச்.
இதோ பாருங்கள் மிஸ்டர் அருண்! நீங்கள் சொன்னது பலித்து விட்டது. மிஸ்டர் எஸ்.எஸ். லிங்கம் கந்தர்வ கான சபா பிரசிடென்டாகி விட்டார். அப்பா விடாப் பிடியாக அவரை ப்ரபோஸ் பண்ணி ஜெயித்து விட்டார்.
ஓகே, மிஸ் வித்யா, ஓகே.


எனக்கு இனிமேல்தான் ஆபத்து. அப்பா அன்றைக்கே லிங்கத்தின் பிள்ளை பாலாஜியைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்றார்.
காரணம்?
பணத்தையும் அந்தஸ்தையும் விட என்ன முக்கிய காரணம் வேண்டும் அப்பாவுக்கு?
அப்போ நான் குட்டை சொல்ல வேண்டிய தருணம் வந்து விட்டது....
அருண்! அப்படிச் சொல்லாதீர்கள். அப்புறம் நான்...
ஹிந்துஸ்தானி மியூசிக் கற்றுக் கொள்ள வேண்டி வரும் என்கிறாயாக்கும்? குட். மிஸ்டர் பாலாஜிக்கு எப்போதும் பாடிக் காட்டலாம்...
உங்களுக்கு விளையாட்டாக இருக்கிறது. இதை எப்படி சமாளிப்பது என்று ஏதாவது யோசித்தீர்களா? நீங்கள் ஏதாவது பண்ணுங்களேன் மிஸ்டர் அருண். மிஸ்டர் லிங்கம் உண்மையிலேயே நியாயமான வழியில் சம்பாதித்த பணக்காரர்தானா? இல்லை குறுக்கு வழிப் பணக்காரரா?
மறுபடியும் சி.ஐ.டி. வேலையா? வித்யா, இது கொஞ்சம் ரிஸ்க்கி.
எனக்காக இதைச் செய்யக் கூடாதா? என் மனம் ஐஸ் கட்டியாக உருகுகிறது... உங்களுக்காகவே...
சொல்லும் போதே ஜில்லென்று இருக்கு டார்லிங்! இதோ போகிறேன். மிஸ்டர் லிங்கத்தின் தொழிலக ஆபீஸை ஓர் அலசு அலசி விடுகிறேன்!

தொடரும்

ராஜத்தின் கணவர் நடேசன், அன்று காலை ஆபீசுக்குக் கிளம்புகையில்தான் அந்த விஷயத்தைச் சொன்னார். அதுவும், ஏதோ அற்பமான விஷயத்தைச் சொல்வது போல், போகிற போக்கில் சொல்லிவிட்டுச் சென்றார்.

''ஆபீசிலே எனக்கு ஒரு போன் கொடுக்கலாமோன்னு யோசிச்சிண்டிருக்கா '' என்றார், வாசற்படி இறங்கியபடியே.

மத்தியான உணவுக்காகப் பிளாஸ்டிக் பையில் கட்டி வைத்திருந்த டிபனை அவரிடம் கொடுத்தவாறு ராஜம், '' ஏன் ? உங்களுக்கு ஒரு போன் இல்லையோ ?'' என்றாள்.

''ஆபீசுலே இருக்கு. நான் சொன்னது, என் சொந்த உபயோகத்துக்கு. அதாவது இந்த போன் நம்ம வீட்டிலே, இங்கேயே இருக்கும்.''

நடேசன் தெருவில் இறங்கி ந. .க்க ஆரம்பித்துவிட்டார்.

அவர் போவதைப் பார்த்தபடி நின்றிருந்த ராஜம், ''நம் வீட்டுக்கா டெலிபோன் வரப் போறது ? மீனு மாமி வீட்டிலேகூட டெலிவிஷன் முழங்கறதேயொழிய, டெலிபோன் கிடையாது. அப்படியிருக்க இந்த வீட்டிலே டெலிபோனு ?'' என்று மனத்துக்குள், பரபரப்பில், பலவாறாகப் பிரலாபித்துவிட்டு, பிறகு வீட்டுக்குள் கிடக்கும் வேலைகளின் நினைவு வரவே, உள்ளே சென்றாள்.

ராஜத்துக்கு இந்தச் சமயத்தில் நாற்பத்தைந்து வயது ஆகியிருந்தது. சிறிய உருவம். இளமையில் மிகவும் அழகாக இருப்பாள். இன்று, முகத்தில் ஒரு மறதிக்களை படர்ந்திருந்தது. நடேசனுக்குச் சென்ற மாதம் ஐம்பது முடிந்திருந்தது.

நடேசனுக்கு ஒரு தனியார் நிறுவனத்தில் உதவி மானேஜர் வேலை. அவருடைய வயதுக்கு அது பிரமாதமான வேலையில்லை. அவருடைய மேலதிகாரிகள் எல்லாரும் அவரைவிட வயதில் இளையவர்கள்தாம். இருந்தாலும், தம்முடைய இளமை முழுவதையும் கிளார்க் வேலை செய்தே கழித்துவிட்ட நடேசனுக்கு, விடா முயற்சியாலும், ஒருவிதமான உடும்புத்தனத்தாலும் மட்டுமே, கிடைத்திருந்த அந்தப் பதவியைப் பற்றி மனத்தில் பரம திருப்தி.

ஒரு நாள் நடேசனுடைய மானேஜர் (அவருக்கு முப்பது வயதிருக்கும். மிகவும் கவர்ச்சிகரமாக நடேசனை 'சார்' போட்டுப் பேசுவார்) அவருடைய ஆபீஸ் பக்கம் வந்த போது, ''சார்! உங்களுக்கு டெலிபோன் ஒன்று அனுப்பலாம் என்றிருக்கிறோம். நீங்கள் சரி என்று சொல்லுங்கள். உடனே உங்கள் வீட்டுக்குப் போன் வந்துவிடும்'' என்றார்.

மானேஜரின் பேச்சிலும், கவர்ச்சியிலும், அவர் தம்மிடம் காட்டிய மரியாதையிலும் கிறங்கிக் கொண்டிருந்த நடேசன், 'சரி' என்று சொல்லி வைத்தார்.


மானேஜருடைய இந்தத் தாராள புத்திக்குக் காரணம் இல்லாமல் இல்லை. கம்பெனியின் நிர்வாகத்தில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்ததால், இந்தச் சமயத்தில் ஆபீசில் ஒரு பரபரப்பான சூழ்நிலை நிலவி வந்தது. மற்ற எல்லோரையும்விட அதிக நாள் கம்பெனியில் இருந்த காரணத்தால், நடேசனுக்கும், அவர் ஜாக்கிரதையாகச் சேகரித்து வைத்திருந்த கம்பெனி விவரங்கள் அடங்கிய குறிப்புக்களுக்கும், இப்போது சற்று மவுசு ஏற்பட்டிருந்தது. இதன் விளைவுதான் மானேஜரின் வள்ளல்தனம்.

நடேசனும், வீட்டில் ராஜத்திடம் இந்த விஷயத்தைச் சொல்லி வைத்தார். ஆனால் அதன் பிறகு இரண்டு மாதங்கள் சென்றுவிட்டன. போன் வரவும் இல்லை. நடேசன் அதைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவும் இல்லை.



ராங் நம்பர்!

வெ.ஜானகி



இரண்டு மாதங்களுக்குப் பிறகு, நடேசனுக்கு டெலிபோன் இலாகாவிலிருந்து, அவருடைய விலாசத்தைக் குறித்து ஒரு கடிதம் வந்த பிறகுதான், அவருக்குத் தொலை பேசியின் நினைவு மீண்டும் வந்தது. அன்று மாலை ஆபீஸ் விட்டு வீடு திரும்பியதும் அவர் திடுதிப்பென்று, ராஜத்திடம், ''நாளைக்குக் காலையில் டெலிபோன் வைக்கிறதுக்கு ஆள் வருவான். எங்கே வைக்கணும்னு அவன்கிட்டே சொல்லு'' என்றதும், ராஜம் அவரைப் பார்த்து விழித்தபடியே நின்றுவிட்டாள்.

''நமக்கெதுக்கு போன் ?'' என்றாள் தயங்கியபடியே.

''இப்ப என்ன பண்ணணுங்கறே ?'' என்றார் நடேசன், சட்டென்று ஒரு கூர்மை குரலில் தெரிய, ''ஆபிசிலே போன் கொடுக்கறேங்கிறு. உனக்குப் பிடிக்கலேன்னு நீ அது கிட்ட போகாதியேன் ?'' என்றார்.

ராஜம் சட்டென்று திரும்பிச் சமையல் அறைக்குச் சென்று விட்டாள். நடேசனும் காப்பியைக் குடித்துவிட்டு வெளியே கிளம்பி விட்டார். ஆனால், ஒரு மணி நேரம் கழித்து, அவர் திரும்பி வந்தவுடன், நேரே சமையல் அறையை நோக்கித்தான் சென்றார்.

'' ராஜம் ?''

''என்ன?''

'' போனை ஹாலிலேயே வைத்துவிடச் சொல்லலாமா ?''

'' எனக்கென்ன தெரியும் ? உங்களுக்காக போன் வருகிறது. உங்களுக்கு எங்கேஇஷ்டமோ அங்கே வைக்கச் சொல்லுங்கள்.''

நடேசன் பேசாமல் ஹாலுக்குத் திரும்பி விளக்கைப் பொருத்திக் கொண்டு ஒரு பத்திரிகையை வாசிக்க ஆரம்பித்தார்.

மறு நாள் காலை, தொலைபேசி வந்து, அதை ஆபீஸ் அறையில் வைத்தும் ஆகி விட்டது. அவர்களுடைய டெலிபோன் சராசரி தொலைபேசிகளைவிடச் சற்று அழகாகவும், நாசுக்காகவும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. கறுப்பு பிளாஸ்டிக் எழுத்துக்களில் 46124 என்ற எண் பளிச்சிட்டது. எவ்வளவு அழகான விந்தை மிக்கதொரு பொருள் ?

நடேசன் அன்று காலை ஆபீசுக்குச் செல்வதற்கு முன்னர், பதினொரு மணி அளவில் வீட்டுக்குப் போன் செய்து அவளுடன் பேசுவதாகச் சொல்லியிருந்தார். அதற்காகத்தான் இப்போது ராஜம் காத்திருந்தாள். தானாக அவருக்குப் போன் செய்ய அவளுக்குச் சங்கோசமாக இருந்தது.

பதினொன்றாக இன்னும் கால் மணி நேரம் இருந்தது. ராஜம் அப்படியே ஜன்னல் விளிம்பில் தலை சாய்த்துக் கண் அயர்ந்து விட்டாள்.

ஒரு மணி நேரம் கழித்து அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். காரணம், போன் அடித்துக் கொண்டிருந்ததுதான்.

''ஹலோ'' என்றாள் ராஜம் மெதுவாக. பதில் இல்லை. இன்னொரு முறை பேச அவளுக்குத் துணிவில்லை. மெள்ள ரிஸீவரைக் கீழே வைத்தாள்.

'ஒரு வேளை இவர்தான் போன் பண்ணினாரோ ? என்ன அசட்டுத்தனம்! சரியாகப் பேசாமல் இருந்து விட்டேனே?'

தொலைபேசி மறுபடியும் ஒலித்தது.


ஒரு கண நேரத் தயக்கத்துக்குப் பிறகு கையை நீட்டி ராஜம் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ !''

''46124 ?''

''ஆமாம்.''

''டெலிபோன் டிபார்ட்மெண்டிலேயிருந்து பேசறோம்மா. கனெக்ஷன் சரியா யிருக்கான்னு டெஸ்ட் பண்ணறோம். அவ்வளவுதான். வைச்சுடுங்க....'' ராஜம் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு, எழுந்து காப்பி போடச் சென்றாள்.



புகை மோகம் குறைகிறது!

ஜப்பானில் புகை பிடிப்பவரின் எண்ணிக்கை குறையத் தொடங்கி யிருக்கிறது. சென்ற ஆண்டு சுமார் பதினெரு லட்சத்து பத்தாயிரம் பேர் புகை பிடிக்கும் பழக்கத்துக்கு முழுக்குப் போட்டு விட்டார்கள். ஜப்பானின் மொத்த மக்கள் தொகையில் இது ஏறத்தாழ ஒரு சதவீதமாகும். அந்த மட்டில் ஆரோக்கியம் தழைக்கிறது. —யு. பி. எஸ்.

குளித்துத் தலை வாரி, பொட்டு வைத்துக் கொண்டிருக்கும் பொழுது வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. நெற்றிப் பொட்டைச் சரிசெய்து கொண்டு, வாசல் பக்கம் வந்து கதவைத் திறந்தாள். மீனுட்சி மாமி வாசலில் நின்றிருந்தாள்.

'' வாங்கோ, மாமி !''

''உள்ளே வரதுக்கில்லே ராஜம். ஒரு டம்ளர் கோதுமை மாவு இருந்தால் குடேன்'' என்ருள்.

அதைப் பெற்றுப் படி இறங்கிக் கொண்டிருந்தவள், ஒரு கணம் நின்று, ''அது சரி. இன்னிக்குக் காலேயிலே, உங்க விட்டிலே என்ன வேலே நடந்தது ? ஆளெல்லாம் வந்திருந்தாளே? எங்க விட்டு மாமா பார்த்துட்டு, போன் கனெக்ஷன் கொடுக்கிறது போலே இருக்குன்னுர். ஆபீஸிலே கொடுத்திருக்காளா ?''

''ஆமாம், மாமி. ஆபீஸிலேதான் கொடுத்திருக்கா. பின்னே, எங்களுக்கு என்ன சொந்தமா போன் வாங்கி வைக்கக்கிற ஐவேஜ் இருக்கா?'' என்ருள் ராஜம் அழுத்தமாக.

மாமி தெருவில் இறங்கியபடி, ''அது என்னடீம்மா, அப்படிச் சொல்லிட்டே? உங்க மாமனுர் இருந்த செல்வாக்குக்கு டெலிபோன் என்ன, காரே வாங்கலாம். இப்படிப் பேசறயே ?'' என்று கூறிவிட்டு நடந்து சென்று விட்டாள்.

'இவ எங்காத்து போனே கவனிக்க வேண்னு நான் குறைப்பட்டேனு ? என்னத்துக்காக என் மாமனுரைப் பத்திப் பேசி என் ஆத்துக்காரர் கையாலாகாதவர்னு சொல்லிக் காட்டணும்? அடேயப்பா, நாக்கெல்லாம் விஷம் இந்த மாமிக்கு...'

நடேசன் நேரம் கழித்துதான் வீடு திரும்பி வந்தார். ராஜம் விளக்கு ஏற்றி வைத்து விட்டு, ஸ்தோத்திரங்களெல்லாம் படித்து முடித்து விட்டாள்.

வாசல் ரேழியில் அவர் செருப்பைக் கழற்றி வைக்கும் ஒலியும் அதன்பின், சட்டை, பாண்டைக் கழற்ற ஆபீஸ் அறைக்குள் செல்வதும் கேட்டது. ராஜத்தின் புலன்கள் அனைத்தும் அவர் ஆபீஸ் அறைக்குள் சென்று, போனைப் பார்க்கும் தருணத்தை எதிர்பார்த்து ஐக்கியமாயிருந்தன. விநாடிகள் கடந்து. நிமிடங்களாகிவிட்டன. ஐந்து நிமிடங்கள்... பத்து நிமிடங்கள்... அதற்கு மேல் ராஜத்தால் பொறுக்க முடியவில்லே. என்ன ஆகிவிட்டது ?

அவள் காப்பியை எடுத்துக் கொண்டு சமையல் அறையைவிட்டு வந்தாள். நடேசன் ஹாலில், ஊஞ்சலில் அமர்ந்திருந்தார். அவருடைய முதுகுப்புறம் அவளே நோக்கியிருந்தது. அசைவில்லாமல் அவர் உட்கார்ந்திருந்தவிதம் ஏதோ ஒருவிதத்தில் அவளேச் சங்கடப்படுத்தியது. அச்சுறுத்தியது.

காப்பியை ஊஞ்சல் மேல் வைத்து அவர் எதிரே நின்று கொண்டவள், அவர் முகத்தை ஆராய்ந்தவாறே, ''போன் வந்துடுத்தே ? பார்த்தேளா ?'' என்ருள்.

அவர் மெள்ளத் தலையைத் தூக்கி அவளேப் பார்த்துப் புன்னகை செய்தார். ''ஏன், நீங்க போனே பண்ணலே? பண்ணறேன்னு சொல்லியிருந்தேளே?''

''மறந்து போயிடுத்து ராஜம்!''

ராஜம் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டு காப்பியை டபராவில் கொட்டி ஆற்றினுள்.

''நம்மாத்திலே போன் வந்திருக்கிற சேதி எவ்வளவு சீக்கிரமா பரவிடுத்து தெரியுமோ? மீனுட்சி மாமி 'டாண்'ணு சாயந்திரம் வந்துட்டா, குசலம் விசாரிக்க....'' அவள் இலேசாகச் சிரித்தாள்.

''அப்படியா ?'' என்ருர் நடேசன்.

''அது மட்டுமா ?... இன்னிக்கு இந்தப் போனிலே தப்புத் தப்பா ஒரு நூறு 'காலா' வது வந்திருக்கும்.... ஆனுல் அதுவும் ஒரு சௌகரியமாப் போச்சு...மொதல்லே போனே தொடறதுக்கே பயமாயிருந்தது. இப்ப, தப்பு நம்பர்களோட நாள் முழுதும் பேசிப் பேசி, நல்ல தைரியம் வந்துடுத்து...ஒருத்தன் என்ன பண்ணினுன் தெரியுமோ ?''

''ராஜம்....!'' என்று இடைமறித்தார்.

ராஜம், தான் பேசுவதை நிறுத்திவிட்டு, அவர் முகத்தைக் கவனித்தாள். கையில் எடுத்த டம்ளரை, காப்பியைக் குடிக்காமலேயே கீழே வைத்த நடேசன், ''ராஜம்! எனக்கு வேலே போயிடுத்து'' என்ருர்.

ராஜம் அவரை ஒரு நிமிடம் மௌனமாகப் பார்த்தாள். பிறகு, ''என்ன சொன்னேள்?'' என்று கேட்டாள் மெதுவாக.

'' எனக்கு வேலே போயிடுத்துன்னேன், ராஜம். கம்பெனியிலிருந்து என்னே நீக்கிட்டா....!''

''ஏனும் ?''

'' 'ஏன்'னு? இப்பத்தான் கிழம்கட்டைகளே யெல்லாம் உத்தியோகத்துலே வச்சக்க வேண்டாம்னு ஆர்டர் வந்திருக்கே? அதுனுலே.... மூனு மாசம் நோட்டீசு கொடுத்திருக்கா. ஆனுல் நான் நாளையிலிருந்து ஆபீஸுக்குப் போகாட்டாக்கூடப் பரவாயில்லே. அங்கே ஒருத்தரும் எனக்காக அழப் போறதில்லே.''

''பின்னே, என்னத்துக்குப் போனேயும் கீனேயும் தூக்கிக் கொடுத்தானாம்?''

''அது ரெண்டு மாசத்துக்கு முன்னுலே தோணினது. இப்ப வேறே மாதிரி சட்டம் வந்திருக்கு. யார் என்ன பண்ண முடியும் ? நம்ப அதிர்ஷ்டம் அவ்வளவுதான்.....''


ஹேலோ ஷாம்பூகள்-உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே...
உங்கள் கேசம் மிருதுவாகவும், பட்டுப் போன்றும் திகழவே, உபயோகிப்பீர்
ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ
உங்கள் கேசம் இன்று போல் என்றும் அழகுடன் விளங்க உபயோகியுங்கள் ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ. இதன் விசேஷமான, சீரான, சிறந்த உத்தியினால், உங்கள் கேசத்திற்கு இயற்கையிலேயே அமைந்துள்ள பட்டுப்போன்ற தன்மை மீண்டும் கிடைத்துக் கொண்டே இருக்கிறது.
New
Halo
SHAMPOO
HSR.G.4 TM
இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு —ஹேலோ கேசப் பராமரிப்பு!
ஹேலோ எக் ஷாம்பூ: விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக, உங்கள் கேசம் கட்டுக் கோப்புடன் கவர்ச்சியாகத் திகழ்கிறது.
ஹேலோ லெமன்-ஃப்ரெஷ் ஷாம்பூ: உங்கள் கேசத்திற்கு இயற்கையான, தூய்மையான பளபளப்பைத் தருகிறது.
ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ: ஏராளமான நுரைவளத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.
EGG
LEMON-FRESH
CONCENTRATE
Halo
ஹேலோ ஷாம்பூகள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப் படுகின்றன.

ராஜம் ஆபீஸ் அறையின் பக்கம் நோக்கினாள். நீண்டதொரு பெருமூச்சு அவள் நெஞ்சத்தில் எழுந்து அடங்கியது.

'மீனாட்சி மாமிக்குக் கொண்டாட்டம் தான்! 'என்னடி இது? ஆபீஸிலே போன் கொடுத்த வேலை, வேலையே போயிடுத்தே?' என்று அங்கலாய்த்துச் சந்தோஷப்படுவாள்.

'அவகிட்டேயிருந்து சேதி கேட்டுண்டு, தெருக்காராளெல்லாம் வந்து துக்கம் விசாரிச்சுட்டுப் போவா. அது போகட்டும். இன்னும் பிள்ளைகள் கல்யாணமெல்லாம் பாக்கியிருக்கு. கீதாவுக்குப் பிரசவம், இன்னொண்ணுன்னு செய்யணும்....!'

மின்னல் வேகத்தில் இந்த எண்ணங்கள் எல்லாம் அவள் மனத்தில் ஓடி மறைந்தன. அதே சமயம், தலையைக் குனிந்தபடி அமர்ந்திருக்கும் கணவனை நோக்கிப் பச்சாத்தாபம் ஒரு பந்து போல் எழுந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. சட்டென்று ஊஞ்சல் பலகையின்மேல் படிந்திருந்த அவருடைய கையை எடுத்து, தன் இரு கைகளுக்கும் நடுவே வைத்துப் பிடித்துக் கொண்டு, ''அப்பாடா ! நல்ல காரியம்தான் நடந்திருக்கு! உங்களுக்கோ வயசு ஐம்பதாச்சு. பிடிவாதமும் அதிகம். தலையைக் காலை வலிச்சாக் கூட வேலைக்குப் போகாமலிருக்க மாட்டேள். அவாளா ஓய்வு கொடுத்ததினால் எனக்குத் திருப்தி'' என்றாள்.

''நிஜமாகவா சொல்றே ராஜம் ? உனக்கு வருத்தமாயில்லே ?''

''எதுக்கு வருத்தம்? நமக்கென்ன வீடில்லையா ? ஏதோ கொஞ்சம் பணம் பாங்கியில் இல்லையா ? குழந்தைகளும் நல்ல நிலைமையிலே இருக்கா ! நானே கவலைப்படலே. நீங்க எதுக்கு வேலை வேலைன்னு தவிக்கிறேள் !'' ராஜம் பேசிக் கொண்டே போனாள்.

நடேசனுக்கு மெள்ள மெள்ளத் தெளிவு பிறந்தது.

டெலிபோன் மணி ஒலித்தது.

''46324 இல்லே இது ?''

''இல்லே. இது 46124 !''

''அப்படியா, ராங் நம்பர், ஸாரி !''

ராஜம் ரிஸீவரைப் போனின் மேல் பொருத்தி விட்டு நிமிர்ந்து ஹாலில் உட்கார்ந்திருந்த நடேசனை நோக்கினாள்.

''யாரு ராஜம் ?''

''ராங் நம்பர் ! இன்னிக்கு இது நாலாவது !''

அவர்கள் இருவரும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு மெள்ள எதை எதையெல்லாமோ நினைத்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தனர் !

அசட்டு அம்பி அடித்த ஜோக்குகள்!



அம்பி: Hold my Cycle என்பதற்கு அதே அர்த்தத்தில் ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை இருக்கு. அது என்ன?
தம்பி: தெரியாது!
அம்பி: அதுதான், Encyclopedia. என் - சைக்கிளோ - பிடியா.

அம்பி: உலகத்திலேயே பெரிய கண்டம் எது. தெரியுமாடா?
தம்பி: தெரியாது!
அம்பி: எம கண்டம் !

அம்பி: உனக்கு மொத்தம் இருப்பது மூன்று கைகள். எப்படி?
தம்பி: எனக்குத் தெரிந்தது ஒன்று இடக்கை, இரண்டு வலக்கை. மூன்றாவது என்ன?
அம்பி: அசடே! அதுதான் வாழ்க்கை.

அம்பி: தண்ணீரே இல்லாத பெருங்கடல் உலகத்தில் எங்கு பார்க்கலாம்?
தம்பி: அது எப்படித் தண்ணீர் இல்லாத கடல் இருக்கும்? தெரியலையே.
அம்பி: இது தெரியலையா? Atlasல் பார்க்கலாம்.


அம்பி: நான் நன்கு கிரிக்கெட் ஆடுவேனே!
தம்பி: நம்ப அப்பா பெரிய கிரிக்கெட் பிளேயர். அதனால் நீயும் ஆடறே. மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கணுமா என்ன?
அம்பி: சேச்சே.நிஜமா எனக்கு நீந்தவே தெரியாது.

அம்பி: கந்தக அமிலத்தைக் கண்டுபிடித்தது யாரு?
தம்பி: அது....தொண்டையில் இருக்கு. ஆனா வெளியே வரமாட்டேங்கறது.
அம்பி: அசடு.... முழுங்கித் தொலைக்காதே விஷம்!

ச.வி. சுரேஷ்

வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை கால்ஷியம்-ஸாண்டோஸ்®

ஸ்விட்சர்லாந்தில் ஸாண்டோஸ உருவாக்கியுள்ள,
உலகிலேயே தலைசிறந்த கால்ஷியம்



கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புக்களிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர் கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.
வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் நலமுள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே, பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்-ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும் வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வில்லைகள் தினமும் தேவை எவருக்கும்

cCA/CS/15 I TAM

அவர்கள் கும்பலாகக் கலந்து நின்றிருந்தார்கள். ஒழுங்கு இல்லை. ஆனால் ஒற்றுமை தெரிந்தது. அவர்கள் பலர். கிட்டத்தட்ட அறுநூறு பேர் இருக்கலாம். எல்லாம் ஒரு குறிப்பிட்ட வயதுக்குள் அடக்கம். பதினெட்டிலிருந்து இருபத்தொன்று. இளமை தெறித்துக் கொண்டிருந்தது. ஒரு மூர்க்கத்தனத்துக்குத் தயாராக இருந்தார்கள்.

நான் அவர்கள் முன்னால் வர நேர்ந்திருக்கிறது. எனக்கும் அவர்களுக்கும் துளிச் சம்பந்தமில்லை. ஆனால் என் கடமை அப்படிப் பட்டது. இந்த நாடு, இந்த அரசாங்கம், தன் சுய கணிப்பின் பின்னணியில் என் தேவையை உணர்ந்து எனக்கு முக்கியத்துவம் கொடுத்து என்னை நிறுத்தி யிருக்கிறது. நான் போலீஸ். என் பரிவாரங்களின் விரைப்பான யூனிபாரத்தின் விளிம்பில் 'ரிசர்வ்' என்னும் பச்சைத் தகட்டுச் சட்டி பளபளத்தது. என் ஆட்கள் கொஞ்சம் பேர். மூன்று சப்-இன்ஸ்பெக்டர்கள், பதினெட்டு ஜவான்கள். எங்களிடம் துப்பாக்கி இருந்தது. குண்டாந்தடி இருந்தது. இந்த நாடு, என் குண்டாந்தடி, என் துப்பாக்கி ரவை இவற்றை நம்பித் தன் அமைப்பை, தான் படைத்திருக்கும் சட்டங்களைப் பாதுகாக்க என்னை நிறுத்தியிருக்கிறது. காந்தியத்துக்கு இங்கு வேலையில்லை.

அந்தக் கல்லூரியின் மாணவர்கள் அவர்கள். கல்லூரிக் கேட்டின் விளிம்பில் அவர்களது 'ஸ்டிரைக்' தொடங்கி, ரோட்டின் நெடுகே, ஒரு பெருங் கும்பலாகப் படர்ந்து கிடந்தது. உடைந்து கொண்டிருக்கும் அணையின் நீருக்கும் இவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. அவர்களில் எத்தனை ரகங்கள்!

கம்பி வலையால் மூடிக் கொண்டு பிரம்மாண்ட உறுமலுடன் வந்து நின்ற என் வெள்ளை லாரியைக் கண்டதும் அவர்களுக்குள் ஒரு பரபரப்பு. நான் அடுத்து என்ன செய்வது என்று யோசிப்பதற்குள் அவர்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள். திடீரென்று குரல்கள்!

''பிரின்சிபால்!''

''டெளன், டெளன்!''

ஒரே குரலாக எப்படி மாறி விட்டார்கள்! அவர்கள் உணர்ச்சியின் வேகத்தில் என் காக்கிச் சட்டைக்குள் புல்லரித்தது. இது அவசியம்தானா? நான் யோசித்தேன்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் உடைத்துக் கொள்ளப் போகும் அந்த அணையை என் குரலின் ஆணையால் தடுக்க வேண்டும். வெள்ளத்தைத் திசை திருப்ப வேண்டும். என் முயற்சியில் அந்த மாணவர்களின் உணர்ச்சிகள் ரத்த விளாறுகளாக முகத்தில் தெறிக்கும்படி செய்ய நேரிடலாம். காந்தியத்தின் நம்பிக்கை சிதறச் சிதற அடிக்கப் போகிறேன். அவர்களைத் திணற அடித்து அவர்களது சக்தியைத் திசை திருப்ப வேண்டும். அது என் வெறி பிடித்த எண்ணமல்ல. என் யூனிபாரத்துக்கும் என் குண்டாந்தடிக்கும் அதுதான் வேலை. அதுதான் சட்டம்.

ஒருவர் பாக்கி யில்லாமல் விரட்டி அடித்து அந்த இளமை தெறிக்கும் இடத்தைச் சூனியமாக்கப் போகிறேன். அங்கு



முனகலும், தோல்வியின் ஆத்திரமும் பயம் கலந்த ஒலமும், மூர்க்கத்தனமான வன்முறையும் படைக்க நேரிடலாம். அழகான, சைத்திரிகனின் ஓவியத்தில், மையை விசிறி அடிக்கப் போகிறேன்.

அவர்களோடு என் சம்பந்தத்தை இப்படித்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய திருக்கிறது. நான் போலீஸ். என் காக்கிச் சட்டையை மாட்டிக் கொள்ளுவதற்கு முன் இதயத்தைக் கழற்றி வைத்துவிட வேண்டும்.

காரிலிருந்தபடியே நான் கணக்கிடுகிறேன். அவர்களில் சிலர் கையில் பிடித்திருந்த போஸ்டர்களில் உரிமைக் கோஷங்கள்.

'வி வாண்ட் யூனியன்', 'யூனியன் கொடு', 'டௌன் வித் தி பிரின்சிபால்', 'அடக்குமுறை ஒழிக', 'மாணவர்களை மதி'. — உரிமைக் கோஷங்கள். உரிமைகள் எப்போதும் எங்கும் நிரப்பப்படுவதில்லை. அதனால்தான் ஏற்றத் தாழ்வுகளோ? அதனால்தான் வர்க்க பேதங்களோ!

காரிலிருந்து இறங்கி அந்தக் கல்லூரியைப் பார்க்கிறேன். அக்கல்லூரி எனக்குப் புதிதல்ல. பிரும்மாண்டமான மூன்று மாடிக் கல் கட்டிடம் அது. கம்பீரமும், தனி அமைதியும் கொண்டது. மற்றொரு கேட் அருகில் நடக்கிறேன். காவல்காரர் பூட்டியிருந்த கதவைத் திறந்து என்னை உள்ளே விட்டார்.

''பிரின்சிபால் எங்கே?''

''உள்ளே இருக்கிறாருங்க.''

''வேறு ஏதாவது கலாட்டா நடந்திச்சா?''

''இல்லிங்க.''

இன்னும் அணை உடைபடவில்லை. அது உடைந்துவிடக் கூடாது. அந்தக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்க்கிறேன். கண்ணாடி ஜன்னல்கள் சதுரச் சதுரக் கட்டங்களாக உயர்ந்து நின்றன. மரங்கள் சூழ்ந்த பாதையின் வழியே நடக்கிறேன், கல்லூரியின் நுழை வாசலை நோக்கி. அதே மரங்கள்தான் இன்னும் இருக்கின்றன. இன்றும் அவை அதே போல் அடர்ந்து ஒரு நிழலான இருட்டையும் மனத்துக்கு இதத்தையும் தருகின்றன. அந்தப் பாதையின் முடிவில் மூன்று பாதைகள் சந்திக்கும் இடத்தில் அதே சிலை இருந்தது. ஏசுவின் சிலை. கைகளைத் தூக்கியவாறு கான்க்ரீட்டில் செய்யப்பட்டு, சுண்ணாம்பு பூசிய வெண்மையான அதே சிலை. புனிதமானதாக நான் கருதி வந்த சிலை.

அது ஒரு கிறித்துவக் கல்லூரி. மிஷன் ஒன்றின் ஆதரவில் நடக்கும் கல்லூரி. மிகச் சிறந்த ஒழுக்கமும், கட்டுப்பாடுகளும் அதன் பெருமையை உயர்த்தியிருக்கின்றன. அந்தக் கல்லூரி மாணவன் என்றாலே ஒரு தனிச் சிறப்பு இருக்கும். அந்தக் கல்லூரியில் நான் ஒரு பழைய மாணவன். எட்டு வருடங்களுக்குப் பிறகு நான் அதற்குள் பிரவேசிக்கிறேன். மாணவப் பருவத்துச் சட்டை இல்லை இப்போது. ஒரு பொறுப்புள்ள டி. எஸ். பி. ஆக, ஓர் அரசாங்க ஊழியனாக நான் அங்கே நிற்கிறேன். முன்னால் இந்தக் கல்லூரியில் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தேன். அன்று அதே கட்டுப்பாட்டைக் காப்பாற்றப் போகிறேன். வீட்டில் கழற்றி வைத்துள்ள என் இதயம் என்னுள் எப்படி வந்தது? என் பழைய காலத்தின் நினைவுகள் எப்படி அதில் வந்தன?

இதோ இந்த இடத்தில்தான் நாங்கள் கும்பலாக நின்று அரட்டை அடிப்போம். 'பார்க்' போல அழகாக அமைக்கப்பட்டிருந்த அந்தச் சோலையின் பெஞ்சுகளில், ஷேக்ஸ்பியரையும், டால்டனின் அணுக் கொள்கையையும், பிதகோரஸின் பரிமாணங்களையும் அலசி அலசி நெட்டுருப் போட்டிருக்கிறேன். இதோ இந்த இடத்தில், ஞாயிற்றுக் கிழமைகளில் தனிமையை நாடி, பெஞ்சில் ஏகாந்தமாகப் படுத்துக் கொண்டு, உயர்ந்த அந்த வில்வ மரங்களின் இடைவெளியில் நீல வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பேன். மாடி வராந்தாவில் வகுப்பறையின் வெளியே கைப்பிடிச் சுவர் அருகே நின்று, வாசலில் டவுன் பஸ்ஸில் வந்து இறங்கும் மாணவர்களை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருப்பேன். இந்தப் பாதையில்தான் என். ஸி. ஸி. பரேடுகளின்போது பூட்ஸ் கால்கள் ரிதமாகச் சப்தமிட ஓடியிருக்கிறேன். அதோ அந்தச் சின்னத் தேவாலயத்தின் மூடிய கதவுகளுக்கு வெளியே, உயர்ந்த படிக்கட்டின் கடைசிப் படியில் அமர்ந்து என்னுடைய ஹவாலோ கிதாரின் டென்ஷன் நரம்புகளில் ''ப்ளு ப்ளு லவ் இஸ் ப்ளு'' என்று இசைத்திருக்கிறேன். இந்த ஆடிட்டோரியம், லைப்ரரி, கேன்டீன்.... என்ன இனிமையான நாட்கள்!

அன்று சட்டத்தை நான் சுமக்கவில்லை. அதைக் காப்பாற்ற வேண்டிய கவலை எனக்கு இல்லை. என் உலகத்தை இங்கே நான் வரைய முயன்றேன். சமுதாயத் தச்சர்களை உருவாக்கும் இந்தப் பட்டறையில்தான் போலீஸாக உருவானேன். ஆனால் ஒரு காலத்தில் நானும் மாணவன். மாணவர்களின் உணர்ச்சி முழுமையும் எனக்கும் இருந்திருக்





"தோல்வி மேல் தோல்வி"

1831-ல் வியாபாரத்தில் தோல்வி
1832-ல் சட்டசபைத் தேர்தலில் தோல்வி
1833-ல் வியாபாரத்தில் மறுபடியும் தோல்வி
1834-ல் சட்டசபையில் தோல்வி
1836-ல் சட்டசபைத் தலைவர் தேர்தலில் தோல்வி
1840-ல் எலக்டர் தேர்தலில் தோல்வி
1843-ல் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
1848-ல் காங்கிரஸ் தேர்தலில் மறுபடியும் தோல்வி
1855-ல் செனட் தேர்தலில் தோல்வி
1856-ல் உதவி ஜனாதிபதி தேர்தலில் தோல்வி
1858-ல் மறுபடியும் செனட் தேர்தலில் தோல்வி

இவ்வளவு தோல்விகளையும் சந்தித்தவர் யார் தெரியுமா ? ஆபிரகாம் லிங்கன்தான். இறுதியில் 1860-ல் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார்.

-- உதகைநாதன்

கிறது. இன்று என் சமூகம் தனி. நான் போலீஸ்.....

''குட் மார்னிங்''. குரல் கேட்டுப் பார்க்கிறேன். வெள்ளைக் கவுனும், சிவப்புக் கச்சையுமாகப் பிரமச்சரியத்தைச் சுமந்து கொண்டு பிரின்ஸிபால் நின்றார். என்னுடைய 'குட்மார்னிங்கி'ல் அவரைத் தெரிந்துகொள்கிறேன். அதே தோற்றம். அதே முக பாவம். அதே தோரணை. ரெவரெண்ட் ஃபாதர் மால்கம்.

''ஃபாதர்! என்னைத் தெரிகிறதா? நான் உங்க ஸ்டூடண்ட்.'' என் கை தொப்பியை எடுத்து மரியாதை செய்தது.

சில விநாடிகளில் அடையாளம் கண்டு கொண்டார்.

''ஓ நீயா? ... எப்படி இருக்கே? நீதான் அந்தப் புது டி. எஸ். பி.யா?''

''ஆமாம்'' என்றவன் கடந்த காலத்தைச் சொன்னேன். நேராக விஷயத்துக்கு வந்தேன்.

''என்ன ஃபாதர் பிரச்னை?''

''உனக்குத் தெரியும். நீ படிச்ச காலத்தில் இங்கே யூனியன் இருந்ததா? முப்பத்தெட்டு வருஷமா ஸ்டூடண்ட் யூனியன் இல்லாம இந்தக் கல்லூரி நடந்திருக்கு. இப்பவும் அவசியமில்லை. தேவையில்லாம இவங்க கலாட்டா செய்யறாங்க. யூனியன் கொடுத்தா அவங்க நம்மை விரட்ட ஆரம்பிச்சுடுவாங்க. எங்க நிர்வாகம் ஒத்துக்கலே.''

அதைத் தடுக்க வேண்டும். அதை நிறுத்தியாக வேண்டும். மாணவர்களின் முகத்தில் வழியப் போகும் ரத்தக் கோடுகளை நான் வரையத் தயாரில்லை. விழுந்துவிட்ட மாணவர்கள், அவசரமாகக் கர்சீப் கொண்டு காயத்தை அழுத்திக் கொண்டு போலீஸ் இல்லாத பக்கமாக ஓடும் மாணவர்கள்...சே ! அந்த நிலைமை வராது. வர விடக் கூடாது. பேசு.... பேசு!

''ஃபாதர், நான் ஒன்று சொல்லலாமா?'' என்கிறேன்.

''சொல்.''

''ஸ்ட்ரைக்கை நிறுத்த வழி இருக்கிறதா?''

''இருக்கிறது. இந்த நிர்வாகம் பணிய வேண்டும் அல்லது கல்லூரியை இழுத்துப் பூட்ட வேண்டும்.'' பிரின்ஸிபால் வெறும்புடன் என்னைப் பார்த்தார். அவர் பார்வையில் நான் 'லாயக்கற்றவ'னாகப் பட்டேன்.

''அவர்கள் ஃபுல் ஸ்விங்கில் இருக்கிறார்கள். கலாட்டா வரும்.''

''உன்னை எதற்காக வரச் சொல்லியிருக்கிறது. வேடிக்கை பார்க்கவா?...'' பிரின்ஸிபால் சீறினார்.

'' யூ னி ய ன் தா னே கேட்கிறார்கள், கொடுத்துவிட்டால்தான் என்ன?''

''ஒன்று செய். உன் யூனிஃபாரத்தைக் கழற்றி வைத்துவிட்டு வாசலில் போய் அவர்களோடு நில்லு.'' பிரின்ஸிபால் காட்டமானார். அதே கண்டிப்பு. அதே விறுவிறுப்பு. என்னை உருவாக்கிய சிற்பி அவர். அவர் எண்ணம் வேறு. என் எண்ணம் வேறு.

''பேசித் தீர்த்துக் கொள்ளலாமே?'' என் குரல் வெளியில் கேட்டதா என்று தெரியவில்லை.

பிரின்ஸிபால் அமைதி யடைந்திருந்தார்.

''பேசினேன். சமாதானம் செய்தாயிற்று. அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அந்த மாணவர் தலைவனுக்கு பொலிடிகல் சப்போர்ட் இருக்கு. நம்மை மிரட்டுகிறான் அவன் !''

நான் குழம்பினேன். அடுத்து என்ன செய்வது? அரசியல் பின்னணி உடைய மாணவர் தலைவன், பிடிவாதமான பிரின்ஸிபால். இருவருமே முடிவுக்கு வரப் போவதில்லை.

என் கண் முன்னால் மாணவர்கள் தெரிந்தார்கள். அவர்கள் குண்டாந்தடியால் அடிபட்டு, கண்ணீர்ப் புகையில் சிக்கி, 'டொம்' 'டொம்' என்று பெரும் கற்களை வீசி, கல்லூரிக் கண்ணாடிகள் மீது. போலீஸ் மீது. போலீஸ் லாரி மீது வீசி.... வேண்டாம். எப்படியாவது தடுத்து நிறுத்து. முயற்சி செய்.

மாணவர்களின் கோஷம் மீண்டும் கேட்கத் தொடங்கியது. யாரோ வந்திருக்க வேண்டும். அல்லது கல்லூரியில் யாரோ தென்பட்டிருக்க வேண்டும். என் காக்கித் தொப்பியினுள் தலை கனத்தது. நின்றேன்.

''உங்கள் முடிவுதான் என்ன ஃபாதர்?''

''பையன்களைக் கலைந்து போகச் சொல்லு. நாளைக்குக் கிளாஸுக்குப் போகச் சொல்லு.''

நான் எழுந்தேன். அந்த நீண்ட வராந்தாவில் நடந்தேன். இந்த வராந்தாவில் எட்டு வருடங்களுக்கு முன் ஒரு நாள் நடந்த ஸ்டிரைக்கை நினைத்துப் பார்த்தேன். ஒன்று விடாமல் நினைவில் தட்டியது.

அப்போது நான் ஃபைனல் இயர் படித்துக் கொண்டிருந்தேன். ஹாஸ்டல் மெஸ்ஸில் ஒரு கலாட்டா. அதைப் பயன்படுத்தி மாணவர்கள் யூனியன் வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். பிரின்ஸிபால் பையன்களை அடக்க நினைத்தார். 'யூனியன் தர முடியாது' என்று முடிவாகத் தெரிவித்து விட்டார். மாணவர்கள் பாதிப்பேர் வெளியில் நின்றனர். மீதிப்பேர் பயந்து, ஸ்டிரைக்கில் நம்பிக்கை

கதிராமங்கலம் ஸ்ரீ வனதுர்கா பரமேஸ்வரி கோடி அர்ச்சனை



கவிச்சக்கரவர்த்தி கம்பரால் கதிர்வேய்ந்தமங்கலம் எனச் சிறப்பிக்கப்பெற்ற கதிராமங்கலத்தில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ வனதுர்கா பரமேஸ்வரிக்கு லோக க்ஷேமார்த்தமாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பரமாசாரியாள் அனுக்ரஹத்துடனும், திருப்பனந்தாள் காசிமடத்ததிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார ஸ்வாமி தம்பிரான் அவர்கள் ஆதரவுடனும் கோடி அர்ச்சனை நடந்து வருகிறது. இதுவரை 34 லக்ஷம் அர்ச்சனைகள் மட்டுமே நடந்துள்ளன. பக்தர்கள் இப்புண்ணிய கைங்கர்யத்துக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்யுமாறு கோரப்படுகிறார்கள். மிஞ்சும் தொகையைக் கொண்டு ராஜகோபுரத் திருப்பணி செய்வதால் அதற்கும் உதவியவர்களாவார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஸ்ரீ K.V. சுவாமிநாதன், பொருளாளர், ஸ்ரீ வனதுர்கா பரமேஸ்வரி கோடி அர்ச்சனைக் கமிட்டி கதிராமங்கலம், P. O. குத்தாலம் வழி, தஞ்சை மாவட்டம்

மாயவரம் பைனான்ஷியல் கார்ப்பொரேஷன்

லிமிடெட்

பதிவு அலுவலகம்: **13-H, கச்சேரி ரோடு, மாயவரம்-609001**

31-3-1976 முடிய

1.	அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 5 லட்சம்
2.	செலுத்தப்பட்ட மூலதனம் & ரிசர்வுகள்	ரூ. 5.5 லட்சம்
3.	நடைபெறும் சீட்டுகளின் மதிப்பு	ரூ. 8 கோடிக்கு மேல்

கிளை அலுவலகங்கள்

மாயவரம், காரைக்கால், பாண்டிச்சேரி
திருப்பாப்புலியூர், கும்பகோணம், தஞ்சாவூர்
சிதம்பரம், சென்னை, காஞ்சிபுரம்

"உயர்துகை ஏலச் சீட்டு நடத்துபவர்கள்."


மாயவரம்
27-5-76

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் டைரெக்டர்





ஆராய்ச்சிகளும், நிலத்தில் சோதனைகளும் இதை நிரூபித்துள்ளன!
ஸைகோஸெல் 45% வரை பயிர் விளைச்சலை அதிகரித்துள்ளது.
ஏனெனில் **ஸைகோஸெல்** அதிகபட்ச பருத்திக்காய் விளைச்சலுக்கு வழிசெய்வதுடன், தேவையற்ற இலைதழைகளை குறைந்தபட்ச அளவில் வைத்திருக்கிறது. **ஸைகோஸெல்** பிரயோகத்திற்கு உட்பட்ட பருத்திச் செடிகள் கச்சிதமாகவும், வலுவாகவும் அமைவதுடன் கரும்பச்சை இலைகளையும், விரைவில், மேலும்சீரான மொட்டுகளையும் பெறுகின்றன. இவ்வாறு **ஸைகோஸெல்** இடம், நீர் மற்றும் ரசாயன உரத்தை மிச்சப்படுத்துகிறது; செடிகள் அழுத்த நிலைகளை நன்றாகத் தாங்கும் சக்தியைப் பெறுவதுடன், சில நோய்களையும், பூச்சிகளையும் எதிர்க்கும்திறனையும் பெறுகின்றன.
எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது என்னவென்றால், **ஸைகோஸெல்** பிரயோகத்திற்கு உட்பட்ட செடிகளில் காய்கள் பெரியனவாகவும், சிறந்த தரம் வாய்ந்தவையாகவும், அதிகமான பருத்தியைத் தருபவையாகவும் இருக்கின்றன.
லாபத்தில் நாட்டமுடைய பருத்தி சாகுபடியாளர்கள் அதிக விளைச்சலையும், அதிக லாபங்களையும் பெறுவதற்கு **ஸைகோஸெல்** செடி வளர்ச்சி ரெகுலென்டை உபயோகிக்க போதுமான காரணம் இது.



CYANAMID

விவசாயப் பிரிவு, ஸயனமைட் இந்தியா லிமிடெட்,
த.பெ. எண் 9109 பம்பாய்-25.

CIL-389

யின்றி உள்ளே சென்று வகுப்பில் உட்கார்ந்து விட்டோம். வெளியில் இருந்தவர்கள் உள்ளே இருந்தவர்களைக் 'கருங்காலிகள்' என்றும், 'பொட்டைப் பசங்கள்' என்றும் கேலி செய்தார்கள். கற்களை வீசினார்கள். பிரின்ஸிபால் போலீஸைக் கூப்பிட்டார். போலீஸ் வந்தது. அடக்கிப் பார்த்தார்கள். வெளியில் நின்றவர்கள் கல்லூரிக்குள் நுழைந்தனர். போலீஸ் துரத்தி அடித்தது. வகுப்பறையில் அமைதியாகப் படித்துக் கொண்டிருந்தவர்களை அடிக்க ஆரம்பித்தனர். நாங்கள் ஓடினோம். லாபரட்டரியின் கண்ணாடிகள் நொறுங்கின. கல்லெறி தொடர்ந்தது. நானும் சில மாணவர்களும் ஒரு வழியாகத் தப்பி வராந்தாவில்ஓடினோம்.ஓர் அப்பாவி மாணவன்வெளியேறினால் போதும் என்று வெளியில் ஓடினான். போலீஸார் அவனைச் செம்மையாகத் தாக்கினார்கள். கொஞ்ச நேரத்தில் அடி தாளாமல் அவன் கீழே விழுந்து விட்டான். அதுவரை பயந்து கிடந்த எங்கள் உணர்ச்சி விழித்துக் கொண்டது. ஆத்திரம் எங்கள் கண்களை மறைத்துவிட்டது. நாங்கள் ஏழு பேர். அந்த ஜவான் மீது நாங்கள் பாய்ந்தோம். அவர் உறுமினார். அவர் கைத்தடியைப் பிடுங்கி எறிந்தோம். தொப்பி தரையில் பறந்தது. ஐந்து நிமிடங்களில் கீழே கிடந்தார். கீழே கிடந்த அந்த மாணவனைத் தூக்கிக்கொண்டு சந்தடியற்ற இடத்தை நோக்கி ஓடினோம். என் கர்ச்சீப்பால் இரத்தம் வழிந்துகொண்டிருந்த அவன் தலைக் காயத்தில் அழுத்தினேன். அவன் முனகினான். "ஐயோ அம்மா.! என்னை வீட்டில் கொண்டு விட்டுடுங்க..." அவன் இதயம் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. என் இருதயமும்தான்.


...இன்றும் அதே போராட்டம். இன்னும் அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு யூனியன் கொடுக்கப்படவில்லை. யாரோ சிலருக்காக ஏன் இந்தத் துயரங்கள்? ஒரு மாணவனின் அரசியல் செல்வாக்கு பலம் மிக்கதுதானா? நிர்வாகத்தின் பிடிவாதம் பலமானதா?

மகாத்மா காந்தியின் பெரிய உருவப்படம் எதிரில் 'இருந்தது. அந்தக் கல்லூரியின் பாரம்பரியம் வெகு அருமையானது. சிறந்த மனிதர்களை உருவாக்கும் பல்கலைக் கேந்திரம் அது. அதனுடைய பலம் பொருந்திய சுவர்கள், கண்ணாடிகள், விஞ்ஞானச் சாதனங்கள் இவற்றைவிட, அதன் பாரம்பரியம், அதன் ஒழுக்கம், அதன் கட்டுப்பாடு. அதன் உயர்வு இதில்தான் அதன் நிர்வாகத்துக்கு நம்பிக்கை அதிகம். உண்மையும் அதுதான்.

மகாத்மாவின் புன்னகை என்னை வதைத்தது. இன்று மட்டும் என் மனம் ஏன் சஞ்சலப்பட வேண்டும்? என் காக்கிச் சட்டைக்குள் என் இதயத்தை ஏன் அனுமதித்தேன்? அது என் தவறல்ல. என் பழைய கல்லூரி அது. புனிதமான கல்லூரி அது. ஏசுவின் மௌனமான அருள் விளங்கும் அழகான கட்டிடம் அது. அதில் மீண்டும் ஒரு கறை படிய வேண்டுமா?

மீண்டும் வாசலுக்கு வந்தேன். என்னைக் கண்டதும் பூரண அமைதி. மாணவர்கள் நல்ல முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

வட இந்தியாவில் ஒரு கிராமத்தில் டி. வி.யில் ஒரு நாள் பயிர்களை அழிக்கும் பூச்சிகளைப் பற்றிப் படம் காண்பிக்கப்பட்டது. பூச்சியைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள ஒரு பூச்சியைத் திரை அளவுக்குப் பெரிதாக 'க்ளோஸ் அப்'பில் காட்டினார்கள். படம் முடிந்தது. ஒரு கிராமவாசி சொன்னது: "நல்ல வேளையாக எங்கள் கிராமத்துப் பயிர்களில் இவ்வளவு பெரிய பூச்சிகள் வரவில்லை." -யூத் டைம்ஸ்-பாலி



அவர்கள் முகத்தைப் பார்க்கிறேன். எதற்கும் தயாராகி விட்டார்கள். நான் அவர்களை நோக்கி நடக்கிறேன். சில மாணவர்கள் முன்னால் வருகிறார்கள்.

"பிரின்ஸிபால் சம்மதிக்கிறாரா?"

"மாட்டாரா?"

கேள்விகள் குவிகின்றன. சங்கடத்துடன் அவர்களைப் பார்க்கிறேன்.

"மாணவர் தலைவர் யார்?"

ஒரு மாணவன் முன் வருகிறான். நல்ல உயரம். களையான முகம். எதையும் சாதிப்பான். அலட்சியமாக வந்தான்.

"கோரிக்கையை வாபஸ் பண்ண முடியாதா?"

"நிச்சயம் முடியாது. பிரின்ஸிபால் என்ன சொல்கிறார்?"

"அவர் யூனியன் அவசியமில்லை என்கிறார். உங்களுக்குப் போதிய உரிமையும் சலுகையும் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார். யூனியன் வந்தால் பொலிடிகல் இன்ஃபுளுயன்ஸ் அதிகமாகும். டிஸிப்ளின் போயிடும்னு பயப்படுகிறார். பொதுவாக அவர் சம்மதிக்கவில்லை."


"என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" மாணவர் தலைவன் கேட்டான், நான் பேசு முன்.

மாணவர்களின் சின்னச் சின்ன உரையாடல்கள் பெரிதாகி, பெரிய கேள்வியாக ஒரே குரலில், "பிரின்ஸிபால் சம்மதித்தாரா?" என்று எழுந்தது.

"சம்மதிக்கவில்லை." மாணவர்கள் தலைவன் திரும்பிக் கத்தினான். அவர்கள் எழுந்து கொண்டார்கள். விறுவிறுப்புத் தொடங்கி விட்டது.

"ஸ்டிரைக்கை நீங்கள் நிறுத்தப் போவதில்லை. .ஆனால் அமைதியாக நடத்துங்கள். உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத்தான் நாங்கள் இருக்கிறோம். உங்களில் யாராவது கல்லெறிந்து, வன்முறையில் ஈடுபட்டால் உங்கள் அனைவரையும் கலைக்கும்படி நேரும். அதைத் தவிர வேறு வழியில்லை. ஐ'ம் ஸாரி" என்று கூறிவிட்டுக் காரை நோக்கி நடந்தேன். எனக்கும் அவர்களுக்கும் இருபதடி தூரம் தான். என் ஜவான்களும், என் எஸ். ஐ. களும் என் உத்தரவுக்காகக் காத்திருந்தார்கள். ஃபையரிங் ஆர்டர் வரையில் செய்ய எனக்கு உரிமை இருக்கிறது. நான் மௌனமாகக் காரில் உட்கார்ந்து கொண்டு இரும்பு வலையால் மூடப்பட்டிருக்கும் கண்ணாடி முகப்பு வழியே அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இங்கும் ஆரம்பித்தால் என்ன?



சோவியத் ரஷ்யாவில் 'சமூக சேவைக் குழு' உள்ளது. அந்தக் குழுவுக்குப் போன் செய்து 'நான் வெளியே போகவேண்டியிருக்கிறது; என் குழந்தையைக் கொஞ்சம் வந்து பார்த்துக்கொள்ள முடியுமா?' 'எனக்கு பிரெஞ்சு சொல்லித் தர ஏற்பாடு செய்யுங்கள்' 'என் பெண் இன்று ரயிலில் வருகிறாள்; அவள் பெயர், அடையாளங்களைச் சொல்கிறேன்; அவளை என் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து விட முடியுமா?' என்பன போன்ற உதவிகளைக் கேட்டுப் பெறலாம். இவ்வுதவிகளுக்குச் சிறிய தொகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

-வொர்ல்டு நியூஸ் - முத்து

மாணவர் தலைவன் அவர்களோடு விவாதித்துக் கொண்டிருக்கிறான். அணை உடைத்துக்கொள்ளலாம். அந்த அணை நீரை ஒழுங்காகப் பாதுகாத்தால்....

அணையால் எத்தனை பயன்கள்! ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு அணை நீர்தானே? அணை நீருக்கும் மாணவர்களின் சக்திக்கும் என்ன வேற்றுமை இருக்கப் போகிறது.

தனிமனிதர்களின் பொது சொத்துக்களையும், இடப் பொருட்களையும் பாதுகாக்க வேண்டுமானாலும், சில நேரங்களில் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இளமை தெறிக்கும் மாணவர்களை அரசாங்கம் சந்திக்க வேண்டியிருக்கிறது. மாணவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் என்ன பகை? ஏதுமில்லையே?

இதே மாணவர்கள்தானே எதிர்கால சமூகத்தின் சிற்பிகள். இதே மாணவர்கள்தானே வருங்கால அரசாங்கம். பின் ஏன் இந்த முரண்பாடு. இது சமூகத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான பிரச்னை இல்லை. இது உணர்ச்சிகளுக்கு இடையே நடக்கும் போராட்டம். இந்த உணர்ச்சிப் போரில் மாணவர்கள் பலியாகலாம். நிர்வாகம் பலியாகலாம். அரசாங்கமேகூடப் பலியாகலாம்.

நிர்வாகத்துக்கும் மாணவர்களுக்கும் இடையே அரசாங்கம் நின்றிருக்கிறது. அதாவது நான் நிற்கிறேன். அணை உடைபடப் போகிறது. அதை நான் கட்டுப்படுத்தியாக வேண்டும். இல்லையேல் நிர்வாகம் அழியலாம். அல்லது இந்த அரசாங்கம் அழியலாம். அது மாணவர்களின் சக்தி மட்டுமல்ல. ஒற்றுமையின் சக்தி.

என்னுடைய காக்கிச் சட்டைக்குள்ளே இருக்கும் என் இதயத்தைப் பிடுங்கி எறிந்து விட வேண்டிய நேரம் வந்து கொண்டிருக்கிறது. அத்துடன் நானும் ஒரு காலத்தில் மாணவன் என்ற நினைப்பையும் தூக்கி எறிந்து கொண்டிருக்கிறேன்.

என் கண்ணில் அடிபட்டு விழுந்து முனகிய பையன் தெரிந்தான். நாங்கள் அடித்து வீழ்த்திய போலீஸ் தெரிந்தார். நினைப்பை உதறிவிட்டு எதிரில் பார்க்கிறேன். இவர்களில் யாருக்கேனும் ரோஷம் வந்து என் ஆளைக் காயப்படுத்தக் கூடும். அதே மாணவன் நாளைக்கே ஒரு டி. எஸ். பி. ஆகக் கூடும். மாணவ சக்தியை ஆக்க சக்தியாக மாற்ற முயன்றால் ஒழிய இந்தக் கால பேதங்களைத் தவிர்க்க முடியாதுதான்.

மாணவர்களின் உணர்ச்சிகள் உடைத்துக் கொண்டு விட்டன. யாரோ சிலர் கற்களை எறிகிறார்கள். 'சிலிங்' 'சிலிங்' என்று கண்ணாடிகள் பெயர்கின்றன. 'கேட்' மீது பலர் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். என் வாரியின் மீது ஒரு கல் வந்து விழுகிறது. நான் காக்கிச் சட்டைக்குள்ளிருந்து உத்தரவிடுகிறேன்.

''சார்ஜ்!''

நான் அரசாங்க ஆஸ்பத்திரியில் நிற்கிறேன். வராந்தாவில், எமர்ஜென்ஸி வார்ட் அருகே. வாசலில் மாணவர் கூட்டம். என் ஆட்கள் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். பதினெட்டு மாணவர்களும் இரண்டு ஜவான்களும், ஒரு எஸ். ஐ.யும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் தங்கள் கோரிக்கையில் வெற்றி பெறக் கொடுத்த விலை. என் எஸ். ஐ.யின் உயிர் ஊசலாடுகிறது. மாடிக் கைப்பிடியில் இருந்து குதித்துத் தப்ப நினைத்த மாணவன் காலில் எலும்பு முறிவு. கிட்டத்தட்ட எல்லோருக்கும் தலையில் காயம். நான் வெளியில் வருகிறேன். என் கூடவே அந்த சப் இன்ஸ்பெக்டரின் மனைவி அழுதவாறு வருகிறாள். கலெக்டர், ஆர். டி. ஓ. அனைவரும் பார்த்துவிட்டுப் போகிறார்கள். பத்திரிகைக்காரர்கள் என்னைச் சூழ்ந்து கொள்கிறார்கள். மாணவர்களின் வெறியைத் தூண்டி விடப் போகிறார்கள், போலீஸ் மீது விரோதத்தைக் காட்டுவார்கள். நான் பேசுகிறேன். நிலைமையைச் சொல்கிறேன். என் பெயர் மட்டும் அடிபடும்.

பரபரப்புடன் ஆஸ்பத்திரி பெரிய டாக்டர் வருகிறார். என்னைக் கூப்பிடுகிறார். கூட்டத்தில் இருந்து விலகுகிறேன். டாக்டர் சொல்கிறார். ''சார்! உங்க எஸ். ஐ.க்கு உடனடியாக இரத்தம் தேவைப்படுகிறது. ஆஸ்பத்திரியில் அவர் குரூப் இரத்தம் இல்லை.''

என் இரத்த வகையைச் சொல்லி 'சேருமா' என்கிறேன். இல்லை என்கிறார். என்னுள் தவிப்போடு, சுற்றிப் பார்க்கிறேன். அந்த மாணவர்கள் கூட்டம் என் தவிப்பை உணர்கிறது.

கூட்டத்தில் இருந்து ஒரு குரல்: ''என் குரூப் ரத்தம் தேவையானால் நான் தருகிறேன்.''

என் ரத்தம் துடிக்கிறது. வேறு சில குரல்களும் ''நாங்கள் தயார்'' என்றன. என் அருகே சில மாணவர்கள் நின்றனர், என் பதிலுக்காக.

''ஓ.கே.'' போலீஸ் உத்தியோகத்தில் முதல் முறையாக என் குரல் கரகரத்தது.

வீட்டுக்கு ஜீப்பில் திரும்பிக் கொண்டிருந்தேன். நீண்டு கிடந்த அந்தச் சாலையில் கார் போய்க் கொண்டிருந்தது. தூரத்தில் வானத்தில் ஒரு பெரிய நட்சத்திரம் தெரிந்தது. பாதையின் முடிவில் அந்த நட்சத்திரம் இருப்பதாகப் பட்டது. மிக உயர்ந்த நிலையை நோக்கி இந்த நாடு போவதை உணர்ந்தேன். அந்த மாணவர்களை நினைத்தேன். புல்லரித்தது. இந்தப் பாரத நாட்டின் பாரம்பரியத்தை நினைத்து வியந்தேன். என்னுள் பெருமை பொங்கியது.

சேரமான் காதலி

அத்தியாயம் 7

பிறவாத பிறப்பு

உதயகிரிக்கு வரும் புதியவன் ஒருவனைச் சகோதரனாக ஏற்றுக்கொண்டால் இப்படி ரட்சை ஒன்றைக் கட்டுவதென்றும், தாய் ஒருத்தி அவனை மகனாக ஏற்றுக் கொண்டால் குழந்தைப் பாலில் கொஞ்சம் கொடுப்பதென்றும், காதல் கொண்ட ஒருத்தி அவனைக் காதலனாக வரித்து விட்டால் சங்கு, சக்கரம், புலி நகம் கோத்த தங்க நூல் ஒன்றை அவன் கழுத்தில் அணிவிப்பதென்றும் தங்கள் பழக்க வழக்கங்களைத் தரங்கிணி சேரமானுக்கு விளக்கினாள்.

அப்போதுதான் தன்னை அவள் சகோதரனாக வரித்திருக்கிறாள் என்பது சேரமானுக்குப் புரிந்தது.

அவரையும் அறியாமல் எங்கிருந்தோ ஒரு பாசம் அவரை ஆட்கொண்டது.

தன் கூடப் பிறந்த ஐந்து சகோதரிகளோடு மலையமான் குடும்பத்திலிருந்து ஒரு சகோதரியும் தனக்குக் கிடைத்திருப்பதிலே அவர் பெருமிதம் அடைந்தார்.

தூக்கம் தரங்கிணியின் கண்களைத் தழுவத் தொடங்கிற்று.

சேரமான் முன்னிலையில் படுத்துத் தூங்க வெட்கப்பட்டுச் சுவரிலே சாய்ந்தபடியே அவள் தூங்கத் தொடங்கினாள்.

கையைத் தலையணையாக வைத்துச் சேரமான் பள்ளி கொண்டார்.

கண்ணை விழித்து அதை மெதுவாகக் கவனித்தஅவள், பரிவோடு, ''அண்ணா'' என்று அழைத்தாள்.

சேரமான் தலையைத் தூக்கிப் பார்த்தார்.

அவள் தன் மடியைக் காட்டினாள்.

தலைக்கு அணை இல்லாத இடத்தில் தாய் தன் மடியையே குழந்தைக்குத் தலையணையாகத் தருவதுபோல், அவளும் தன் மடியில் தன்னைத் தூங்கச் சொல்வதாகச் சேரமான் கருதினார்.

களங்கமற்ற இதயத்தோடு அவர் எழுந்து அவள் மடியிலே தலையை வைத்துப் படுத்தார்.

''அலைகடலே! ஒரு பொழுது ஓய்ந்திருப்பாயாக'' என்னும் கருத்தமைந்த ஒரு பாட்டைப் பாடத் தொடங்கியவாறே அவளும் தூங்கி விட்டாள்.

அதிகாலையில் அவர்களால் கண்விழிக்க முடியவில்லை.

பொழுது விடிந்து சிறிது நேரம் கழித்தே அவர்கள் விழித்தார்கள்.

விழித்த கண்களில் ஒருவருக்கொருவரே காட்சிப் பொருளாக விளங்கினார்கள்.

ஆனால், திறந்திருந்த காதுகளில் திடீரெனப் புதிய ஆரவாரம் கேட்டது.

''அது என்ன ஆரவாரம்?'' என்று கேட்டார் சேரமான்.

''இவ்வோசை எனக்கும் புதிதாகவே படுகிறது'' என்றாள் தரங்கிணி.

''உனக்கு இது பழக்கமான சத்தம் இல்லையா?'' என்று கேட்டார் சேரமான்.

''வேலின் மாதர் காடு கண்டு, கடமை நடத்தச் செல்லுங்கால் எழும் ஓசையல்ல இது. ஒரு பெரும் குழுவின் ஒலி எனத் தோன்றுகிறது'' என்றாள் தரங்கிணி.

சேரமானுக்கு உடனே சந்தேகம் தட்ட ஆரம்பித்தது.

ஒருவேளை, நேற்று முழுதும் தான் திரும்பி வரவில்லை என்ற உடனே நாராயண நம்பூதிரி ஒரு பெரும் படையையே மலை மீது அனுப்பியிருப்பாரோ என்ற ஐயம் ஏற்பட்டது.

மேற்கு மலைகள் பலவற்றிலும் மலை ஏறும் குடியினர் உண்டு. அன்றியும் சேரர் படையிலேயே மலை ஏறும் பிரிவும் காடு வெட்டும் பிரிவும் உண்டு.

பெருமளவுக்கு மக்கள் மலை ஏறினால் ஏறிவிடுவது சுலபம். அப்படி ஒரு படை சூரியோதயத்துக்கு முன்பே மலைக்கு வந்திருக்கக் கூடுமோ என்று அவர் ஐயுற்றார்.

அந்த ஐயத்தை அதிகப்படுத்துவது போல் ஆரவாரமும் அதிகமாயிற்று.

கண்ணதாசன்

உடனே அவர் பரபரப்பாக எழுந்து உலரப் போட்டிருந்த தம் உடைகளை எடுத்து அணிந்துகொண்டு போர்வையைக் களைந்தார்.

தரங்கிணியும் அவ்வண்ணமே செய்தாள்.

இருவரும் வேகமாகச் சிற்றருவிக் காவை நோக்கி ஓடி வந்தார்கள்.

ஆம்; சேரமானின் அச்சமும், ஐயமும் பொய்யாகி விடவில்லை.

திருவிதாங்கோட்டிலிருந்து ஏராளமான சேனைகள் மலையின் மீது வந்திருந்தன.

நூற்றுக்கணக்கான மலையமான் குடியினர் கைகள் பிணைக்கப்பட்டு நின்றிருந்தார்கள்.

மற்றும் சுமார் நூறு பேருக்கு மேற்பட்டோர் ரத்த வெள்ளத்தில் மிதந்தார்கள்.

சேரமான் அங்கே ஓடி வந்து, ''நிறுத்துங்கள்'' என்று சத்தமிட்டார்.

சேரமானைக் கண்ட திருவிதாங்கோட்டுச் சேனைகள் அப்படியே செயலற்று நின்றன.

''யாருடைய தலைமையில் வந்தீர்கள்?'' என்று கத்தினார் சேரமான்.

''தளபதி அங்கதன் தலைமையில்'' என்று தலைகுனிந்து கொண்டே சொன்னான் ஒரு வீரன்.

''அங்கதன் எங்கே?'' என்று ஆத்திரத்தோடு வினவினார் சேரமான்.

''மலையமான் அஞ்சலவேளைத் தேடிச் சில படைகளோடு போயிருக்கிறார்'' என்று பதிலிறுத்தான் அந்த வீரன்.

தன் சகோதரர்கள் இறந்து கிடந்ததைப் பார்த்தவுடனேயே, 'ஓ'வென்று கதறி அழுத தரங்கிணி, தன் தந்தையைத் தேடி ஒரு படை போயிருக்கிறது என்பதைக் கேட்டவுடனேயே தலைமுதல் கால் வரையில் நடுக்கமுற்றாள்.

மயங்கிக் கீழே விழும் நிலையில் இருந்த அவளை மார்போடு சேர்த்துப் பிடித்துக் கொண்ட சேரமான், ''போய் அங்கதனைத் தடுத்து நிறுத்துங்கள். அஞ்சலவேளுக்கு ஏதும் நேரக் கூடாது'' என்று படைகளைப் பார்த்துச் சத்தமிட்டார்.

படைகள் நாலா பக்கமும் ஓடத் தொடங்கின.

தரங்கிணியைக் கைத் தாங்கலாக அணைத்தபடி அஞ்சலவேளின் அரண்மனைக் குடிலை நோக்கி நடந்தார் சேரமான்.

ஆனால், அந்தோ !

அவர் அங்கு வந்து சேருவதற்குள் காரியம் மிஞ்சி விட்டது.



அஞ்சலவேள் ஒரு குத்தீட்டியினால் குத்தப்பட்டு மாண்டு கிடந்தான்.

அந்த ஈட்டி மார்பில் நுழைந்து முதுகுப் பக்கமாக வெளி வந்து நின்றது.

அரண்மனைக் குடிலைப் படைகள் முற்றுகையிட்டிருந்தன.

தளபதி அங்கதன் அங்கு வெற்றி வீரனாக நின்றிருந்தான்.

தந்தையின் சடலத்தைப் பார்த்த தரங்கிணி அதன் மீது விழுந்து புரண்டு அழுதாள்.

பிறந்த உடனேயே தாயை இழந்து விட்ட அந்தப் பேதைக்குத் தாயும், தந்தையுமாக இருந்தவன் அல்லவா, அஞ்சலவேள்?

''எந்தாய்! ஏறும் களிறும் வெல்லவொண்ணா எந்தாய் ! ஆறு போற் குருதி பாய அகன்ற மார்பொடும் வீழ்ந்தாயே! மகளைத் தாங்கிய மார்பகம் மண்ணில் குவிந்ததே ! எனக்கு மண

வினை காண மனம் விழைந்த எந்தாய்! இன்று யான் கையறுந்தேன். கண் இழந்தேன்'' என்று தரங்கிணி புலம்பினுள்.

அங்கதனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் சேரமான்.

''நீ என்னைத் தேடி வந்தாயா, குறைந்து வரும் மலையமான் மக்களை அழித்துவிட வந்தாயா? பாவி, அவனைக் கைது செய்து எனக்கு என்ன ஆயிற்று என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்? புதிய பொறுப்பல்லவா! எடுத்த எடுப்பிலேயே கொன்று குவிப்பதில் துடித்து நின்றிருக்கிறுய்! படைத் தளம் காக்கும் எவனும் எதிரியை உயிரோடு பிடிப்பதிலேதான் முதல் கவனம் செலுத்த வேண்டும். எவ்வளவு பெரிய மரபில் வந்தவனை எவ்வளவு விரைவில் கொன்று விட்டாய்?'' என்று கலங்கிஞர் சேரமான்.

தன்னைக் கொல்லவும் முதலில் அவன் முயன்றுனே என்பதை அவர் எண்ணவில்லை. அந்த நேரத்தில் அது தவிர்க்க முடியாத நடைமுறை. அதன்றியும், தரங்கிணி சகோதரியான பிற்பாடு அஞ்சலவேள் கொல்லப்பட்டது தன் தந்தையே கொல்லப்பட்டது போல் அவருக்குத் தோன்றிற்று.

பதில் பேசாமல் அங்கதன் நின்றிருந்தான்.

அழகிய தமிழில் மழலைத் தொனியில் அழுது புலம்பிய தரங்கிணியைக் கண்டதும் அவருக்கும் கண்ணீர் வந்துவிட்டது.

ஒரு கட்டத்தில் கல் மனத்தஞக இருந்த பாஸ்கர ரவிவர்மன், சோழ நாட்டில் ஏற்பட்ட ஒற்றுமைக்குப் பிறகு —முடிசூட்டு விழாவுக்குப் பிறகு உன்னத மனிதஞக மாறியிருந்தார்.

அந்த மனிதத் தன்மையின் உச்சகட்டம் உதயகிரி மலையில் வெளிப்பட்டது.

மலையமான் குடியினர் அனைவரும் அங்கே கூடிவிட்டார்கள்.

அவர்கள் கதறி அழுததைக் காடு எதிரொலித்தது.

துயரம் முழுவதும் விம்மித் தணியும் வரை சேரமான் பொறுத்திருந்தார்.

அழுகின்றவர்கள் அழுது முடிக்குமுன் ஆறுதல் சொல்வது பயனற்றது என்பதை அவர் அறிவார்.

ஒரு நாழிகை முழுவதும் அவர் அப்படியே நின்றிருந்தார்.

அந்த ஒரு நாழிகையும் தன் தந்தையின் சடலத்தின் மீதே மயங்கிக் கிடந்தாள் தரங்கிணி.

அவளது கண்ணீர் வற்றிய நிலையில், கதறல் நின்ற நிலையில் அவளைக் கைத் தாங்கலாக எடுத்தார் சேரமான்.

ஆயிரக்கணக்கான வார்த்தைகளில் அவர் அவளுக்கு ஆறுதல் சொல்லவில்லை; ''சகோதரி, நான் இருக்கிறேன்'' என்ற ஒரே வாக்கியத்தைத்தான் சொன்னுர்.

மலையமான் குடியினரைப் பார்த்து அவர் பேசலானுர்:

''எனது அன்புக்கு உரிய சகோதரர்களே! அருமைத் தலைவனை இழந்து நிற்கும் உங்களுக்கு நான் சொல்லும் ஆறுதல் பகைவனின் பசப்பு மொழியாகக்கூடத் தோன்றக் கூடும். பகைவனின் மரணத்தைக் கொண்டாடும் பழக்கம் எங்கள் மரபில் இல்லை. சரியாகச் சொல்வதாயின் நீங்கள் பகைவரும் அல்ல. கசப்பான உணர்வில் எழுந்த சிறிய பகை உணர்வு, மகத்தான சகோதரத்துவத்தில் முடிந்திருக்கிறது என்று நான் மகிழ்ச்சியுற்றிருந்தேன். ஆனல் தாளமுடியாத துயரத்தில் அது முடிந்து. நீங்கள் தலைவனை இழந்து நிற்கிறீர்கள். தங்கையில் என் கையை வைத்து



ராஜாஜி சிந்தனை

மூன்றும் நான்கும்!

இப்போது காங்கிரஸின் கொள்கைகளாக இருக்கும் குத்தகைச் சீரமைப்பு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு முதலிய பலவும் நிறைவேற வேண்டும் என்று தான் நமது அரசியல் சாசனத்தை உருவாக்கிய அறிஞர்களும் விரும்பினார்கள். ஆனால் இவற்றை மக்களின் அடிப்படை உரிமைகளை நீக்காமலேயே நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். எனவே, சாசனத்தின் மூன்றாம் பாகத்தில் யாராலும் பறிக்க முடியாதவை என்பதாக அடிப்படை உரிமைகளை எழுதினார்கள்.

மூன்றாம் பாகத்தில் உறுதி கூறப்பட்ட சுதந்திரமான வாழ்க்கை முறையிலிருந்து எதையும் கழித்து விடாமலேயே பொதுவான சமூக நலனை அடைய சாசனத்தின் நான்காம் பாகத்தில் வழி காட்டும் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. இந்த இரண்டு பாகங்களுக்கும் இடையில் முரண்பாடு ஏதும் இருப்பதாக எண்ணப்படவே இல்லை. இரண்டும் ஒட்டுமொத்தமாக இணைந்து நிற்பதாகக் கருதப்பட்டன. தங்கள் சுதந்திரங்களைக் குறைத்துக் கொள்ளுமாறு மக்களைக் கோராமலேயே தேசம் முன்னேற முடியும் என்று கருதினார்கள். இவ்விரு பாகங்களுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாக நினைத்துக் கொள்வது நமது சாசனத்தை உருவாக்கியவர்களின் அறிவாற்றலை நாம் அவமதிப்பதாகும். — சுயராஜ்யா, நவம்பர் 30, 1963

எனக்குத் தங்கையாகி விட்டாள் தரங்கிணி. அவள் மட்டும் தன் தந்தையை இழக்கவில்லை; நானும் என் தந்தையை இழந்திருக்கிறேன். அதற்கு ஈடாக மலையமான் குடியினர் உள்ளவரை அவர்கள் விரும்புகிற வரை உதயகிரி மலை தனி நாடாகவே இருக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன். மன்னவன் மரணமடைந்தால், அவன் தலைமாட்டிலேயே புதிய மன்னன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற மரபுப்படி நீங்கள் யாரைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்?'' என்றார் சேரமான்.

மலைக் குடியினர் அனைவரும் தலை தாழ்த்தி நின்றார்கள்.

''யாராவது பேசுங்கள்'' என்று அன்போடு கேட்டார் சேரமான்.

அப்போதும் பதில் இல்லை.

''அஞ்சலவேளுக்கு யாராவது இளவல் உண்டா ?'' என்று தரங்கிணியைப் பார்த்து வினவினார்.

தரங்கிணி விம்மலோடும், விக்கலோடும், ஒருவரைக் கைகாட்டினாள். '' எந்தையின் இளவல் '' என்று இரண்டே வார்த்தைகளில் சொன்னாள்.

அகன்ற மார்பு; நிமிர்ந்த தோள்கள்; பரந்த நெற்றி; அழகிய திருமுகம் — அப்படி ஒரு வாலிபன்.

அவன் அருகிலே சென்றார் சேரமான்.

''சகோதரா, உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

அவன் கண்ணீரோடு, '' திருமுடி நள்ளி'' என்றான்.

''நல்லது. இம்மலையின் மன்னவன் நீயே '' என்று கூறிய சேரமான், ''சடலத்தை நல்லடக்கம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார்.

அஞ்சலவேளைக் குத்தி யிருந்த ஈட்டியை மெதுவாக அவரே எடுத்தார்.

தரங்கிணி இறங்கிக் குளித்த மீன் பாடும் ஏரியில் இருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டது. சடலம் குளிப்பாட்டப்பட்டது.

பச்சை நிறத்தில் இருந்த ஒரு தைலத்தைச் சடலத்தின் தலையில் வைத்தாள் தரங்கிணி.

மலையமான் குடியினர் தாங்கள் இறந்து போனால், தங்களை வைத்துப் புதைப்பதற்கான இரும்புத் தாழிகளைத் தங்கள் ஆயுட் காலத்திலேயே செய்து வைத்துக் கொள்வது வழக்கம்.

அத்தகைய ஒரு தாழியில் அஞ்சலவேளின் சடலம் வைக்கப்பட்டது.

அஞ்சலவேள் பயன்படுத்திய பொருள்கள், அவர் உடலோடு சேர்த்து வைக்கப்பட்டன.

தாழியை மூடி நான்கு புறமும் பழுக்கக் காய்ச்சினார்கள் இருவர். தாழியின் அடித் தட்டும் மூடியும் ஒரே வடிவமாகி விட்டன.

சில வகை மலர்களை அதன் மீது வைத்து நால்வர் அந்தத் தாழியைத் தூக்கினர். அவர்களில் ஒருவனை விலக்கி விட்டுத் தானொருவனாக நின்று அதனைத் தூக்கினார் சேரமான்.


மலைக்குடிப் பெண்கள் மஞ்சள் அரளிப் பூவை வழியெங்கும் தூவிக் கொண்டு வந்தனர்.

தாழியைப் புதைக்கும் இடத்துக்கு வந்து பார்த்த போதுதான், அது ஒரு மிகப் பழைய கல்லறை என்பது சேரமானுக்குத் தெரிந்தது.

உதயகிரி மலைய மன்னர்கள் பலரது நடு கற்கள் அங்கே இருந்தன.



எட்டு லட்சம் இட்டிக்
குழந்தைகள் விரும்பிப்படிக்கும்
சம்பக்
(இந்தி, ஆங்கிலம், மராட்டி, குஜராத்தி, மலையாளம் தவிர)
வந்து விட்டது
தமிழிலும்
அக்டோபர் 1976 முதல்.
கவர்ச்சி மிக்க அம்சங்கள் - அறிவூட்டும் கட்டுரைகள், கற்பனை மிக்க கதைகள், இனிய இனிய பாட்டுக்கள், சித்திரக் கதைகள். அறிவை வளர்க்கும். ஆனந்தமும் பெருக்கும். வீரம், தீரம், சாகஸம், நல்லறிவு, நன்னடத்தை தன்னடக்கம் எல்லாம் புகட்டி வரும் தலை முறையின் சீரிய தலை மகன்களாகும்.
சம்பக்
ஒரு பிரதி : 75 காசு. ஆண்டுச் சந்தா : ரூ. 8
உங்கள் செய்தித்தாள் ஏஜெண்டிடம் இன்றே ரிசர்வ் செய்க.
இன்னும் ஏஜெண்டுக்கள் தேவை.
Delhi Press,, New Delhi- 110055.



GET YOUR MONEY'S WORTH!
® BRAND
HINDALIUM®
is your guarantee for the best in Utensils. Available at COMPANY'S RATES
Consignment Agents:
PREMIER PRODUCTS
354, Mint St., Madras-600 001
Gram: CINNABAR Phone: 30226 & 37713
Mfrs: L. Madanlal (Aluminium) Ltd., Calcutta

அட்டைப்பட விளக்கம்

புதுமைப் பெண்



ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டு நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையுடன் விளங்கும் புதுமைப் பெண் சாதிக்க வேண்டியது என்ன? பாரதி கூறுகிறான்:

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்.

இவ்வாறெல்லாம் அரிய பெரிய காரியங்களைச் செய்யும் புதுமைப் பெண் நமது பாரம்பரியத்தை மறந்துவிடக் கூடாது என்பதையும் அறிவுறுத்துகிறார் பாரதி. 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று சீறினாலும் 'குலத்து மாந்தர்க்குக் கற்பு இயல்பாகுமாம்' என்கிறார். புதுமைப்பெண், வேதமே பொன்னுருக் கன்னிகையாக வந்தது போன்றவள்:

புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொதுமை கொண்ட கலிக்குப் புதிதன்றி
சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள்
தன்னிலே பொதுவான வழக்கமாம்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணையும் அவள் இயல்பையும் சாதனைகளையும் மேலட்டையிலே வண்ணச் சித்திரமாக வழங்குபவர் ஓவியர் திரு ராமு.

வெட்டிய குழிக்குள் தாழி இறக்கப் பட்டபோது மலைக் குடிப் பெண்கள் குலவையிட்டனர்.

குழி மூடப்பட்டபோது வேகமாகக் கூட்டத்துக்குள்ளே புகுந்து ஒரு நாகம் ஓடி வந்தது. சேரமான் நாகர் கோயிலில் பார்த்த அதே நாகம்.

அஞ்சலவேனின் கல்லறை மீது அது ஒரு மலரை வைத்துவிட்டுத் திரும்பியது.

புதுமை நிறைந்த அந்த மலையில் கொடிய நாகங்களுக்குப் பாச உணர்ச்சி இருப்பதை அவர் மீண்டும் கண்டார்.

அடுத்தது முடிசூட்டுவிழா....

சிம்மாசனம் இல்லாத அந்த அரண்மனையில் நின்றபடியே நடந்தது.

திருமுடி நள்ளியின் தலையில் வைக்கப் பட்ட மகுடம் முந்நூறு ஆண்டுகள் பழைமையானது என்பதைச் சேரமானுக்கு விளக்கினான், ஒரு மலைக்குடி மகன்.

அதைத் தலையில் வைத்து அதே ஏரித் தண்ணீரைத் தெளித்ததோடு அந்தச் சடங்கும் முடிந்தது.

சேரமான் தரங்கிணியை மார்போடு அணைத்து. "சகோதரி! இந்த மலையில் உன்னை நான் விட்டுவிட்டுச் செல்வதாக இல்லை. எனக்கு நீ ஆருவது சகோதரி. இப்பொழுதே உன்னை நான் திருவிதாங்கோட்டுக்கு அழைத்துப் போகிறேன்" என்றார்.

தரங்கிணி அதை மறுக்கவில்லை. ஒவ்வொருவரிடமும் விடைபெற்றாள்.

தன் சிறிய தந்தையிடம் அவள் விடை பெற்றுக் கொண்ட போது. திருமுடி நள்ளி அவளை அணைத்து அழுதான்.

பாச உணர்ச்சி பொங்கி வழிந்த அந்தக் காட்சியில் இருந்து அவர்கள் மீண்டு, மலையில் இருந்து இறங்கத் தொடங்கியபோது, மலை உச்சியில் நின்றவாறே மலைக்குடி மக்கள் அவர்களை வழி யனுப்பினார்கள்.

அப்போதுதான் மலையில் இருந்து இறங்குவதற்கு ஒரு தனி வழி இருப்பதைச் சேரமான் கண்டார்.

பாறைத் தடங்கல் அதிகமில்லாத அந்த வழியில் அவர்களை ஒரு சிறிய சக்கர வண்டியில் உட்கார வைத்து மலையில் இருந்தபடியே கயிற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக்கொண்டிருந்தார்கள் மலைக் குடியினர்.

அடிவாரத்துக்குச் சக்கர வண்டி வந்து சேர்ந்தது.

சேரமான் மடியிலும், தரங்கிணி மடியிலும் இரண்டு அம்புகள் வந்து விழுந்தன.

அவை விஷ அம்புகள் அல்ல; மலர் அம்புகள்.

அது மலைக்குடியினரின் வழியனுப்பு உபசாரத்துக்கு அடையாளம்.

அடிவாரத்தில் இருந்தபடியே இருவரும் மலை உச்சியைக் கைகூப்பி வணங்கினார்கள். அங்கிருந்த மலைக்குடி மக்களும் வணங்கினார்கள்.


அப்போது. 'உஸ்' என்று ஒரு சத்தம் கேட்டது.

ஆம்; நாகர் கோவில் நாகம் அடிவாரம் வரை வந்து அவர்களை வழி அனுப்பி விடைபெற்றுக் கொண்டது.

திருவிதாங்கோட்டு அரண்மனைக்குள் சேரமானும், தரங்கிணியும் நுழைந்த போது எல்லோரும் ஆனந்தத்தோடும், ஆவலோடும் அவர்களை எதிர் கொண்டார்கள்.

தரங்கிணியைப் பார்த்த பத்மாவதிக்கு, 'இன்னும் ஒருத்தியா?' என்ற எண்ணமே தோன்றிற்று. (தொடரும்)

புது உலகம் கண்டேன்



★ பியாஸா நவோனா சதுக்கம்.


14. ஐரோப்பாவின் திருப்பதி

ஒரு புரட்டாசி சனிக்கிழமையன்று திருப்பதியில் இருந்தால் எந்த விதமான உணர்வுகளையும் கலகலப்பையும் அடைவோமோ அதே விதமான உணர்வுகளையும் கலகலப்பையும் ஈஸ்டர் தினத்தன்று ரோமாபுரியில் அடைந்தேன், நான். ரோமாபுரியும் ஏழு மலைகளில் தான் (*Rome is the city of Seven Hills*) அமைந்திருக்கிறது. உலகக் கிறிஸ்துவர்களுக்கோ ரோமாபுரி ஒரு சர்வதேசத் திருப்பதியாக விளங்குகிறது. 'திருப்பதி' என்ற பெயருக்கு அழகிய பதி அல்லது புனிதத் தலம் என்று அர்த்தம் கிடைக்கும். 'திரு' என்கிற அடைமொழிக்கு மட்டும் 'கண்டோரால் விரும்பப்படும் தன்மை' என்று பொருள். ரோமாபுரியும் நமது திருப்பதியைப்போல் கண்டோரால் விரும்பப்படுகிறது. 'ரோமா' என இத்தாலியர்களால் அழைக்கப்படும் ரோமாபுரி ஒரு நித்திய வசீகர நகரமாக (*Eternal City*) விளங்குகிறது. சுகமான மெடிட்டரேனியன் சீதோஷ்ண நிலை. அதிகக் குளிருமில்லை. அதிக வெயிலுமில்லை. திரும்பிய பக்கமெல்லாம் சரித்திரம். சிலைகள், சிற்பங்கள், கட்டிடங்கள், நீரூற்றுக்கள் நிறைந்த நகரம் ரோமாபுரி.


திருப்பதி எப்படி பக்தியும், கூட்டமும், நெருக்கடியும் நிறைந்த நகரமோ அப்படியே ஐரோப்பாவின் ஏழுமலையாகிய ரோமாபுரியும் கூட்டம், பக்தி நெருக்கடி எல்லாம் நிறைந்த நகரம். விசேஷ தினங்களில் திருப்பதியில் 'காட்டேஜ்' — தங்குமிடம் கிடைப்பது எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமம் அதேபோன்ற தினங்களில் ரோமாபுரியிலும் இருக்கிறது. திருமலைமேலே எப்படி எல்லா நிர்வாகமும் ஏற்பாடுகளும் திருப்பதி தேவஸ்தானத்தைச் சேர்ந்ததாக இருக்கின்றனவோ அதே போல் வாடிகனில் எல்லா ஏற்பாடுகளும் போப்பாண்டவரின் தனிசாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவையாக இருக்கின்றன.

நான் ரோமிலும், இத்தாலியின் பிற ஊர்களிலும் இருந்த நாலைந்து தினங்களில் இந்த ஒப்புவமை எனக்குத் தோன்றியது. வாடிகனையும், செயின்ட் பீட்டர்ஸையும் ஒப்பு நோக்கி, திருமலை திருப்பதியையும் இணைத்துச் சிந்தித்தபோது ரோமாபுரியை ஐரோப்பாவின் திருப்பதி என்றே சொல்லிவிடத் தோன்றியது.


மாஸ்கோவையோ, லண்டனையோ, பாரிஸையோ, பெர்லினையோ போலன்றி ரோமாபுரியை ரசிக்க ஒரு தனியான மனப் பக்குவம் வேண்டும். சரித்திரம் சம்பந்தப்பட்ட கட்டிடங்கள், இடிபாடுகள், சின்னங்கள், சர்ச்சுகள் கதீட்ரல்கள் நீரூற்றுக்கள் இவை நிறைந்த ஒரு பழைய நகரம் சிலருக்குச் சலிப்பூட்டலாம். ஆனால் எனக்கு ரோமாபுரி மிகவும் பிடித்திருந்தது. பழைய சின்னங்களின் கம்பீரம் — நகர் முழுவதும் நிரம்பிக் கிடக்கும் வரலாற்று அழகுகள் இவற்றால் நான் பெரிதும் கவரப்பட்டேன்.



★ ரோமன் ஃபோரா முகப்பு வளைவு



★ கொலோசியம்



★ ட்ரெவி நீரூற்று

பார்க்கும் இடம் எங்கும் சுற்றுப் பயணிகளின் கூட்டம் நிரம்பித் தெரியக் கூடிய நகரம் ரோமாபுரி. பெரும் பாலான சமயங்களில் ஹோட்டல்களில் இடம் கிடைப்பது கூடச் சிரம சாத்தியமாக இருக்கிறது. முதல் தர ஹோட்டல்கள், இரண்டாம் தர ஹோட்டல்கள், அப்புறம் கடைசிப் பட்சமாக நமது சத்திரங்களைப் போன்ற அமைப்புக்களான 'பென்ஸியோனி' (Pensiony) என்ற விடுதிகள் ஆகியவைதான் தங்குமிடங்கள். நான் போயிருந்த ஈஸ்டர் வாரத்தில் 'பென்ஸியோனி'யில் கூட இடம் கிடைக்கவில்லை. அப்புறம் அரும் பாடுபட்டு இந்தியத் தூதரக நண்பர்கள் ஒரு வசதியான ஹோட்டலில் இடத்துக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். தங்கியிருந்த நாலைந்து நாட்களில் 'ஐம்பதினாயிரம்' செலவழித்தேன் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

டாலரையோ, பவுண்டையோ இத்தாலிய லிரா நாணயத்துக்கு மாற்றினால் ஆயிரக் கணக்கில் லிராக்கள் கிடைக்கும். காலை உணவாக 600 முதல் 900 லிராவரை செலவாகி விடும். நல்ல பகலுணவு என்றால் 5000 முதல் 6000 லிராவரை செலவாகிவிடும். தங்குமிடத்தின் அறை வாடகை மட்டுமே நாலாயிரம் முதல் ஐயாயிரம் லிரா வரை ஆகிவிடுவதுண்டு. சுற்றிப் பார்க்க வாகன வசதி தேடினாலோ பயங்கரம். சுமார் 9 இந்திய ரூபாய்களுக்கு இணையாக 1000 லிராக்கள் வருகிறது என்றால் லிராவின் மதிப்பைப் புரிந்து கொள்ள ஓரளவு உதவியாக இருக்கும். நூறு லிராவுக்குக் குறைந்து எந்தச் சிறிய பண்டமும் கூடக் கிடைக்காது. லிராவாக உங்கள் நாணயத்தை மாற்றி விட்டால் அப்புறம் ஆயிரக்கணக்கில் — லட்சக் கணக்கில் செலவழிக்காமல் இத்தாலியில் சில நாட்களைக் கூடக் கழிக்க முடியாது.

சுற்றுப்பயணிகளுக்கு எல்லா இடங்களையும் காண்பிக்கும் ஏற்பாட்டுடன் இருந்த 'கோச்சு'களை விசாரித்தால் டூர் 1-ஏ, டூர் 1-பி என்று

நா. பார்த்தசாரதி


'சார்ட்' போட்டு ரோமாபுரியைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒவ்வொரு டூருக்கும் ஐயாயிரம் ஆறாயிரம் லிராவுக்குக் குறையாமல் கட்டணம் போட்டிருந்தார்கள். அந்த ஏற்பாட்டின்படி நாலைந்து டூர்களில் கலந்து கொண்டு ரோமாபுரியைப் பார்த்து முடிப்பதற்கு மட்டும் முப்பதாயிரம் லிராவிலிருந்து நாற்பதாயிரம் லிரா வரை ஆகிவிடும்போலிருந்தது.

''ரோமாபுரியில் ஒவ்வொரு மூலையிலும் பார்க்க வேண்டிய ஏதாவதோர் அம்சம் நிச்சயமாக இருக்கிறது. காரிலோ, கோச்சிலோ போனால் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே நிறுத்தி அதைச் சுற்றிக் காண்பித்து விட்டு அடுத்த இடத்துக்கு உடனே துரத்துவது போல விரட்டிக் கொண்டு போய்விடுவார்கள். நின்று நிதானித்து எதையும் பார்க்க முடியாது. நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரு 'டூரிஸ்ட் மேப்'பை விலைக்கு வாங்கிக் கொண்டு கூடிய வரை நடந்தே ஒவ்வோர் இடத்தையும் சுற்றிப் பாருங்கள். நடப்பதற்குச் சுகமான சீதோஷ்ண நிலை. அலுப்பே ஏற்படாது. கொலோஸியம், '(colosseum) பியாஸா வெனிஸியா ரோமன் ஃபோரம் இம்பீரியல் ஃபோரம் ஆகியவற்றை ஒரு சுற்றிலும் நீரூற்றுக்களை ஒரு சுற்றிலும், செயிண்ட பீட்டர்ஸ் —வாடிகன் ஆகியவற்றை ஒரு சுற்றிலுமாகப் பார்த்துவிடலாம்'' என்று நான் தங்கியிருந்த ஹோட்டல் வரவேற்புப் பிரிவில் இருந்த இத்தாலிய நண்பர் எனக்கு யோசனை கூறினார்.

அவர் கூறிய யோசனை சரியென்றே எனக்கும் தோன்றியது. பக்கத்துக் கடையில் ரோமாபுரியின் சகல பகுதிகளுக்கும் வழி விவரங்கள் அடங்கிய ஒரு பெரிய வரைபடத்தை வாங்கினேன். தைரியமாக நடந்தே சுற்றிப் பார்க்கலாம் என்ற நம்பிக்கை வந்தது. துணிந்து புறப்பட்டேன்.

முதலில் செயிண்ட் பீட்டர்ஸ் — வாடிகன் இரண்டையும் முடிக்கலாம் என்ற கருத்துடன் கிளம்பி யிருந்தேன். 'டைபர்' ஆற்றின் வலதுபுறக் கரையோரமாகவே சாலையில் நடந்து அங்கு போய்ச் சேர்ந்தேன். வழி காண்பதில் எந்தக் குழப்பமும் ஏற்படவில்லை. நாமே முயன்று இடங்களைத் தேடிக் கண்டுபிடித்துப் பார்க்கிறோம் என்ற திருப்தி வேறு இருந்தது.

மாண்டே மரியோ, ஜியான்னி கோலோ, மலைகளின் அடிவாரத்தில் வாடிகன் நகரம் அமைந்திருக்கிறது. வாடிகன் நகருக்கு இத்தாலியக் குடியரசில் தனி சுயேச்சை ராஜ்ய அந்தஸ்து (small autonomous state within the Italian Republic) உண்டு. தனி வானொலி, தனி ரயில் நிலையம், தனிச் செய்தித் தாள். பிற நாடுகளோடு தனிப்பட்ட தூதரக உறவு வைத்துக் கொள்ளும் உரிமை எல்லாமே வாடிகனுக்கு இருக்கிறது. தனி ராணுவம்



"அப்பா! மாமா டெலிவிஷனைக் கடிக்கிறார்!"
—விவேக்

மட்டும் கிடையாது. அதற்கு அவசியமும் இல்லை. ஸ்விஸ் கார்ட்ஸ் (Swiss Guards) போப்புக்கும், வாடிகன் நகருக்கும் காவல் படையினராக விளங்குகின்றனர். தனித் தபால் தலை, தனி நாணயம்கூட வாடிகன் நகரத்துக்கு உண்டு. அது இத்தாலி முழுவதும் செல்லுபடி ஆகும்.

எப்படித் திருமலையில் வேங்கடாசலபதி கோவிலைச் சுற்றியுள்ள கடைகளில் பெருமாள் படம், நாமக்கட்டி முதலிய பொருள்கள் விற்கப்படுமோ அப்படியே வாடிகன் நகரக் கடைகள் அனைத்திலும் போப் படம், தபால் தலை, வாடிகன் சம்பந்தமான நினைவுப் பொருட்களே விற்கப்படுகின்றன. செயின்ட் பீட்டர் சதுக்கத்துக்குள் நுழைந்ததுமே போப் பாண்டவரின் தனி சாம்ராஜ்யத்துக்குள் நுழைந்துவிட்ட உணர்வை அடைந்து விடுகிறோம். வாடிகன் மியூஸியம், வாடிகன் ஓவியக் காட்சி, வாடிகன் நூலகம், எல்லாம் பார்ப்பதற்குப் பிரமிப்பூட்டுபவை. லியோனார்டா வின்சி, மைக்கேல் ஏஞ்சலோ முதலியோரின் ஓவியங்கள் கண் கொள்ளாக் காட்சியாகும். செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்—வாடிகன் எல்லாவற்றையும் பார்த்துமுடிக்கவே காலையிலிருந்து பிற்பகல் மூன்று மணி வரை ஆகிவிட்டது. அப்படியும் திருப்தி ஏற்படவில்லை. இன்னொரு நாள் காலை மறுபடி வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டுதான் அங்கிருந்து புறப்பட்டேன். செயின்ட் பீட்டர்ஸைப் போலவே மிகப் பெரிய அமைப்புள்ள சாந்த மரியா (Santha Maria) சர்ச்சை அடுத்துப் பார்த்தேன். ஒரு நாள் முடிந்து விட்டது. சாந்த மரியா, ஹோட்டலுக்கு அருகே இருந்ததால் அப்படியே அறைக்குத் திரும்பி விட்டேன்.

அடுத்த நாள் காலை கொலோசியத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்த்தேன். வட்ட வடிவ அமைப்புடையதும், நான்கு மாடங்களை உடையதுமான கொலோஸியத்தின் சிதைவுப் பகுதியே இன்று நம் கண்களுக்குக் காட்சி யளிக்கிறது. அதன் முழு உருவமும் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று கற்பனை செய்து எழுதி வைத்திருக்கிறார்கள். பார்த்தால் மருள வைக்கிறது. கொலோஸியத்தின் இரு புறமும் சில பகைமையான குன்றுகளில் ரோமாபுரியின் பல்வேறு பழங்கால நினைவுச் சின்னங்கள் உள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தின் வரலாற்றுக் காலத்தில் அதன் வீதிகளில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும் சமய வாதிகளும் விவாதங்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று கூறப்படுவதுண்டல்லவா? அதைப் போல் ரோமாபுரியின் வரலாற்றுக் கால அறிஞர்கள் கலந்து பேசும் வீதியாக இருந்த ரோமன் ஃபோரத்தின் (Roman Forum) இடிபாடுகளை இன்றும் பார்க்க முடிகிறது. கொலோஸியத்துக்கு அருகிலேயே உள்ள ஆர்ச் ஆஃப் கான்ஸ்டான்டின் (Arch of constantin), ஜூலியஸ் ஸீஸரால் தொடங்கப் பட்டு அகஸ்டஸ்ஸால் முடிக்கப்பட்ட பாஸிலிகா ஜூலியா, கம்பி டோலியோ குன்றும் மார்க்கஸ் அரேலியஸ் சிலையும் — எல்லாம் பார்ப்பதற்குப் பல மணி நேரங்கள் ஆகின்றன. பார்க்கும்போது நாம் எவ்வெப்போதோ படித்த ரோமாபுரியின் சரித்திரங்களும், பழங் கதைகளும் மனத்தில் புரளுகின்றன.

செனட் ஹவுஸ், கேபிட்டோலின் டவர், ஜூலியஸ் ஸீஸரின் நினைவுச் சிற்பம், கேபிட்டோலின் மியூஸியம் எல்லாம் அருகருகே அமைந்திருக்கின்றன. இப்பகுதியில் பல கட்டிடங்களும், அமைப்புக்களும் புகழ் பெற்ற மைக்கேல் ஏஞ்சலோவால் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. கம்பிடோலியோ குன்றுக்கு ஏறும் படிக்கட்டுக்களும் மேலே பக்கத்துக்கு ஒன்றாக நிற்கும் சலவைக் கல்லாலான பெரிய குதிரை வீரர்கள் சிலையும் இடைரென்று கண்ணெதிரே ஒரு சினிமா காட்சி போல் கம்பீரமாகத் தெரிகின்றன. ஏறக்குறையக் கொலோஸியத்தைப் போன்ற அமைப்புடைய—ஆனால் அவ்வளவு காம்பீர்யமில்லாத மற்றோர் வட்ட வடிவ அரங்கு, தியேட்டர் மார்ஸெலூஸ் (Theatre Marcellus) ஆகும். அதுவும் இப்பகுதியிலேயே அமைந்திருக்கிறது. இதைக் கொலோஸியத்தின் 'மாடல்' என்று கூறுகிறார்கள். இப்பகுதிகளுக்கு நடு மையமாக அமைந்த விக்டர் எம்மானுவேல் நினைவுச் சின்னம் ஒரு சலவைக் கல் கனவு (Marble Dream) என்று சொல்லத்தக்க அளவுக்குக் கவர்ச்சி நிறைந்தது. கொலோசியம் போலவோ, மார்ஸெலூஸ் போலவோ அழியாமல் அப்படியே புத்தம் புதிதாக இருக்கிறது இது. மேற் பக்கம் கட்டிடத்தின் உச்சியில் இரு மருங்கும் புரவிகள் பூட்டிய ரதங்கள் தெரிய அமைக்கப்பட்டுள்ள இந்தச் சலவைக் கல் நினைவுச் சின்னத்தைக் கீழே சாலையில் நின்று நேரம் போவதே தெரியாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம். ரோமாபுரியின் அதி தேவதை (Statue of Rome) சிலை இம்மண்டபத்தின் முகப்பில் ஒரு நிரந்தர ஜோதியோடு நிறுவப்பட்டிருக்கிறது. தேசிய மரியாதைகள் இந்த இடத்திலிருந்துதான் தொடங்கப்படுகின்றன. தேசிய பீடமாக இவ்விடம் விளங்குகிறது.

தியேட்டர் மார்ஸெலூஸுக்குப் பின்னால் பழங்காலம் முதல் ரோமாபுரியின் யூதர்கள் வாழும் பகுதியான 'கெட்டோ' (Ghetto) அமைந்திருக்கிறது. கி. மு. 61-க்கும் 63க்கும் இடைப்பட்ட காலத்தில் ரோமாபுரிக்காரர்கள் ஸிரியாவையும் ஆசியா மைனரையும் வென்றதிலிருந்தே யூதர்களின் எண்ணிக்கை ரோமாபுரியில் பெருகத் தொடங்கியது. இப்பகுதி கலைத்திறன் வல்லுநர்களும், அறிவாளிகளும் நிறைந்த பகுதியாக அந்நாட்



சரி, சரி... இரண்டும் சரியே

பார்லே க்ராக்ஜாக்

பிஸ்கட்டுகள்

அனுபவம் புதுமை ரசித்திடும் கணமே!



everest/547/PP-tm



"காதல் பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது கண்ணே!"

"நல்ல எழுத்தாளர் நீங்க. அதுக்காக இந்த மாதிரி இடத்துக்கா அழைத்து வரணும்."

—விவேக்

களில் விளங்கியது என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள்.

மியூஸியங்களை ஒரு நாள் பார்த்தேன். சலவைக் கல்லில் மனித உடலமைப்பைக் குழைத்துக் குழைத்து வடிப்பதில் இத்தாலியச் சிற்பிகளுக்குத்தான் எத்தனை தேர்ச்சி? ஓவியங்களும் அப்படியே. புகழ் பெற்ற சிற்பிகள், ஓவியர்கள் எல்லோரும் இத்தாலியர்கள்.

"செயிண்ட் - பீட்டர்ஸ் வாடிகன் பகுதி புனித நகரமாதலால் தயவுசெய்து பிறர் மனத்தை இழுக்காத அளவு நாகரிகமாகவும், கௌரவமாகவும் உடை உடுத்து நடமாட வேண்டும்" — என்ற ஓர் அறிவிப்பை என்னால் மறக்கவே முடியாது. அமெரிக்க, ஐரோப்பிய டூரிஸ்டுகள் சிலரை மனத்தில் வைத்துக் கொண்டு இந்த அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. நம்மூரில் கோயில்களுக்கும், மத நிலையங்களுக்கும் வெங்காயச் சருகு சேலை, லோஹிப் — சகிதம் செல்லும் சிலருக்கு நினைவூட்ட ஏற்ற வாசகம் இது என்று நினைத்துக்கொண்டேன்.

ரோமாபுரியில் நான் நிறைவாக இறுதியில் பார்த்தவை சலவைக் கல் சிலைகளுடனும் சிற்ப வேலைப்பாடுகளுடனும் கூடிய அதன் பல்வேறு நீரூற்றுக்கள். தெரு முனைகளில், சந்திகளில், சதுக்கங்களில், மாளிகை முகப்புக்களில் அரசாங்க அலுவலகத் தோட்டங்களில் — பொதுப் பூங்காக்களில் எங்கும் எதிலும் சிலிர்த்துச் சிரிக்கும் குளுமையான நீரூற்றுக்கள் (Fountains) நிறைந்த நகரம் ரோம்.

ஒவ்வொரு நீரூற்றுகத் தேடிப் போய்ச் சிறு குழந்தை மழையில் நனைவதைப் போன்ற ஆசையுடன் பார்த்தேன்.

நீரூற்றுக்களில் எனக்கு மிகவும் பிடித்தது பியாஸா நவோனாவும், 'ட்ரெவி'யும்தான். வாடிகன் நகரில் நுழைந்ததும் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்திலேயே கூட ஒரு புராதனமான நீரூற்று இருக்கிறது. நீரூற்றுக்களின் தோட்டமாக விளங்கும் 'திவோலி' (tivoli) தனியே இருக்கிறது.

திருப்பதியில் வேண்டுதல்; பிரார்த்தனை, ஐதீகங்கள் எல்லாம் எவ்வளவு இருக்கின்றனவோ அதற்கு ஒரு சிறிதும் குறைவில்லாமல் ரோமாபுரியிலும் இருக்கின்றன. 'ட்ரெவி' (Fountain trevi) யில் திரும்பி நின்று கொண்டு பின்புறமாகப் போய்விழும்படி நீரில் காசு விசி எறிந்தால் ரோமாபுரியைத் திரும்பத் திரும்பக் காணும் வாய்ப்பு நேரும் என்ற நம்பிக்கை பரவலாக இருக்கிறது. பத்து நிமிஷங்களுக்கு ஒரு முறை நீரூற்றுத் தொட்டியில் இறங்கி இந்தக் காசுகளைத் திரட்டி எடுக்கவும் விடலைச் சிறுவர் கூட்டம் தயாராக அங்கே சூழ்ந்து நிற்கிறது. காசு சேரச் சேர அவர்களுக்குக் கொண்டாட்டம். நம் நாட்டில் இராமேசுவரத்தில் பாம்பன் பாலத்திலிருந்து சமுத்திரத்தில் காசு எறிபவர்களையும், கோதாவரி, கங்கை நதிகளில் காசு எறிபவர்களையும் நினைத்துக் கொண்டேன். ஐதீகங்களே இல்லாத நாடு உலகெங்கும் இல்லை போலும்.

விநோதமான கலா ரசனையைப் போலவே விநோதமான வேலைநிறுத்தங்களும் அங்கு உண்டு என்பதை அறிந்தேன். நூற்றுக் கணக்கானவர்கள் ஏதோ ஒரு கோரிக்கைக்காகத் திடீரென்று சட்டை, பேண்ட், கோட் பனியன் ஜட்டி எல்லாவற்றையும் களைந்துவிட்டுப் பிறந்த மேனியாகப் போலீஸ் பாதுகாப்புடன் சென்ற ஊர்வலம் ஒன்றையும் நான் பார்த்தேன். வாடிகனில் பார்த்த அறிவிப்பு, வாடிகன் நகருக்கு மட்டும்தான் பொருந்துமோ என்ற சந்தேகமும் வந்தது.

நமது உணவைப் போலவே — கார சாரமாகவே (spicy) உண்பதில் இத்தாலியர்களும் பிரியம் வைத்திருக்கிறார்கள். 'பீஸ்ஸா' என்ற இத்தாலியப் பாணி அடையையும் 'ஸ்பகட்டி' என்ற சிறப்புப் பண்டத்தையும் மிகவும் சுவைத்துச் சாப்பிட முடிந்தது.

இத்தாலிய ஆண்களின் கம்பீரமாக, உயரமாக வளர்ந்த தோற்றமும், பெண்களின் வனப்பும் மறக்க முடியாது. குள்ள உருவம், எலும்பும் தோலுமான சோனி உருவம் என்பவற்றைச் சிலைகள், சிற்பங்கள், ஓவியங்களில் கூட இத்தாலியில் பார்க்க முடியவில்லை.

'ஆயிரம் முறை பார்த்த பின்னும் ரோமாபுரியில் மேலும் பார்ப்பதற்கு ஏதாவது மீதமிருக்கத்தான் செய்யும்' என்பார்கள்.

ரோமிலிருந்து நான் கிரீஸுக்கும், மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும் புறப்படுமுன் ட்ரெவி நீரூற்றில் கையில் மீதமிருந்த காசுகளை எல்லாம் வீசி எறிந்ததற்குக் காரணமே பார்க்காமல் விட்டிருக்கிறரோமாபுரியின் அழகுகளையெல்லாம் மீண்டும் என்றாவது திரும்பிப் போய்ப் பார்த்துவிடலாம் என்ற நம்பிக்கைதான்.

அந்நீரூற்றில் ஒரு காசு போட்டாலே, திரும்ப ரோமாபுரிக்குப் போக வாய்க்கும் என்றால் நான் போட்டிருக்கிற பல காசுகளுக்கு எவ்வளவு பலன் இருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால் ஒன்று! அத்தனை தடவை போய் விட்டு வந்த பின்னும் ரோமில் நானோ நீங்களோ அப்புறமும் பார்க்க ஏதாவது மீதமிருக்கத்தான் செய்யும்.

ஏனெனில் ரோமாபுரி என்பது நேற்றைய— இன்றைய — நாளைய நகரம் மட்டுமல்ல. அது ஒரு நித்திய வசீகர நிரந்தர நகரம்.


பண்டிகை வருகுது!
விலைகள் குறையுது!
10%
சிறப்புச் சலுகை
செப்டம்பர். 30 முதல்
அக்டோபர் 21 வரை
அளிக்கிறோம்.
எல்லா பட்டு, பருத்தி,
ரெடிமேட் ரகங்களுக்கு.
நாட்டின் பல பாகங்களி
லிருந்து தருவிக்கப்
பட்டவை.
கண்கவர்பவை.
ஹேண்ட்லூம்
ஹவுஸ்
9, ரத்தன் பஜார்
சென்னை 600 003
ADWAVE/HH/487
ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு

பதஞ்சலி யோக சாஸ்திரத்தில் 'சித்திகள்' என்று ஒரு பகுதி இருக்கிறது. எட்டுவிதமாகப் பாகுபடுத்தப்பட்டுள்ள சித்திகள் ஒருவருக்குப் பிறவித் திறனாக அமைவதும் உண்டு. ஒரு சில மருந்து மூலிகைகளை உட்கொள்ளுவதாலோ அல்லது குறிப்பிட்ட யோக நெறிகளில் தேர்ச்சியாலோ சித்திகளை அடையலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் முடிவுரையாகச் சொல்லப்பட்டிருப்பது யாதெனின் இத்தகைய சித்திகள் ஓரளவு உலகாயதப் புகழ், செல்வம் பெறப் பயன்பட்ட போதிலும், ஆன்மீகத் துறையில் உயர் நிலை எய்த பொதுவாகத் தடையாக அமைவன என்பதேயாம். இது பண்டை மாமுனிவர்களும், யோக சித்தர்களும் அனுபவ வாயிலாகக் கூறும் உண்மை என்றே கொள்ள வேண்டும். ஆதிசங்கரர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், அரவிந்தர், ரமண மஹரிஷி, ராமலிங்க அடிகளார் போன்ற மகான்கள் யோக சித்திகளும், அருட் சக்திகளும் கைவரப் பெற்றிருந்தும் அவற்றை வெளிப்படுத்தி அற்புதங்கள் நிகழ்த்த விரும்பினார்கள் இல்லை. இரும்பைப் பொன்னாக்கும் ரசவாத சாஸ்திரம் என்பது


□ ஸ்ரீ சத்ய சாயி பாபா போன்றோர் அற்புதங்களை நிகழ்த்தி வருவது உண்மையே. காலஞ்சென்ற திரு கே. எம். முன்ஷி அவர்கள் கூட ஸ்ரீ பாபாவின் அற்புதங்களில் நம்பிக்கையற்றவராகவே இருந்தார். ஆனால், பின்னர் ஒருமுறை, ஸ்ரீ சாயி பாபா அவரது கையைப் பற்றியவுடன், வெகு காலமாக அவரை வாட்டி வந்த, எந்தச் சிகிச்சைக்கும் குணமாகாத கை நடுக்கம் உடனே மறைந்து விட்டதாம். இந் நிகழ்ச்சி பற்றி திரு முன்ஷி தமது 'பவன்ஸ் ஜர்னல்' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். இறைவனிடமும் மதத்திலும் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிற விஞ்ஞான யுகத்தில், இம்மாதிரி அற்புதங்கள் நிகழ்த்துவதன் மூலமே பாமர மக்களுக்குக் கடவுள் நம்பிக்கையை உணர்த்த முடிகிறது. மெய் ஞானிகளுக்கும் வேதாந்திகளுக்கும் இம்மாதிரியான அற்புதங்கள் தேவையில்லைதான். பாமர மக்களுக்குத் தேவை. ஸ்ரீ பாபா போன்றவர்கள் அற்புதங்களை நிகழ்த்துவது பணம் பறிப்பதற்காகவோ, சுயநலத்துக்காகவோ அல்ல. இறை அன்பையும், ஒழுக்க நெறியையும் பக்தியையுமே இவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். மேலும், நமது சக்திக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் நடை

அற்புதங்கள் பற்றி அபிப்பிராயங்கள்!...



விவாத மேடை

உண்மைதானா என்பதை ஒரு முறை யோக சக்தி மூலம் கண்டறிய விழைந்தனர், ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் அவர் தம் குரு தோத்தாபுரியும். சாஸ்திரம் உண்மைதான் என்று கண்கூடாக உணர்ந்த போதிலும் இறைவன் வகுத்த இயற்கையின் நடைமுறை விதிகளுக்கு ஒவ்வாதென விடுத்தனர். மேலும் ஒரு சமயம் பரமஹம்ஸர் தாம் பெற்ற அஷ்டமாசித்திகளை அளிக்க விரும்பியபோது விவேகானந்தர் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார் என்று அறிகிறோம். மாறி வரும் பிறவிப் பிணியைப் போக்க வேண்டுமா? அல்லது என்றோ மடியும் உடலின் நோயைத் தேற்ற வேண்டுமா என்பதே கேள்வி. மத யானையினும் வலிமையுடைய மன யானையை விவேகம் எனும் அங்குசத்தால் அடக்கிக் காட்டினர் நம் நாட்டு மெய்ஞ்ஞானிகள்.



- ஏ. சம்பந்தமூர்த்தி, மஹாராஷ்டிரா

பெற்று வருகின்றன. ரஷ்யாவில் கூட, வெறுங் கைகளால் நோயைக் குணப்படுத்துவது பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன. சூட்சும சரீரத்தையும் போட்டோ பிடித்திருக்கிறார்கள். இது பற்றி 'Psychic discoveries behind the Iron Curtain' என்ற நூலில் விரிவாகக் காணலாம்.


எனவே அற்புதங்கள் அனைத்தும் வெறும் புரட்டு என்று ஒதுக்கிவிடலாகாது.

சென்னை-5 எஸ். சம்பத்குமார்

இயேசுபிரான் அலைகள் மீது நடந்தவர்; அவர் இட்டியவுடன் புயல் காற்று நின்று விட்டது; கண்ணில்லாதவனுக்குக் கண்ணைக் கொடுத்தவர்; வியாதியஸ்தர்களை சொஸ்தப் படுத்தியவர்; பேய் பிசாசுகளை விரட்டியவர். தம் பாதம் பட்டு ஒரு கல்லை அழகிய பெண்

படங்கள்: பகவான், பன்றிமலை சுவாமிகள், கணபதி சச்சிதானந்தர், காயத்திரி சுவாமிகள், பாபா.

பழங் கதையா ?



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு செய்திப் பத்திரிகை ஆசிரியர் ஒரு பிரபல வான சாஸ்திரியிடம் 'செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் உள்ளனவா' என்பது பற்றி ஐந்நூறு வார்த்தைகள் கொண்ட கட்டுரை ஒன்றை எழுதித்தரக் கேட்டார். அதற்கு அந்த விஞ்ஞானி 'யாருக்கும் தெரியாது' என்பதை இருநூற்றைம்பது தடவை எழுது அனுப்பினாராம்!

சண்டே ஸ்டாண்டர்டு பாபு

னுக்கியவர் இராமபிரான். நாராயணனின் அவதாரமான இராமன் மனித உருவில் செய்த அற்புதங்களில் இது ஒன்று.

என்றோ சமாதியான மந்த்ராலய மகான் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் சமாதியிலிருந்து ஒரு நாள் திடீரென்று எழுந்து வந்து தாமஸ் மன்ரோ என்ற ஆங்கிலேய கலெக்டரிடம் பேசினார். அற்புதங்களைக் கண்டித்த ராமகிருஷ்ண பரமஹம்ஸர்கூடத் தம் சீடன் நரேந்திரன் கடவுளைக் காட்டு என்று வேண்ட, தம் கையை அவன் தலையில் வைத்துத் தம் சீடனை விவரிக்க முடியாத அனுபவம் பெறச் செய்தது அதிசயமே. பிரிட்டிஷ் ஆட்சியில் தம்மைப் பிடிக்க வந்த போலீசார் கண்களுக்குப் பல உருவம் உள்ளவராகக் காண்பித்தவர் மகரிஷி அரவிந்தர். தம் பார்வையாலேயே தம்மைப் பார்ப்பவர்களுக்குத் தெம்பும் புத்துணர்ச்சியும் ஊட்டியவர் ரமண மகரிஷி. இறந்தவர்களைப் பிழைக்க வைத்த வள்ளலார் அருட்பெருஞ்சோதியுடன் இரண்டறக் கலந்தது அற்புதமேயாகும். தனியாகக் துண்டிக்கப்பட்ட கையைத் தம் உடலுடன் வைத்தவுடன் ஒட்டிக் கொண்டு விட்டது - இந்த அற்புதத்தை நடத்தியவர் சதாசிவ பிரம்மேந்திரர்.

இப்படி மகிமைகள் பல செய்த பல மகான்கள் தோன்றிய இந்நாட்டில் ஸ்ரீ சத்ய சாயிபாபா, நீலகண்ட தாதாஜி, பன்றிமலை சுவாமிகள், காயத்ரி சுவாமிகள், கணபதி சச்சிதானந்த சுவாமிகள் போன்றோர் அற்புதங்கள் செய்தவண்ணம் இருக்கின்றனர். தீராத வியாதிகூட இவர்களால் தீருகிறது என்றும் கேள்விப்படுகிறோம்.

நமது அறிவுக்குச் சில விஷயங்கள் எட்டுவதில்லை என்ற காரணத்தால் அமானுஷ்ய நிகழ்ச்சிகள் நடக்க முடியாது என்று சொல்லுவதற்கில்லை. என் கண்ணால் சில மகான்கள் திருநீறு வரவழைப்பதையும், கடவுள் விக்கிரகங்கள் வரவழைப்பதையும் பார்த்திருக்கிறேன். இது சாதாரண மாஜிக் அல்ல.

கிராமப்புறங்களில் மாரியம்மனின் திருவிழாக்களில் கொழுந்துவிட்டு எரியும் தீயில் நடந்து செல்வதையும், உடல் முழுதும் ஊசியைக் குத்திக் கொண்ட பக்தர்கள் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் இருப்பதும் அற்புதங்கள் நடக்கின்றன என்று அறுதியிட்டுக் கூறுகின்றன.

நம் ஊரிலேயே சென்ற ஆண்டு கல்லூரி மாணவர் ஒருவர் பேசும் சக்தியைப் பதினேந்து நாட்கள் இழந்துவிட்டுப் பின்பு பெற்றதை நான் அற்புதமாகவே எண்ணுகிறேன்.

யூரி கெல்லர் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த யுவன். எட்ட இருக்கும் இவன் பார்வை பட்டு நின்று போன கடிகாரங்கள் ஓடுகின்றன; உடைந்த கரண்டிகள் ஒன்று சேருகின்றன; அல்லது ஸ்பூன்கள் வளைந்து விடுகின்றன.

நம்பிக்கை இல்லாதவர்கள் எக்காலத்திலும் இருப்பார்கள். எத்தனையோ பேர் கிறிஸ்து உயிர் மீண்டு வந்ததை நம்பினர்கள். ஆனால் தாமஸ் என்பவர் சந்தேகப்பட்டு நம்ப மறுத்து விட்டார். இதனால் கிறிஸ்துவுக்கு எந்தவித நஷ்டமும் இல்லை.

ஜி. கே. செஸ்டர்டன் என்பவர் அற்புதங்களைப் பற்றி உண்மையொன்றைச் சொன்னார்: ''அற்புதங்கள் எப்படி நடக்கின்றன என்று சொல்ல முடியாது; ஆனால் அவை நடந்தே தீருகின்றன.''

- ஆர். சாயிநாத், சென்னை

☐ என்னைப் பொறுத்த வரைக்கும், 'பாபாவின்' அற்புதங்கள் யாவும் கண்ணனின் திருவிளையாடலாகத்தான் தெரிகிறது. முன்னொரு காலத்தில் மனிதர்களாய்ப் புவியில் அவதாரம் செய்து காவியத்திலும், நம் உள்ளத்திலும் நிலைபெற்று நிற்கும் ஆயர்பாடிக் கண்ணனும், பிட்டுக்கு மண் சுமந்த சொக்கநாதனும் புரிந்த திருவிளையாடல்களை நாம் போற்றித் துதிக்கவில்லையா?

இது ஒவ்வொருவர் நம்பிக்கையைப் பொறுத்த விஷயம்.

தூங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியை தவத்தின் மூலம் 'பரசம்புவுடன்' ஒன்றுகலக்கச் செய்யும் போது அதைச் செய்யும் 'சித்தர்கள்' கடவுளாகவே கருதப்படுவர். ஏனெனில் அந்த நிலையில் அவர்கள் என்ன சொன்னாலும் என்ன நினைத்தாலும் நடக்கும்.

அற்புதங்களால் மக்களைக் கவர்கிறார்கள் என்று சொல்கிறார்களே! அதனால் 'பக்தி மார்க்கம்'தான் பரவுகிறதே ஒழிய வேறு என்ன இங்கு ஏற்படுகிறது?

நம்பிக்கையற்றவர்கள் அவர்களை வணங்காவிட்டால் போகட்டும். அவர்கள் செய்யும் அற்புதங்களைக் 'கண்கட்டு வித்தை' என்றும், 'மெஸ்மரிஸம்' என்றும் சொல்லி நம்பிக்கை கொண்டவர்கள் மனத்தைப் புண்படுத்தாமலாவது இருக்கலாமில்லையா?

அரவங்காடு வெ. பாரிரதி

சரீரத்தில் மூலாதாரத்திலிருந்து ஸஹஸ்ராரம் வரையில் குண்டலினி சக்தி மேல் நோக்கிப் பாயும்போது பற்பல அற்புதங்கள் தானாகவே நிகழ்கின்றன.

உதாரணமாகக் குண்டலினி மூலாதாரத்தில் நிலைக்கும் போது பிருதிவி தத்துவம் மகான்களுக்கு அடிபணிகிறது. மணலில் இருந்தும் பழங்களிலிருந்தும் பற்பல அற்புதங்கள் நிகழ்கின்றன. விக்கிரகங்களும் வலம்புரிச் சங்குகளும் பிருதிவி தத்துவத்திலிருந்து கிளம்புகின்றன. மூலாதார மண்டபத்துக்கு மேல் உள்ள ஸ்வாதிஷ்டான மாளிகையில் சக்ர நாடி நுழைந்து சஞ்சரிக்கும்போது அக்கினித் தத்துவம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறது. நெருப்பிலே குளிக்க நேர்ந்தாலும்

அக்கினி அவர்களைத் தகிப்பதில்லை. அதற்கு மேல் மணிபூரகம் என்ற அரண்மனையைக் குண்டலினி ஆக்கிரமிக்கும் பொழுது ஜல தத்துவம் அவர்களைச் சரண் அடைகிறது. நீரில் மிதப்பார்கள். வெள்ளத்தில் நடப்பார்கள். அதற்கு அப்பால் அநாகதம் என்ற சக்கரத்தில் நாடி தங்கும்போது வாயுத் தத்துவம் அவர்களைத் தழுவுகின்றது. மூச்சை அடக்கி மண்ணின் அடியிலும் ஜலத்தின் அடியிலும் பல காலம் இருப்பார்கள். அதற்கு மேல் இருக்கும் விசுத்தி மண்டபம் குண்டலினிக்கு வரவேற்பு தந்து நாடி லலிதமாகச் செல்லும் போது ஆகாசத் தத்துவம் அவர்களை அணைக்கிறது. க்ஷண நேரத்தில் ஆகாச மார்க்கமாகப் பல ஆயிரம் மைல்கள் கடந்து யதாஸ்தானத்துக்குத் திரும்புவார்கள். இந்த மண்டபத்துக்கு மேல் ஆக்ஞா சக்கரம் இருக்கிறது. இதில் குண்டலினி மின்னல் நிறத்தில் அடையும் போது சிங்கம், யானை, புலி போன்ற துஷ்ட மிருகங்கள் அவர்களைக் கண்டவுடன் சப்தநாடிகளும் ஒடுங்கி, அடங்கிவிடும். நினைத்ததை நினைத்த மாத்திரத்திலேயே செயற்படுத்தும் வல்லமை உள்ளவர்களாக இருப்பார்கள். இங்கு மனோதத்துவம் பிரமையில் கலந்து ஒன்றி நிற்கும். இந்த ஆறு மண்டபங்களையும் தாண்டி ஏழாவது சுதா சாகரப் பிரதேசத்தைப் பிராகாரமாக அமைத்துக் கொண்டு எழும்பி இருக்கும் மகாமண்டபத்தில் குண்டலினி சக்தி அடையும் போது மாயா தத்துவம் இவர்களுக்கு அடிமையாய்க் கைகூப்பி நிற்கிறது. உலகத்திலுள்ள ஆனந்தங்களுக்கெல்லாம் மேலான பேரின்பத்தில் அமிழ்ந்து திளைக்கிறார்கள். சுக்குநூறாக ஒடிந்து போன மனத்திலும் ஆழ்ந்த சமுத்திரத்தின் அமைதியையும் சாந்தியையும் அருள்வர் இந்த மஹா யோகிகளான தபஸ்விகள். ஸ்ரீ காஞ்சி முனிவர் இந்த ஆத்மாவுக்குச் சாந்தியை அருளும் அற்புதத்துக்கு நிகராக எந்த அற்புதம் இருக்கிறது !

என். சீநிவாசன், சென்னை–17

ஸ்ரீ சத்ய சாயி பாபாவைப் பற்றிப் போன மாதம் ஒரு நாள் டாக்டரிடம் பேசிக் கொண்டிருந்தேன். தீர்த்து வைக்க முடியாத, வெகு நாட்பட்ட நோய்களை அவர் குணப்படுத்தும் விதத்தைப் பற்றி விளக்கம் கேட்டேன். டாக்டர் சொன்னதாவது:

''எனக்குத் தெரியாது. உண்மையாகவும் இருக்கலாம், மிகையாகவும் இருக்கலாம். ஆனால் ஒன்று, உங்களையும் என்னையும் விட அவர் நிச்சயமாகப் பெரிய மகான். அதில் சந்தேகமே இல்லை. 'எல்லாம் பொய் - பித்தலாட்டம்' என்ற நோக்கில் அணுகுவதை விட 'ஏதோ அற்புதம் செய்கிறார்; நம்புகிறார்கள்' என்ற கோணத்தில் பார்த்து, அதோடு விட்டுவிடுவது நல்லது. வெறும் நம்பிக்கையே உடல், மன நோயைக் குணப்படுத்திவிடும் என்பது என் அனுபவம்.''

டாக்டரின் வார்த்தைகள் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அதன் பின் Howard Murphet எழுதிய புத்தகம் ஒன்றைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. எல்லாருடைய வியாதியையும் ஸ்ரீ பாபா குணப்படுத்தி விடுவது இல்லையாம். உதாரணமாக ஸ்ரீ ஹனுமந்த ராவின் குழந்தை நாலு வயதாயிருக்கும்போது 'போலியோ'வால் பாதிக்கப்பட்டு மரித்தது - ஸ்ரீ சத்ய சாயி பாபாவிடம் காண்பித்தும்கூட. ஆனால் என்ன விந்தை! ஆரம்பத்தில் ஸ்ரீ ராவ் மனம் ஒடிந்து போனாலும் பிற்காலத்தில் தம் மகன் பெயரால் (சகவர பிரசாத் தத்தாத்ரேய)



ஐயா, தெரியாதய்யா!

- ஒட்டகத்தின் முதுகெலும்பு நேர் கோடு போல நேராக இருக்கும்!
- கோழிக் குஞ்சுக்கு எட்டாயிரம் இறகுகள் உண்டு. (சந்தேகப்படுபவர்கள் எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்.)
- மண் புழுவுக்கு 1200 கால்கள் உண்டு.
- மனிதர்களை விடத் தவளை அதிக தூரம் தாண்டும்.
- முட்டைக்குள்ளிருந்து வெளிவரும் முதலை, அப்போதே அந்த முட்டையை விட மூணு மடங்கு பெரிதாக இருக்கும்.
- நாய்களுக்குப் பாதங்களில் மட்டுமே வியர்க்கும்!
- பாம்புக்குக் காது அதன் நாக்கில் இருக்கிறது!
- பறவைகளுக்கு ருசி வாசனை தெரியாது!

-உமன்ஸ் ஈரா - பாபு

அடையாற்றில் ஒரு 'கிளினிக்' நிறுவினார். இந்த நிகழ்ச்சியைப் படித்தபோது உண்மையிலேயே நான் சிலிர்த்துப் போனேன்.

நம் மூளைக்கு அப்பாற்பட்டது எவ்வளவோ இருக்கிறது.

சென்னை-90 ஸ்ரீமதி லலிதா லக்ஷ்மணன்

சிவப்புத் திரவத்தைப் பச்சையாக மாற்றிய ரசாயன விஞ்ஞானியைப் பதினெட்டாம் நூற்றாண்டில் மந்திரவாதி என்று நம்பி மக்கள் வியந்தனர்; பயந்தனர். சில விஞ்ஞானிகளைக் கொலைத் தண்டனைக்குக்கூட உள்ளாக்கினர். இயற்கையின் விதிகள் அனைத்தும் மனிதனுக்குப் புலனாகும் நாளில் 'அற்புதம்' என்ற சொல்லே இருக்காது. ஆனால் இது சாத்தியமாகுமா, தெரியவில்லை !

சில பகுத்தறிவாளர்கள் அற்புதங்கள் யாவும் விஞ்ஞான தர்க்க ரீதியில் நிரூபிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவற்றை நம்ப முடியும் என்று சவால் விடுகிறார்கள். எதையும் விஞ்ஞான ரீதியிலோ, தர்க்க ரீதியிலோ விவாதிக்க முதல் தேவை, அதற்குண்டான அடிப்படைத் தத்துவங்களின் முழு அறிவு. இந்தத் தத்துவங்களைப் புரிந்து கொள்ள நம் அறிவு போதுமானதா என்பதைச் சிந்திக்கப் பலர் தவறிவிடுகிறார்கள். பல கோடி செலவழித்து ஆராய்ச்சிகள் செய்து இன்று மனிதன் கற்றது கை மண்ணளவுதான். இயற்கையின் நியதிகளில் இன்னும் மனிதன் அறிய வேண்டியவை எத்தனையோ !

அற்புதங்கள் புரிவோரை அந்த ஒரே காரணம் பற்றிக் கொண்டாடுவதும் தவறு; இடித்துரைப்பதும் தவறே.

எப்படி மனிதர்களை ஈர்த்தாலும் இறுதியில் இவர்களது அறிவுரைகளைக் கேட்டு மக்கள் நல்வழிப்படுவார்களேயாகில் அது ஒப்பற்ற சமூக சேவையாகும்.

அற்புதங்கள் புரிவோரது நோக்கம் முக்கியமே தவிர, அவர்களது அற்புதங்கள் அல்ல!

- ருக்மிணி ஜெயராமன், பெங்களூர்

ம.பொ.சி.

சிலம்புச் செல்வம்



புகாரிலே சித்ரா பௌர்ணமி வரை இந்திர விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை யொட்டிப் பொதுமக்கள் காண மாதவி நடனமாடுகிறாள்.

நடனக் கலை வேத்தியல் பொதுவியல் என இரு வகையாகப் பிரித்துக் கூறப்படுகிறது. வேந்தன் அவையிலே ஆடுவது வேத்தியல். பொதுமக்கள் அவையிலே ஆடுவது பொதுவியல். சோழ வேந்தன் அவையிலே மாதவி ஆடியது வேத்தியல் நடனம். இந்திர விழாவிலே பொதுமக்கள் காண ஆடியது பொதுவியல் நடனம். இந்த நடனத்தின் போது கோவலனும் அவையில் இருந்தான். பொதுமக்களிலே கலை உணர்வற்ற சிலர் காம உணர்வுடன் மாதவியைக் காண்பதையும், அவளுடைய அழகை வருணித்துப் பேசுவதையும் கோவலன் கண்டான், கேட்டான். இதனால், வெறுப்புற்று மாதவியின்பால் ஊடல் கொண்டான். தான் அருகிலிருந்தும் கண் படைத்தவனுக்கெல்லாம் மாதவி விருந்தாகி விட்டதற்கு அவளது பரத்தைதன்மைதான் காரணம் என்பதை உணர்கின்றான். தான் அருகில் இல்லாதபோதும் பிற ஆடவர் கண்களுக்கு விருந்தாகாமல் மனையில் மறைந்து வாழும் கண்ணகியின் கற்பு நெறி அவனது நினைவுக்கு வருகிறது. மாதவியினிடம் வெறுப்பும், கண்ணகியின்பால் விருப்பும் கொண்டான்.

இந்திர விழா நடனம் முடிந்ததும் மாதவியும் கோவலனும் வீடு திரும்புகின்றனர். கோவலன் ஊடல் கொண்டிருப்பதை மாதவி உணர்ந்து விடுகிறாள். ஆனால், அதற்கான காரணத்தை அவள் உணரவில்லை. அவனது ஊடல் தீர்க்கும் பொருட்டு, கடல் விளையாட்டுக் காணக் கோவலனைக் காவிரியும் கடலும் கலக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்கிறாள். தோழியான வயந்த மாலையும் உடன் செல்கிறாள். தன் தலைவியான மாதவியிடம் அவள் தலைவன் ஊடல் கொண்டிருப்பது தோழியான வயந்தமாலைக்கு வருத்தத்தைத் தந்தது. அந்த வருத்தத்துடன் தன் கையில் யாழைச் சுமந்து கொண்டு, மாதவியையும் கோவலனையும் பின்பற்றிக் கடற்கரைக்குச் சென்றாள்.

வருந்தி நின்ற வயந்தமாலையின் கையிலிருந்து யாழை வாங்கினாள் மாதவி. அதனை மீட்டு, பண் சேர்த்து, பின்னர் அந்த யாழைக் கோவலன் கையில் கொடுத்து, ''ஏவல்! நின் பணி யாது?'' என்று கேட்டு, தான் பாட வேண்டியது இன்னதென்பதைப் பாடிக் காட்டுமாறு கோவலனை வேண்டினாள். அவனும் யாழைக் கையில் வாங்கிப் பாடத் தொடங்கினான்.

கோவலனை யாழிசைத்துப் பாட வைத்து விட்டால், அவன் தன்பால் கொண்ட ஊடல் போய்விடும் என்று மாதவி நம்பினாள். அதற்கான தந்திரமாகவே, தான் பாட வேண்டியது இன்னதென்பதைப் பாடிக் காட்டுமாறு அவனை வேண்டினாள். அவன் பாடத் தொடங்கியதும், தன் தந்திரம் பலித்து விட்டதென்று மகிழ்ந்தாள். இதனை உணர்த்துவது போல, ''மாதவி தன் மன மகிழ வாசிக்கத் தொடங்குவன்'' என்கிறார் இளங்கோ.

வரிப் பாட்டை இருவகைப் படுத்துகிறார் இளங்கோ. ஒன்று, 'ஆற்று வரி;' இன்னொன்று 'கானல் வரி'.

கோவலனும் மாதவியும் காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்திலே அமர்ந்திருக்கின்றனர். அதனால், முதலில் காவிரியைப் பார்த்து ஆற்று வரியும், பின்னர் கடலைப் பார்த்துக் கானல் வரியும் பாடுகிறான் கோவலன். ஆற்று வரி மூன்று செய்யுளோடு முடிகின்றது. அந்தச் செய்யுட்களைப் பார்ப்போம்:

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி, செங்கோல் — அது ஓச்சி,
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய்; வாழி, காவேரி!

கங்கை—தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல், கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி, காவேரி!

மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அது ஓச்சி
கன்னி — தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய்; வாழி, காவேரி!

கன்னி — தன்னைப் புணர்ந்தாலும்,
புலவா தொழிதல், கயற் கண்ணாய்!
மன்னும் மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன்; வாழி, காவேரி!

உழவர் ஓதை, மதகு ஓதை,
உடைநீர் ஓதை, தண்பதங்கொள்
விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப,
நடந்தாய்; வாழி, காவேரி!

விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம் வாய் காவா
மழவர் ஓதை வளவன் — தன்
வளனே; வாழி, காவேரி!

ஆற்று வரிப் பாடல்களிலே காவிரியாற்றின் சிறப்போடு காவிரி நாடாளும் சோழ மன்னனின் செங்கோன்மையும் சேர்த்துப் புகழ்கிறான் கோவலன். (தொடரும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.


ஆடையில்
பெண்மையின்
இழையோடும் போது
பெண்மைப் பேரழகு
புன்னகை புரியும்!
நிச்சயமாக, மஃபத்லால் க்ரூப்
அளிப்பவை நேர்த்தியான
துணிமணிகள்தான்!
MAFATLAL GROUP

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

ஆம்கோ செய்தி!

எங்களுடைய ஏற்றுமதி இப்போது ரூ.5,40,00,000 ஐ தாண்டிவிட்டது

இதுவே எங்களது அந்நிய செலாவணியின் இருப்பு நிலை

ஏற்றுமதியினால் ஈட்டிய அந்நிய செலாவணி	: ரூ.5,40,00,000
ஈயம் மற்றும் ஆன்டிமனி உலோகத்தின் உடைபட்ட மீட்பினால் சேமித்த அந்நிய செலாவணி	: ரூ.2,15,00,000
	ரூ.7,55,00,000
அதே காலத்தில் இறக்குமதியின் மதிப்பு (வரையறுக்கப்பட்ட வகைகளை உள்ளிட்டு)	: ரூ.3,93,00,000
டிவிடெண்டுகள், தொழில்நுட்பக் கட்டணம், உரிமைத் தொகை முதலியவை வாயிலாக அந்நியச் செலாவணி செலவு	: —
நிகர அந்நியச் செலாவணி வரவு	: ரூ.3,62,00,000



ஆம்கோ பாட்டரீஸ் லிட்.,

இண்டர்நேஷனல் மார்க்கெட்டிங் டிவிஷன்
பெங்களூர்

இந்தியாவிலிருந்து தொழில்துறை பாட்டரிகளை மிக அதிகமாக ஏற்றுமதி செய்பவர்கள்

நம் தேசிய முயற்சிகளில், ஆம்கோ தான் செய்யும் எளிய சேவைக்காக பெருமை கொள்கிறது. நூற்றுக்கு நூறு இந்தியக் கம்பெனி என்ற முறையில், உலக பாட்டரி மார்க்கெட்டுகளில் தனக்கென தன்னிகரற்ற ஒரு சிறந்த இடத்தை ஸ்தாபித்து வரும் எங்களுடைய இந்தியப் ப்ராண்ட் 'ஆம்கோ'வைப் பற்றி நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

நாட்டின் மறுமலர்ச்சிக்காக, மதிப்பிற்குரிய பிரதம மந்திரியின் தொலை நோக்குடன் கூடிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, வெளிநாட்டு செலாவணி ஈட்டும் வாய்ப்புகளை அதிகப்படுத்துவதில் இணையில்லா தரத்தைக் காப்பதன் மூலம் நாங்கள் நாட்டுப்பணியில் எங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

MAC(B)-AM-76-2 TAM